# "தொண்டியின் வரலாறு

# மற்றும்

# நாட்டுப்புற வளங்களும், இலக்கிய வளங்களும்"

**(தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கான குறுந்திட்ட ஆய்வுப் பணி கருதி அளிக்கப்பெறும் ஆய்வுத்திட்டம்)**

**(D.O.R.C. No: 756/2016A Date: 27.3.2017)**

**ஆய்வுத் திட்டம் அளிப்பவர்**

முனைவர் **மு.பழனியப்பன்**

இணைப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவாடானை

**தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்**

**சென்னை**

முனைவர் **மு.பழனியப்பன்**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

திருவாடானை. 623407

இராமநாதபுர மாவட்டம்

## சான்றிதழ்

**“தொண்டியின் வரலாறு மற்றும் நாட்டுப்புற வளங்களும் இலக்கிய வளங்களும்”** என்னும் தலைப்பில் செய்துள்ள இவ்வாய்வுத்திட்டம் என் சொந்த முயற்சியால் உருவானதே என்றும் இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இவ்வாய்வுத்திட்ட அறிக்கை அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

ஆய்வுத்திட்டம் அளிப்பவர்

நாள்

இடம்: திருவாடானை

## நன்றியுரை

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் நிதியுதவியுடன் **"தொண்டியின் வரலாறு மற்றும் நாட்டுப்புற வளங்கள், இலக்கிய வளங்கள்"** என்ற தலைப்பில் இவ்வாய்வுத்திட்டத்தினைச் செய்வதற்கு அனுமதியளித்து, நிதியுதவிய தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தினருக்கும்

இவ்வாய்வுத்திட்டத்தினைச் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எம் கல்லூரியின் முதல்வர் முனைவர் எம். சுப்பிரமணி அவர்களுக்கும், ஆய்வுத்திட்டம் நடைபெற பல வகைகளிலும் உதவிய நிதியாளர் திரு பிரான்சிஸ் உ்ள்ளிட்ட அலுவலகத்தாருக்கும்.

என் உடன் பணியாற்றும் அனைத்துத் துறை ஆசிரியப் பெருமக்களுக்கும், தகவல் சேகரிப்பில் உதவிய திரு. இராமமூர்த்தி அவர்களுக்கும், செல்வி காயத்திரி (புதுக்குடி), திரு. கோபி (தொண்டி) ஆகியோருக்கும்,

நூல்கள் அளித்து உதவிய நூலகத்தாருக்கும், கணினி அச்சாக்க முயற்சியில் உதவிய மதுரை லேசர் பாலா அவர்களுக்கும்

என் இனிய நன்றிகள்.

நன்றியுடன்

மு.பழனியப்பன்

# பொருளடக்கம்

| | பக்க எண் |
|---|---|
| முன்னுரை | 01 |
| இயல்.1. தொண்டியின் வரலாறு | 06 |
| இயல்.2. தொண்டியின் நாட்டுப்புற வளங்கள் | 54 |
| இயல்.3 தொண்டியின் இலக்கிய வளங்கள் | 115 |
| முடிவுகள் | 152 |
| பின்னிணைப்புகள் | |
| துணைநூற்பட்டியல் | |

# முன்னுரை

ஒரு நகரின் வரலாறு என்பது அந்நகரின் வரலாறு மட்டும் சார்ந்தது அல்ல. அந்நகருடன் தொடர்புடைய மனிதர்கள், வழிபாட்டு இடங்கள், நாட்டுப்புறக் கலைகள், தொழிற்சாலைகள், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் போன்றனவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது. இதன் காரணமாக ஒரு காலத்தில் மனித குல வரலாற்றில் புகழ் பெற்றிருந்த நகரங்கள் இன்றைக்கு மீளவும் பெருமைகளை அடையச் செய்யலாம். அழியாமல் இருக்கும் நகரங்களின் அடைந்த பெருமைகளை ஆவணப்படுத்தித் தக்க வைத்துக்கொள்ளலாம். இவ்வகையில் தொண்டி என்ற ஊர் பற்றிய வரலாற்றினை ஆராய்வதாக இவ்வாய்வுத் திட்டம் அமைகின்றது. இவ்வாய்வுத்திட்டத்தின் வழியாக தொண்டி என்ற நகரின் அழிவுகளை அளந்தறிய முடிகிறது. இருப்பனவற்றை ஆவணமாகப் பதிவு செய்ய முடிகின்றது.

தொண்டி என்ற நகரம் சங்க இலக்கியங்களின் பதிவுகள் வழி இரு மன்னர்களின் ஆட்சிப் பகுதிகளில் அமைந்திருந்திருப்பதாக அறியவருகின்றது. தொண்டி என்ற பெயருடைய இரு நகரங்களில் ஒன்று சேரர் ஆட்சிப் பகுதியிலும், மற்றொன்று பாண்டியர் ஆட்சிப் பகுதியிலும் அமைந்திருக்கின்றன. சேரர் தொண்டி ஒரு துறைமுக நகராகும். அது சேரர்களுக்கு உரியது.

பாண்டியர் பகுதியில் அமைந்துள்ள தொண்டியும் சேரர் தொண்டிக்கு ஈடான ஒரு துறைமுகநகரம் ஆகும். இந்நகரம் “கானலம் தொண்டி” என்ற அடையுடன் அழைக்கப்படுகிறது. இத்துறைமுக நகரம் பழமை வாய்ந்தது. சங்க இலக்கியங்களில் இந்நகர் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. இந்நகரின் வரலாற்றையும், இலக்கிய வளங்களையும், நாட்டுப்புற வளங்களையும் தொகுத்து உரைப்பதாகவும்,

இத்தொகுப்புகளின்வழி பாண்டி நாட்டுத் தொண்டி குறித்தான முழுமையான உண்மைத் தகவல்களைத் தருவதாகவும் இவ்வாய்வுத் திட்டம் செய்யப்பட்டுள்ளது.

தொண்டி நகரில் இந்து, கிறித்துவர், இசுலாமியர் போன்ற பல மதத்தவரும் நட்புடனும், தோழமையுடனும் பழகி வருகின்றனர். இவர்களுடன் கடற்கரைப் பகுதியில் மீனவர்களும் இணைந்து மீன் தொழில் வளம் பெற உழைத்து வருகின்றனர். இவர்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியன தொண்டி நகருக்குத் தனிப் பெருமையை அளித்துவருகின்றன.

இந்நகரின் பெருமைகளை வரலாற்று, இலக்கியச் சான்றுகளின் வழி வெளிக்கொணரும் நிலையில் செய்யப்பெற்றுள்ள இவ்வாய்வு பின்வரும் பகுப்புகளை உடையதாக உள்ளது.

**ஆய்வு எல்லை**

தொண்டி என்ற நகர் பற்றியதான இவ்வாய்வில் தொண்டியில் வாழ்ந்தோர் பற்றிய குறிப்புகள், நூல்கள், இலக்கியங்கள், நினைவுகள் ஆகியனவும், தொண்டி பற்றிய எழுதிய இலக்கிய வரலாற்றுப் படைப்பாளர்களின் பங்களிப்புகளும் ஆய்வின் எல்லையாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு வரலாற்று அடிப்படை வாய்ந்ததாகவும், இலக்கிய நலம் பாராட்டலாகவும், கள ஆய்வாகவும் விளங்குகிறது. எனவே அதற்கு ஏற்ற வகையில் இதன் ஆய்வு அணுகுமுறை, வரலாற்றியல், இலக்கியத்திறனாய்வு, கள ஆய்வு ஆகியவற்றின் நெறிமுறைகளைப் பின்பற்றிச் செய்யப்பெற்றுள்ளது.

**கருதுகோள்**

சேரர் நாட்டுத் துறைமுகப் பட்டிணமான தொண்டி போன்றதொரு நகரமாகப் பாண்டிநாட்டில் தொண்டி உருவாக்கப்பெற்றுள்ளது. இதன் வழியாக அயல்நாட்டுத் தொடர்புகள் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளன என்ற கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வுத்திட்டம் செய்யப்பெற்றுள்ளது.

**ஆய்வுத்திட்டப் பகுப்புகள்**

இவ்வாய்வுத்திட்டம் பின்வரும் இயல்களை உடையதாக அமைகிறது.

முன்னுரை

இயல்.1. தொண்டியின் வரலாறு

இயல்.2. தொண்டியின் நாட்டுப்புற வளங்கள்

இயல்.3. தொண்டியின் இலக்கிய வளங்கள்

முடிவுகள்

இப்பகுப்புகளின் வழி பாண்டி நாட்டுத் தொண்டி நகர் குறித்தான முழுமையானத் தகவல்களை உடையதாக இவ்வாய்வுத்திட்டம் வடிவமைக்கப்பெற்று வருகிறது.

**இயல் பற்றிய விளக்கங்கள்**

மேற்காட்டிய பகுப்புகளின் வழியாக ஆராயப்பெறப்படும் கருத்துகளின் சுருக்கம் பின்வரும் நிலையில் தரப்பெறுகின்றது.

**முன்னுரை**

முன்னுரையில் ஆய்வுத்திட்டத்தின் நோக்கம், அணுகுமுறை, ஆய்வுப்பகுப்புகள், ஆய்வு அறிமுகம் போன்றன செய்யப்படுகின்றன.

**இயல்.1. தொண்டியின் வரலாறு**

தொண்டி என்ற பாண்டிய நாட்டு நகரின் வரலாற்றை அறியப் பலத்தரவுகள் கிடைக்கின்றன. தொண்டி பற்றிய இலக்கியத் தரவுகள், அகழ்வாய்வுத் தகவல்கள், கடலாய்வுத் தகவல்கள், களஆய்வுத்தகவல்கள் ஆ:கியனவற்றை அடிப்படையாகக் கொண்டு தொண்டியின் வரலாறு இவ்வியலில் ஆராயப் பெற்றுள்ளது. மேலும் இவ்வியலில் தொண்டி என்ற துறைமுக நகரின் சிறப்பும், அதன் வெளிநாட்டுத் தொடர்பும் வெளிப்படுத்தப்படுகிறது.

**இயல்.2.தொண்டியின் நாட்டுப்புற வளங்கள்**

தொண்டியின் நாட்டுப் புற வளங்கள் என்ற இரண்டாம் இயலில் தொண்டியில் மக்களிடத்தில் புழங்கி வரும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், ஆடல்கள், செய்திகள் போன்றன பதிவுசெய்யப்பெற்று அவை தொகுத்தளிக்கப்பெறுகின்றன. மேலும் அவற்றில் காணப்படும் செய்திகள் ஆராய்ந்து அவற்றின் வழியாகத் தொண்டியின் வர்லாறு, சிறப்பு போன்ற பெறப்பட்டுள்ளன.

**இயல்.3 தொண்டியின் இலக்கிய வளங்கள்**

தொண்டியின் இலக்கிய வளங்கள் என்ற தலைப்பில் தொண்டி சார் படைப்பாளர்களின் இலக்கிய வளங்கள் தொகுக்கப்பெற்று ஆராயப் பெறுகின்றன. குறிப்பாக இவ்வியலில் மஸ்தான் சாகிபு அவர்களின் பாடல்கள் களமாகக் கொள்ளப்பெறுகின்றன.

**முடிவுகள்**

இவ்வியல்கள் வழியாகக் கண்டறியப் பெற்ற முடிவுகள் இப்பகுதியில் தொகுத்துரைக்கப்பெறுகின்றன.

தக்க பின்னிணைப்புகள், துணைநூல்பட்டியல் போன்றன இணைக்கப்பெற்று இவ்வாய்வுத்திட்டம் முழுமை பெறுகின்றது.

## இயல்.1. தொண்டியின் வரலாறு

தொன்மை வாய்ந்த நகரம் தொண்டியாகும். இந்நகரின் வரலாறு என்பது சங்ககாலத்தில் இருந்துத் தொடங்குவதாக உள்ளது. தொடர்ந்து சிலப்பதிகார காலத்திலும், அதனைத் தொடர்ந்து, சிற்றிலக்கிய காலத்திலும் இவ்வூர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இலக்கியப் படைப்பாளர்களால் பதிவு செய்யப்பெற்றுள்ளன. இவற்றைத் தொடர்ந்து, இசுலாமியர்கள் குடியேறிய காலம், சேதுபதி மன்னர்களின் ஆட்சிக்காலம் ஆகிய காலங்களிலும் இந்நகர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இலக்கியப் பதிவுகளாகக் கிடைக்கின்றன.

தொண்டி என்னும் நகரம் அழகுடையது. அது கடற்கரைத் துறைமுக நகரமாக விளங்கியது. வெளிநாட்டாரும் வருகை தந்து அங்கு வணிகப் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர் என்பன தொண்டி குறித்த பொதுவான செய்திகள். இருப்பினும் தொண்டி என்ற பெயரில் சங்க காலத்தில் இரு நகரங்கள் இருந்துள்ளன. அவற்றில் ஒன்று இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பக்கம் இருந்துள்ளது. மற்றொன்று கிழக்குக கடற்கரைப் பக்ககம் இருந்துள்ளது. (காண்க பின்னிணைப்பு -1)

மேற்குக் கடற்கரைப் பக்கம் உள்ள தொண்டி சங்க காலத்தில் சேரர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கிழக்குக்கடற்கரை சார்ந்த தொண்டி பாண்டியர்க்கு உரியதாக விளங்கினாலும் அவ்வப்போது சோழப் பேரரசர்களின் ஆளுகைக்கும் உட்பட்டிருந்தது. இவற்றில் கிழக்குக் கடற்கரை சார்ந்த தொண்டி நகரின் வரலாறு குறித்து இவ்வாய்வுத்திட்டம் ஆராய்கிறது.

**<u>தொண்டி என்னும் பெயரில் இரு ஊர்கள்</u>**

கீழ்த்திசைத் தொண்டி, மேல் திசைத் தொண்டி என்ற நிலையில் இரு ஊர்கள் சங்க காலத்தில் அமைந்திருந்தன. தற்போது கீழ்த்திசைத் தொண்டி - தொண்டி என்னும் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. ஆனால் மேல்திசைத் தொண்டி "கடலுண்டி" என்று அழைக்கப்படுகிறது. மேல் திசைத் தொண்டி கடலுண்டி என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் தற்போது கேரள மாநிலத்தில் தொண்டி என்ற பெயரில் இரு ஊர்கள் உள்ளன. மலப்புரம் மாவட்டத்தில் ஒரு தொண்டி உள்ளது. கோழிக்கோடு மாவட்டத்தில் தொண்டி என்ற பெயரில் மேல்திசைத் தொண்டி இருந்திருக்க வேண்டும். இவற்றை அடையாளப்படுத்துவதற்காக கடலுடன் கூடிய மேல்திசைத்தொண்டி கடல் தொண்டி என்று அழைக்கப்பெற்று அது மருவி கடலுண்டி என்று வந்திருக்கவேண்டும். இவ்வகையில் மேல்த்திசைத் தொண்டி தற்போது கடலுண்டி என்று அழைக்கப்படுகிறது என்பது உறுதியாகின்றது. இதனைக் கேரள

அரசின் இணையதளச் செய்தியும், விக்கிபீடியா இணையச் செய்தியும் உறுதி செய்கின்றன.[1] இவ்வகையில் இரு தொண்டிகள் இருப்பது உறுதியாகின்றன.

---

[1] Though the Cheras had their capital at Vanchi in the interior, they had the famous harbour towns of Tyndis and Muziris on the Arabian Sea coast for trade. The Cheras ruled over the central portion of the present day Kerala. They seemed to have attracted a good deal of Roman trade. There are vivid descriptions in Sangham literature of Yavana ships coming to Muziris, laden with gold and waiting for pepper, the black gold of the Romans, at some distance from the shore. The hoards of Roman gold coins unearthed from Kottayam and Eyyal in Kerala authenticity to such statements. There were a number of other minor chieftains who flourished in different parts of Kerala.

http://kerala.gov.in/index.php?option=com_content&view=article&id=2852&Itemid=2291

According to the Sangam literature, Thondi, the capital of Chera Kingdom, is now known as Kadalundi. Kadalundi had trade relations with foreign countries like Rome and Arabia. After the breakdown of the Chera Kingdom dynasty rooted in Kadalundi, Parappanad Kovilakam became the rulers of Kadalundi. They gave permission for the Dutch to build a fort in Kadalundi. Even though the fort collapsed after a war with Zamorians, we can see the remnants in Mulla in Kadalundi. Later the British became the rulers of

இரு தொண்டிகளை இலக்கியச் சான்றுகளின் வழியாகவும் வேறுபடுத்த இயலும். பதிற்றுப்பத்து, ஆறாம் பத்தின் பதிகத்தில் மேல்திசைத் தொண்டி பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பினைப் பெறமுடிகின்றது. பதிற்றுப்பத்து சேரர் குலத்திற்கு மட்டுமே உரியது. இதனுள் இடம்பெறும் தொண்டி மேல்திசைத் தொண்டி என்று கொள்வதில் ஐயமில்லை.

---

Kadalundi and they built railway lines up to Chaliyam for the purpose of business. Later when Calicut became the center of trades the railway lines were removed but there are remnants such as the railway well, lighthouse and forest depot.

Thundi is an ancient seaport and harbor-town north of Muziris (Muchiri) in the Chera Kingdom (Keprobotos), modern day India on the Malabar Coast. The exact location of the port is still unknown, modern day Kadalundi, Ponnani and Pantalayani Kollam are often identified as Tyndis located in the Sangam age Tamil kingdom of the Cheras. Tyndis was a major center of trade, next only to Muziris, between the Cheras and the Roman Empire in the early centuries of the Christian era. A branch of the Chera royal family is also said to have established itself at Tyndis. It is also speculated that Tyndis (along with ports such as Naura, Bakare and Nelkynda) operated as a satellite feeding port to Muziris

https://en.wikipedia.org/wiki/Kadalundi

“தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்

தொண்டியுள் தந்துக் கொடுப்பித்து”[2]

என்ற குறிப்பு இடம் பெறுகிறது. இதனுள் தண்டாரணியம் என்பது தண்டகாரணியம் என்பதன் சொற்குறை. தண்டகாரணியம் என்பது முனிவர்கள் வாழும் காடு ஆகும். இதுபற்றிய குறிப்பு இராமாயணத்திலும் இடம்பெறுகிறது. மேலும் இப்பகுதி விந்திய சாத்புரா மலைத்தொடர்கள் அமைந்த தக்கான பீடபூமியில் அமைந்துள்ளது. அங்கிருந்து தற்போதைய கேரளப்பகுதியான சேரர் பகுதி நெருங்கிய இட அளவு கொண்டது. எனவே தண்டகாரணியத்தில் கொண்டு செல்லப்பெற்ற ஆடுகளைத் தடுத்து நிறுத்தித் தொண்டிக்குக் கொண்டுவந்தான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற குறிப்பு, மேல்திசைத் தொண்டிக்கு உரியது என்பதை உணர இயலும். சேரன் பாண்டிய நாட்டின் தொண்டி நகருக்கு வந்திக்க இயலாது என்பதை இங்கு எண்ணிப்பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறுந்தொகைக்கு உரை வரையும் நிலையில் உ.வே.சாமிநாதையர் இவ்விரு தொண்டிகளையும் வேறுபாடு கண்டு உரைக்கிறார்.

“தொண்டி மேல் கடற்கரைக் கண்ணதாகிய தொண்டி ஒன்று பரணரால் குறிப்பிடப்படுகிறது. அது பொறையனுக்குரியது. நெல்வளம் மிக்க தொண்டியொன்று வேறிரண்டு புலர்களால் பாராட்டப்பெறுகிறது. அது கீழ் கடற்கரைக் கண்ணதென்று தெரியவருகிறது”[3] என்று இரண்டையும் வேறுபடுத்திக் காண்கிறார் உ.வே.சாமிநாதர்.

---

[2] பதிற்றுப்பத்து, எட்டாம் பத்து, பதிகம், அடி 3-4

[3] உ.வே. சாமிநாதையர் (உ.ஆ) குறுந்தொகை, ப. lxxxv

மயிலை சீனி. வேங்கடசாமியும் தொண்டியை இரண்டாகக் காண்கிறார். “சங்க காலத்திலேயே கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்தன. இரண்டும் துறைமுகப் பட்டினங்கள். ஒரு தொண்டி சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் இருந்தது. மற்றொரு தொண்டி கிழக்குக் கடற்கரையில் இருந்தது”[4] என்ற கருத்தும் இரு தொண்டி இருந்தமையை உறுதி செய்கின்றது.

அபிதான சிந்தாமணியின் ஆசிரியரும் தொண்டியை இருவகைப்பட்டதாகக் காட்டுகிறார்.

“தொண்டி-1.

சோழர் குலத்தவருறையும் நகரம். இது சேதுநாட்டிற்குத் துறைமுகமாக இருக்கிறது.

தொண்டி -2

சேரர்க்குரிய தொண்டி குடக்கடற் கரைக்கண்ணுள்ளது. அது குட்டுவன் தொண்டி எனப்படும். இது கடற்கரையிலுள்ளது. இது சேரர்களுக்கு இராஜதானியாயிருந்த பட்டணங்களில் ஒன்று. ‘நன்னகர் மாந்தை’ குட்டுவன் மாந்தை எனப் புலவர் புகழ்ந்திருக்கின்றனர்.[5]

என்ற குறிப்புகள் வழியாகவும் இருவகைத் தொண்டி நகர்களின் வேறுபாடுகளை அறியமுடிகின்றது.

---

[4] மயிலை சீனி. வேங்கடசாமி, ஆய்வுக்களஞ்சியம் தொகுதி 4 ப. 83

[5] ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதானசிந்தாமணி, ப. 1093

இவ்வகையில் தொண்டியை மேல்திசைத் தொண்டி, கீழ்த்திசைத் தொண்டி என்று இருவேறாகப் பிரித்து உணரமுடிகின்றது. இருப்பினும் தொண்டி குறித்த சங்க இலக்கியப் பதிவுகளை இரு தொண்டிக்கும் உரிய நிலையில் சரிவர புரிந்து கொண்டு வேறுபாடு கண்டு உணரவேண்டிய நிலை உள்ளது.

**கடலுண்டி- தொண்டி வேறுபாடுகள்**

அழகானது, துறைமுக நகரம் என்பன போன்ற ஒற்றுமைகள் இரண்டு தொண்டிகளுக்கும் உரியன. ஆனால் கடலுண்டி எனப்படும் மேல்த்திசைத் தொண்டி சேரர்க்குரியது. எனவே பொறையன், குட்டுவன் என்ற சேரர் பெயர்களுடன் அமைந்துள்ள தொண்டி குறித்தான சங்க இலக்கியச் சான்றுகள் மேல்த்திசை தொண்டி சார்ந்தன என்று வேறுபடுத்திக்கொள்ள வேண்டும். முழங்கும் கடல், ஆர்ப்பரிக்கும் கடல் போன்றன மேல்திசைத் தொண்டிக்கு உரியன.

கீழ்த்திசைத் தொண்டி தென்றலுடன் இணைவது. எனவே கொண்டல் குறித்து வரும் தொண்டிப் பதிவுகள் இதற்குரியனவாகின்றன. மேலும் நெல்லுடன் தொடர்புடைய தொண்டியாகவும் கீழ்த்திசைத் தொண்டி விளங்குகிறது. கீழ்த்திசைத் தொண்டி தற்போது இராமநாதபுர மாவட்டம் திருவாடானை ஒன்றியத்தில் உள்ளது திருவாடானைப் பகுதி இராமநாதபுர மாவட்ட நெற்களஞ்சியம் என்று சொல்லும் அளவிற்கு நெல் விளைச்சலில் புகழ்பெற்று அமைவதாகும். இதன் காரணமாக இந்தத் தொண்டியினை நெல்லுடன் இணைத்து அறியஇயலும். இவ்விரு தொண்டிகளும் ஏறக்குறைய நேர் எதிர் திசையில் அமைந்திருக்கின்றன. இதனைப் பின்வரும் வரைபடம் காட்டும்.




இவ்வகையில் இரு தொண்டி நகர்கள் சங்ககாலம் முதல் திகழ்ந்து வருவதை உணரமுடிகின்றது. இங்கு கீழ்த்திசைத் தொண்டி பற்றி இலக்கியங்கள், அகழ்வாய்வுகள், கடலாய்வுகள் வழியாக பெறப்படும் வரலாற்றுச் செய்திகள் தொகுத்தளிக்கப்பெறுகின்றன.

**தொண்டி நகரின் சங்க கால வரலாறு (கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பாக)**

கீழ்த்திசைத் தொண்டி குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு தொண்டி நகரின் சங்ககால வரலாற்றுநிலையை அறிந்து கொள்ளமுடிகின்றது.

**பாண்டியர் ஆட்சி**

சங்க காலத்தில் தமிழகத்தின் தென்பகுதியைப் பாண்டியர்கள் ஆண்டுவந்தனர். இன்றைய மதுரை, இராநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிலப்பகுதிகளைப் பாண்டியர்கள் ஆண்டுவந்தனர்.

வைகை,பொருநை ஆகியன பாண்டி நாட்டில் ஓடிய ஆறுகள் ஆகும். கடைச்சங்க காலத்தில் மதுரையே பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கியது. கொற்கை, தொண்டி போன்றன பாண்டியர்களின் துறைமுக நகரங்களாக விளங்கின.

“வெள்ளாறது வடக்கா மேற்கும் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காம்- உள்ளாற்
ஆண்டகால் கிழக்கா மெம்பத்தாறு காதம்
பாண்டிய நாட்டெல்லை பகர்”[6]

என்ற பாடலில் பாண்டிய நாட்டின் எல்லை சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது, கிழக்குப் பகுதி கடற்கரை சார்ந்தது என்ற குறிப்பு இங்குக் கவனிக்கத்தக்கது.

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தொண்டி அமைந்திருப்பது குறிக்கத்தக்கது. பாண்டிய நாட்டினை கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல் பாண்டிய மன்னர்கள் ஆண்டுவந்துள்ளதாக மயிலை சீனி.வேங்கடசாமி கருதுகிறார்.[7] பாண்டியர் ஆண்ட பகுதி பின்வரும் வரைபடத்தின் வழியாக அறியப்படத்தக்கது.

[6] பெருந்தொகை பாடல்எண் 2098

[7] மயிலை சீனி, வெங்கடசாமி, சங்ககாலத் தமிழக வரலாறு, ப. 152




பாண்டிய நாட்டினைச் செழியன், மாறன், வழுதி, பாண்டியன் என்ற பெயருடைய பாண்டிய அரசர்கள் சங்ககாலத்தில் ஆண்டுவந்துள்ளனர்.

1. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,
2. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,
3. நம்பி நெடுஞ்செழியன்

ஆகிய செழிய மரபினரும்,

4. இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன்,
5. சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்,
6. முடத்திருமாறன், மாலை மாறன்,

7.இளம்பழையன் மாறன்

என்ற மாறன் மரபினரும்,

8.பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி,

9.கானப்பேரெயில்கடந்து உக்கிரப்பெருவழுதி,

10.வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி,

11.இளம்பெருவழுதி, பெரும்பெயர் வழுதி,

12.குறுவழுதி, நல்வழுதி,

13.பாண்டியன் மாறன் வழுதி,

14.கடலன் வழுதி,

15.மருங்கை வழுதி.

16.கொற்கை வழுதி

போன்ற வழுதி மரபினரும்

17.ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்,

18.பசும்பூண் பாண்டியன்,

19.பாண்டியன் அறிவுடைநம்பி,

20.பாண்டியன் கீரஞ்சாத்தன்

என்ற மரபினரும் சங்ககாலத்தில் பாண்டிய நாட்டினை ஆண்டு வந்துள்ளனர். [8]

---

[8] மயிலை சீனி, வெங்கடசாமி, சங்ககாலத் தமிழக வரலாறு, பக் 151 முதல் 194 வரையுள்ள பக்கங்களின் செய்திகள் அடிப்படையில் தொகுக்கப்பெற்றது.

மேற்கண்ட குறிப்பில் காட்டப்படும் கானப்பேர் என்பது தற்போதைய காளையார் கோயில் ஆகும். இக்காளையார் கோயில் தொண்டிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் ஊராகும். இதன் காரணமாகத் தொண்டியும் பாண்டிய நாட்டு ஆளுகையில் இருந்தது என்று கண்டுகொள்ள இயலும்.




இந்த வரைபடத்தைப் பாண்டிய நாடு என்ற அடிப்படையில் வழங்குகிறார் மயிலை சீனி வேங்கடசாமி.[9] இந்தப் படத்தில் இராமேசுவரம் குறிக்கப்பெற்றுள்ளது. அதனருகே தொண்டி அமைந்திருக்கிறது என்பதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**<u>சங்க இலக்கியச் சான்றுகள்</u>**

---

[9] மயிலை சீனி, வெங்கடசாமி, சங்ககாலத் தமிழக வரலாறு, ப 155

சங்க இலக்கியங்களில் கீழ்த்திசைத் தொண்டி - தென்றலை உடைய தொண்டி என்றும், நெல்லுடைய தொண்டி என்றும் குறிக்கப்படுகிறது.

நற்றிணைப் பாடல் ஒன்று நெல்லுடன் இணைத்துத் கீழ்த்திசைத் தொண்டியை வேறுபடுத்தி உணர்த்துகிறது.

“அருளா யாகலோ, கொடிதே இருங்கழிக்

குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தி

தில்லை அம் பொதும்பில் பள்ளி கொள்ளும்

மெல்லம் புலம்ப யான் கண்டிசினே

கல்லென் புள்ளின் கானல்அம் தொண்டி

நெல்அரி தொழுவர் கூர்வாள் உற்றென

பல்இதழ் தயங்கிய கூம்பா நெய்தல்

நீர் அலை தோற்றம் போல

ஈரிய கலுழும் நீ நயந்தோள் கண்ணே”[10]

என்ற பாடலை எழுதியவர் பெயர் தெரியவில்லை என்றபோதும் இவர் தொண்டியின் பெயரைத் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளார்.

தொண்டி கானல் அம் தொண்டி என்று அழைக்கப்படும் தன்மையது. கானல் என்றால் உப்பளம் என்று பொருள். உப்பளம் மிக்க தொண்டி என்று கீழ்த்திசைத்

---

[10] --------------------------- நற்றிணை, பாடல்எண். 195

தொண்டி சங்ககாலத்தில் அழைக்கப்பெற்றிருந்திருக்கிறது. அத்தொண்டியில் நெய்தல் நிலமான கடற்கரையும் இருந்துள்ளது. அதனருகில் விளைநிலமான மருதமும் இருந்துள்ளது. இதே நிலை இன்றளவும் உள்ளது.

தொண்டியின் வயல்களில் நெல் விளைந்து கிடக்கின்றன. இதனை அறுக்க கூர்வாள் என்ற ஒன்றைப் பயன்படுத்தி நெல்அறுப்போர் அறுக்கின்றனர். இதுபோன்ற தோற்றமுடையதாக நெய்தல் மலர்கள் விளங்குகின்றன. அவை நீரில் அலைந்தால் எவ்வாறு இருக்குமோ அதுபோல தலைவியின் கண்கள் கலக்கம் உற்று உள்ளன என்று குறிப்பிடுகிறார் சங்கப்புலவர்.

தொண்டி சார்ந்த ஊர்களில் நெல்லை அறுக்க கருக்கறுவாள், மற்றும் கூர்ங்கத்தி என்பனவற்றை இன்றளவும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் பயன்பாட்டுச் சொல்லெச்சம் சங்க கால நற்றிணைப்பாடலில் கூர்வாள் என்று அமைந்து கிடக்கிறது.

மேலும் தொண்டி கடற்கரையானது கருமையான உப்பங்கழிகள் நிறைந்தது. அவ்விடத்தில் இளம் நீர்நாய்கள் கெழுத்த மீன்களைத் தின்றுத் தில்லை மரத்தில் படுத்துறங்கும் என்று இப்பாடல் தொண்டியின் வளத்தைப் பாடுகின்றது. தில்லை மரங்கள் உப்பங்கழிகளில் வளரும் மரங்களாகும். இம்மரங்களின் தாவரவியல் பெயர் எக்ஸ்காரியா அகாலிகா லின் ( Execaria agallicha Linn) என்பதாகும். இம்மரங்கள் இன்னமும் மதுரை சார்ந்த பகுதிகளில் காணப்படுகிறது. இதனை புலிப்பால் மரம் என்றும் அழைக்கின்றனர். எனவே இவ்வடையாளங்களால் கீழ்த்திசைத்தொண்டியின் அடையாளங்களைப் பெற முடிகின்றது.

குறுந்தொகை இருநூற்றுப் பத்தாம் பாடலிலும் கானலம் தொண்டி பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

“திண்தேர் நள்ளி கானத்து அண்டர்

பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி

முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு

எழுகலத்து ஏந்தினும் சிறிது என் தோழி

பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே”[11]

என்ற பாடலில் ஒரு வரலாற்றுக் குறிப்பு அமைந்துள்ளது. நள்ளி என்ற கடையெழு வள்ளல்களில் ஒருவன் பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

நள்ளி கண்டீர மலையின் அரசனாக விளங்கியவன். இம்மலை தொட்டி மலை எனவும் அழைக்கப்படும் தன்மையது. தற்போது தொட்ட பெட்டா என்று அழைக்கப்படும் மலைச்சிகரம் உள்ள நாட்டை ஆண்டவன் கண்டீர கோப்பெரும் நற்கிள்ளி ஆவான். இம்மலை குளிர் மலை என்று சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இம்மலைக்குச் சென்று பாடியோருக்கு வேண்டுவன அளிப்பவன் நள்ளி. அவ்வகையில் அவன் மலைக்காட்டைச் சார்ந்த பசு மாடுகள் வழியாகப் பெறப்பெற்ற நெய்யைத் தொண்டியில் விளைந்த வெண்ணெல் அரசி கொண்டு செய்யப்பெற்ற சோற்றுடன் கலந்து காக்கைக்குப் படைக்கும் வழக்கம் சங்ககாலந்தொட்டு இருந்துவந்துள்ளது. இவ்வுணவை ஏழு கலத்தில் காக்கைக்குத் தரும் நிலையை இப்பாடல் உணர்த்துகிறது. இதில் குறிக்கப்படும் வெண்ணெல் என்பத நன்செய் நிலத்தில் விளையும் நெல்லைக் குறிப்பதாகும்.

[11] காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், குறுந்தொகை பாடல்எண். 210

தொட்டி மலை, கண்டீர மலையை கேரளத்திற்கு உரியதாகக் கொண்டு சில ஆய்வளார்கள் மயங்கியுள்ளனர். இருப்பினும் நீலகிரி என்ற மலைப்பகுதி கண்டு கண்டுகளாக இருப்பதால் அதனை கண்டீர மலை என்பதாகச் சங்க இலக்கியங்கள் குறித்துள்ளன.

இவ்வகையில் இப்பாடலின் வழி கடையெழு வள்ளல்களுள் ஒருவனான நள்ளியின் காலத்திலேயே நெல் விளைத்துப் பெருமை பெற்ற நகரம் தொண்டி என்பது உறுதியாகின்றது. இதன்வழி கடைச்சங்க காலத் தொண்டியின் வரலாற்று நிலையை அறியமுடிகிறது.

குறுந்தொகையின் மற்றொரு பாடல் நெல்விளையும் தொண்டியின் சிறப்பினைக் காட்டுவதாக உள்ளது.

“பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்ன என் நலம் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்ந! நின் சூளே!”[12]

என்ற பாடலில் உலக்கை கொண்டு அவல் இடிக்கும் பெண்கள் அதனைச் சற்று நேரம் நிறுத்தி விட்டு வண்டல் விளையாடச் சென்றனர். அவர்கள் அவ்வாறு அவல் இடித்தும், வண்டல் விளையாடியும் மகிழ்ந்த இடம் தொண்டியின் நெல் வயல் வரப்பாகும். இவ்வாறு வளமும் அழகும் நிறைந்தவள் தலைவி. அவளின் நலத்தைத்


[12] குன்றியன், குறுந்தொகை, பாடல். 238

தலைவன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதனைத் திருப்பித் தந்துவிட்டுத் தலைவனே உன்னுடைய பொய்ம்மொழிகளைக் கொண்டுசெல் என்று ஒரு தலைவி குறிப்பிடுகிறாள்.

இப்பாடலின் வழி நெல் அறுக்கும் தொழில் நன்கு நடைபெற்ற இடம் தொண்டி நகரம் என்பது உறுதியாகின்றது.

<u>**கல்வெட்டுச் சான்று**</u>

மதுரை கீழவளவு குகைப்பகுதியில் உள்ள கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் உண்ணாநோன்பினர் இருக்கும் பள்ளி ஒன்றை அங்கு அமைத்துத் தந்தவர் தொண்டியைச் சார்ந்த இலவோன்” என்ற குறிப்பு காணப்படுகிறது.





இக்கல்வெட்டு தமிழி எழுத்துவடிவில் அமைந்துள்ளது. "உப(ச)அன் தொண்டி (ல) வேன் கொடுபளி (இ)" என்பதே இப்பழமையான கல்வெட்டில் காணப்படும் செய்தியாகும். இதன்வழியாக உபவாசனப் பள்ளி என்று இந்தப் பள்ளி அழைக்கப்பெற்றதையும் இதனை வடிவமைத்து இலவசமாகத் தந்தவர் தொண்டியைச் சார்ந்த இலவோன் என்பதும் தெரியவருகிறது. இதன் வழியாகத் தொண்டி என்ற நகரம் சங்க காலத்திற்கு முன்பே இருந்ததை உணரமுடிகின்றது.[13] இப்பகுதி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு காலத்தில் பெருவளர்ச்சி பெற்று சமண மறுமலர்ச்சியைப் பிற்காலப் பாண்டியர் காலத்தில் ஏற்படுத்தியது. தற்போது இங்குத் தீர்த்தங்கரர் சிலைகள், நூறுபேர் தங்கும் அளவிற்காக இடங்கள் ஆகியன இருக்கின்றன. இதன்வழி கீழவளவு சமணர்களின் குறிக்கத்தக்க வாழிடமாக இருந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது.

**<u>அகழ்வாய்வின் வழி தொண்டியின் சங்க கால வரலாறு</u>**

கீழ்க்கரைத் தொண்டி அகழ்வாய்விற்கு உரிய இடமாகத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டு கொள்ளப்பெற்றுள்ளது. இவ்வூரில் அகழ்வாய்வுகள் பல நடைபெற்றுள்ளன.

[13] V1deo-thf.blogspot.in

1980 ஆம் ஆண்டு தொண்டியம்மன் கோயில் அருகில் உள்ள மேட்டுப்பகுதியில் ஓர் அகழ்வாய்வு நடத்தப்பெற்றுள்ளது. இவ்வகழ்வாய்வில்

1. சுடுமண்ணாலான காதணி,
2. வட்டு,
3. கருப்பு பச்சை மணிகள்,
4. அணிகலன்கள்,
5. முதலாம் இராஜராஜ சோழன் காலத்திய செம்புக் காசு,
6. நாயக்கர் கால செம்புக் காசுகள் இரண்டு,
7. இடைக்காலத்தைச் சேர்ந்த பானையோடுகள்

போன்ற பொருட்கள் கிடைத்துள்ளன.

மீளவும் தொண்டியம்மன் மேட்டில் 1994-95 ஆம் ஆண்டில் அகழாய்வு நடத்தியது. இவ்வகழாய்வு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநரான முனைவர் இரா.நாகசாமி அவர்களின் வழிகாட்டுதலின் மூலம் நிகழ்த்தப்பட்டது. இத்துறையில் பணியாற்றிய பதிவாளர் திரு.ம.சந்திரமூர்த்தி மற்றும் காப்பாட்சியர் வே.வேதாச்சலம் ஆகியோர் இவ்வகழாய்வில் பங்கெடுத்து பணியாற்றியுள்ளனர். இவ்வகழாய்வின் மூலம் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் தொண்டி ஒரு துறைமுக நகரம் என்பது நிரூபணமாகிறது. மேலும் முதலாம் இராஜராஜன் காலத்திய செம்புக் காசு ஒன்றும் மற்றும் இரண்டு நாயக்கர் காலத்திய காசுகளும் கிடைத்துள்ளன.[14]

[14] http://tamildigitallibrary.in/excavations-details.php

2006 -2007 ஆண்டு வாக்கில் நடத்தப்பெற்ற அகழ்வாய்வில் சில பொருள்கள் சேகரிக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக தொண்டியம்மன் கோவில் அருகில் நடத்தப்பெற்ற அகழ்வாய்வில் சுட்ட செங்கல் ஒன்று கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பெற்றுள்ளது. [15]



அகழ்வாய்வில் இந்தச் செந்நிற செங்கல் ஒன்று கிடைத்துள்ளது. இதன் காலம் கி.மு. இரண்டாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரை இருக்கலாம் என்கின்றனர் அறிஞர்.

இவ்வகையில் தொண்டியின் சங்ககால வரலாற்றினை அறிந்து அதன் பழமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**காப்பிய காலத் தொண்டி**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் தொண்டி பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இதன் வழியாகத் தொண்டியின் காப்பிய கால நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.

**சிலப்பதிகாரத்தில் தொண்டி பற்றிய குறிப்பு**

---

15 www.tnarch.gov.in/excavation/tho.htm

தமிழின் மூத்த முதன்மைக் காப்பியமாக விளங்கும் சிலப்பதிரகாரத்தில் தொண்டி பற்றிக் குறித்துள்ளார் இளங்கோவடிகள். மதுரைக்காண்டத்தில் தொண்டி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

“வங்க ஈட்டத்துத் தொண்டியோரிட்ட

அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்

தொகு கருப் பூரமும் சுமந்துடன் வந்த

கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்

வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்

பங்குனி முயக்கத்துப் பனி அரசு யாண்டுளன்”[16]

என்ற சிலப்பதிகாரக் குறிப்பு கீழ்த்திசைத் தொண்டியை மிகச் சரியாக அடையாளப்படுத்துகிறது. சேரர் மரபினைச் சார்ந்த இளங்கோவடிகள் பாண்டிய நாட்டில் உள்ள தொண்டியைப் பாண்டிய நாட்டுடன் இணைத்துக் குறித்து இருப்பது கீழ்த்திசைத் தொண்டி காப்பிய காலத்தில் சிறப்புடன் விளங்கியது என்பதைக் காட்டுதற்கான உறுதியான சான்றாக விளங்குகிறது.

வங்க ஈட்டம் என்பது வங்கக் கடல் சார்ந்த தொகுப்பு எனப்படுவதாகும். தொண்டித் துறைமுகத்தில் இருந்த பொருள்களையும் இக்குறிப்பு வெளிப்படுத்துகிறது. அகில், துகில் (பட்டாடை), முத்தாரம், சந்தனம், கருப்பூரம் ஆகியன தொண்டிக் கடற்கரையில் நிறைந்திருந்தன. இதன் காரணமாக வாசமுடன் எழுந்த தென்திசைத் தென்றல் மதுரைக்குச் சென்றதாம். அவ்வாறு மதுரைக்குச் சென்றுக் காமன்

---

[16] சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், ஊர்காண்காதை, அடி 106-112)

விழாவிற்கு வந்தோரைக் குளிர்வித்ததாம். இக்குறிப்பு கீழ்த்திசைத் தொண்டியின் வரலாற்றுப் பழமையினையும், அதனைப் பாண்டியர்கள் ஆண்டனர் என்பதையும் காட்டுகின்றது. சிலப்பதிகார காலத்தில் ஆட்சியிலிருந்து பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். எனவே இவன் காலத்தில் தொண்டி துறைமுகப்பட்டிணமாக இருந்தது என்பது உறுதியாகின்றது.

**இறையனார் அகப்பொருள் உரையில் இடம்பெறும் பாண்டிக்கோவைப் பாடலில் உள்ள தொண்டி பற்றிய குறிப்புகள் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு)**

பாண்டிய நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகாலம் பஞ்சம் நிலவியுள்ளது. இதனை இறையனார் அகப்பொருள் உரை குறிக்கிறது. இப்பஞ்ச காலத்தில் தமிழ்ச்சங்கப் புலவர்களைத் தன்னால் காப்பாற்ற இயலாது என்று பாண்டிய மன்னன் அவர்களை மதுரையை விட்டு நீங்கி எங்காயினும் சென்று வாழ்க என்று அனுப்பி வைத்தான். பன்னீராண்டு பஞ்சம் கழிந்த பின்னால் மீண்டும் பாண்டியன் புலவர்களை அழைத்துக் கொண்டான். அவ்வாறு அழைத்துக் கொண்டபோது எழுத்து,சொல் இலக்கண நூல்கள் படைக்கப்பெற்றன. பொருள் இலக்கணம் எழுதுவதற்கு ஆளில்லை என்ற நிலையிலே மதுரை இறைவனான சொக்கலிங்கப்பெருமான் பொருள் இலக்கணத்தை இறையனார் களவியல் என்று எழுதித் தன் பீடத்தருகில் வைத்தார். இதற்கு உரை செய்வதற்கு ஒரு மரபு இருந்துள்ளது, நக்கீரனார் தான் செய்த உரையைத் தன் மகன் கீரங்கொற்றனாருக்கு உரைக்கிறார். அவர் வழி பரவிய இவ்வுரை பல்லோராலும் வழி கொள்ளப்பெற்று நிறைவில் முசிறியார் நீலக்கண்டனாருக்கு உரைக்கப்பெற்றது என்பது மரபுக்கதையாக உள்ளது.

இவ்வாறு தரப்பெற்ற உரையில் பாண்டிக் கோவைப் பாடல்கள் எடுத்துக்காட்டுப்பாடல்களாக இடம்பெற்றுள்ளன. இப்பாண்டிக்கோவையை எழுதியவர்

யார் என்று தெரியவில்லை. ஆனால் இதுவே முதன் முதலில் தமிழில் எழுந்த கோவை நூலாகும். இதன் பாட்டுடைத்தலைவன் அரிகேசரி நெல்வேலி வென்ற நெடுமாறன் ஆவான். இவன் திருஞான சம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவன் ஆவான். கூன்பாண்டியன், நின்ற சீர் நெடுமாறன் என்றும் இவனை அழைப்பர். இவன் நெல்வேலியை வென்ற நிலை திருத்தொண்டத் தொகை, திருத் தொண்டர் திருவதந்தாதி, திருத்தொண்டர் புராணம் ஆகியவற்றில் குறிக்கப்படுகிறது. “நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்” என்று திருத்தொண்டத்தொகையுள் சுந்தரர் இவனைச் சிறப்பிக்கிறார்.[17] இவனுடைய ஆட்சிக்காலம் கி.பி. 640 ஆம் ஆண்டுமுதல் 670 ஆம் ஆண்டுவரையாகும். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பதினைந்தும் மேற்பட்டபோர்கள் நடைபெற்றிருந்ததாக பாண்டிக்கோவை குறிக்கிறது. இவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடப்பெற்ற பாண்டிக்கோவையில் தொண்டி பற்றிய குறிப்புகள் சில உள்ளன.

“அணிநிற நீண்முடிவேந்தரை யாற்றுக் குடியழியத்
துணிநின்ற வேல்வலங்காட்டிய மீனவன் தொண்டியன்ன
பிணிநிற வார்குழற் பெய்வளைத் தோளிநின் னிற்பிரியேன்
மணிநிறம் பொன்னிறமாகவென் னாவி வருந்துவதே”[18]

---

[17] சுந்தரர், ஏழாம் திருமுறை, பதிகம் எண். 39. பாடல்எண். 8

[18] இறையனார் அகப்பொருள்,நூற்பா எண்.3 உரை மேற்கோள். பாண்டிக்கோவை, பாடல்எண். 11

என்ற இந்தப்பாடலில் தொண்டியை மையமாக வைத்துப் போர் ஒன்று நடைபெற்றதாக அறியமுடிகின்றது. தொண்டியில் நீண் முடிவேந்தரைக் குடியழியச் செய்து வேலை வலமாகச் சுழற்றி வெற்றி பெற்ற பாண்டிய மன்னனின் நகரம் தொண்டி என்ற குறிப்பு கவனிக்கத்தக்கது. தொண்டி போன்ற அழகினை உடையவள் தலைவி அவளைப் பிரியமாட்டேன் என்கிறான் தலைவன்.

பாண்டிக்கோவையில் மற்றொரு பாடலிலும் தொண்டி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

“திணிநிற நிடோள ரசுகத் தென்னறை யாற்று மின்னார்

துணிநிற வேல்கொண்ட கோன்றொண்டி அன்னாய் துயரலெம்மூர்

மணிநிறமாடத்து மாட்டிய வான்சுடர் மாலை நம்மூர்

அணிநிற மாளிகை மேற்பகல் பாரித்தணவருமே” [19]

என்ற பாடலிலும் பாண்டியன் வென்ற வெற்றி மிக்க வேலின் வெற்றி தொடர்கிறது. பலம் வாய்ந்த பகைவர்களை அழத்த பாண்டிய மன்னனின் வேல் கொண்ட வெற்றி இப்பாடலில் குறிக்கப்படுகிறது. மேலும் எம்மூரில் இருந்த வான் சுடர் மாலை உன்னூருக்கு வரும் என்று தலைவன் தலைவிக்கு வன்புறை சொல்கிறான். அதாவது தான் உன்னைக் காண வருவேன் என்று வான்சுடரை மையமாக வைத்து ஒரு குறிப்பினை இப்பாடல்வழி உணர்த்துகிறான்.

மற்றொரு பாடலிலும் தொண்டி பற்றிய குறிப்பு கிடைக்கின்றது.

---

[19] இறையனார் அகப்பொருள், நூற்பா. எண்.3 உரை மேற்கோள்., பாண்டிக்கோவை, பாடல்எண். 14

“பொருங்கழன் மாறன்புல் லாமன்னர் பூலந்தைப் பூங்குருதி

மருங்கழி நீர்மூழ்கக்கண்ட வெங்கோன் தொண்டிக் கானல்வண்டார்

கருங்கழி மேய்ந்தசெங் கால்வெள்ளை அன்னம் கதிரொடுந்தம்

பெருங்கழி காதன்மை நீங்கி யிவனிற் பிரிந்தனவே”[20]

இப்பாடலில் தொண்டியின் இயற்கை வளம் பெரிது படுத்திப் பாடப்பெற்றுள்ளது. மாறனாகிய பாண்டியனை ஏற்காத மன்னர் தம் இரத்தம் நீரில் கலந்து நீரைச் சிவப்பாக்கி விளங்கும் தொண்டி என்ற குறிப்பு பாண்டியனின் வீரத்தைப் பெருமைப்படுத்துவதாக விளங்குகிறது.

தலைவியிடம் தோழியானவள் பேசுவதாக இப்படல் அமைகிறது. தலைவனுக்குச் சிறைப்புறமாகச் சொல்லப்படும் செய்தி இதனுள் உள்ளது, தலைவன் பகற்குறிக்கண் தலைவனைக் காண வருகைதருகிறான். ஆனால் தலைவியைத் தோழி மணம் புரிந்து கொள்ளச்சொல்லி வரைவு கடாவுகிறான். அவ்வாறு கடவும் நிலையில் தொண்டியில் செவ்விய கால்களை உடைய வெள்ளை அன்னங்கள் விளையாடும். அவையும் இவ்வந்தி வேளையில் சென்றுவிட யாரிடம் தலைவியை ஆற்றியிருக்கச் சொல்லி நான் தூதுவிடுவேன் என்ற நிலையில் இப்பாடலின் பொருள் அமைக்கப்பெற்றுள்ளது.

பின்வரும் இ:ரு பாடல்களிலும் தொண்டி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

---

[20] இறையனார் அகப்பொருள்,நூற்பா எண். 18, உரை மேற்கோள். பிரிவச்சம், பாண்டிக்கோவை, பாடல்எண். 149

“திளையா எதிர் நின்ற தெம்மன் ஆர் சேவூர் படச் சிறு கண்

துளை ஆர் கரும் கைக் களிறு உந்தினான் தொண்டிச் சூழ் துறைவாய்

வளை ஆர் வனமுலையார் வண்டல் ஆடும் வரி நெடும் கண்

இளையார் பலர் உளர் யார் கண்ணதோ அண்ணல் இன் அருளே”[21]

என்ற பாடலிலும் தொண்டி பற்றிய குறிப்பு காணப்படுகிறது. தொண்டிக் கடற்கரையில் வண்டல் இழைக்கும் வரி நெடுங்கண் உடைய பெண்கள் பலர் விளையாடுகின்றனர். இவர்களில் அண்ணலின் இன்னருள் யார் மீது உள்ளதோ என்று தலைவி பாடுவதாக இப்பாடல் அமைகிறது.

“பள்ளத்து நீலம் பறந்தலைக்கோடிப் பட்டார் குருதி

வெள்ளத்துச் செங்கழுநீர் வைத்த கோன் தொண்டி வண்டு மென் பூ

வள்ளத்துத் தேம் மகிழ் கானல் வந்தார் சென்ற தேர் வழி எம்

உள்ளத்தி னோடு சிதைய வந்து ஊரும் ஒலி கடலே”[22]

என்ற பாடலிலும் தொண்டி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. இதில் தலைவியின் பிரிவுத் துயர் காட்டப்பெற்றுள்ளது. நீலம், செங்கழுநீர் போன்ற லர்கள் மலர்ந்திருக்கும் அரசனுடைய தொண்டியில் வண்டுகள் மகிழ்ந்து தேன் உண்ணும். இவ்விடத்தில் என்னைப் பிரிந்து சென்ற தலைவனின் தேர் சென்ற வழியைக் காண்கிறேன். என் உள்ளத்தை வருத்தும் நிலையில் இந்தக் கடலும் ஒலித்துக்

---

[21]பாண்டிக் கோவை பாடல்எண் 110

[22] பாண்டிக்கோவை பாடல்எண் 324

கொண்டுள்ளதே என்று தலைவி தலைவன் பிரிவில் வருத்தம் கொள்வதாகக் காட்டப்பெறுகிறது.

இவ்வகையில் தொண்டி கடற்கரைப் பட்டிணமாக ஏழாம் நூற்றாண்டிலும் விளங்கியது. இது பகைவரால் அதிகம் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையைப் பெற்றிருந்தது என்பதையும் இதன்வழி அறியமுடிகிறது.

## யாப்பருங்கலக்காரிகை உரையில் உள்ள எடுத்துக்காட்டுப் பாடலில் தொண்டி பற்றிய குறிப்பு

யாப்பிலக்கணம் வகுக்கும் நூல் யாப்பருங்கலக்காரிகை என்பதாகும். இந்நூலை இயற்றியவர் அமிர்த சாகரர், இந்நூலுக்கு உரையெழுதிவயர் பெயரும் அமிர்த சாகரர். இருவரும் ஒருவரே என்ற கருத்தும் உண்டு. இருப்பினும் யாப்பருங்கலக்காரிகையின் உரை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் உறுதிபட உரைக்கின்றனர்.

இவ்வுரையில் இடம்பெறும் ஓர் எடுத்துக்காட்டுப்பாடலில் தொண்டி பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

“மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் தொண்டியின்வாய்க்

கண்டதைத் தண்டுறைக் கண்டதொன்றுண்டு கனமகர

குண்டலம்கெண்டை இரண்டொடு தொண்டையுங் கொண்டொர் திங்கள்

குண்டலங்கெண்டை இரண்டொடு தொண்டையுங் கொண்டொர் திங்கள்

மண்டலம் வண்டலம் பக் கொண்டல் தாழ வருகின்றதே "[23]

என்ற பாடலின்வழி தொண்டியின் ஒன்பதாம் நுற்றாண்டுகால வரலாறு தெரியவருகிறது.

தொண்டியை வரகுணன் தொண்டி என்று பாண்டிய நாட்டுச் சார்புடன் இப்பாடல் காட்டுகிறது. மேலும் இரட்டை மீன்கள், அதனுடன் கூடிய சந்திரன் ஆகியன பாண்டியரின் அடையாளமாக விளங்கியுள்ளது என்பதையும் இப்பாடல் காட்டுகின்றது. தொண்டி தண் துறையாக குளிர்ச்சி மிகுந்த கடற்கரை நகரமாக விளங்கியது என்பதையும் இப்பாடல் பதிவு செய்துள்ளது.

இக்காலத்தில் வரகுணப் பாண்டியன் என்பவன் பாண்டி மண்டலத்தை ஆண்டுவந்துள்ளான். இவனின் ஆட்சிக்காலம் கி.பி. 792 ஆம் அண்டு முதல் கி.ப. 835 ஆம் ஆண்டு வரையாகும். இவனைப் பற்றிப் பட்டினத்தடிகள் குறிப்பிட்டுள்ளார். இவன் சிவபக்தி அதிகமுடையவன் ஆவான்.

இவனைத் தொடர்ந்து பாண்டிய நாட்டை கோச்சடையன் ரணதீரன், மாறவர்மன் இராஜசிம்மன், ஜடில பராந்தக நெஞ்சடையன், இரண்டாம் வரகுணப் பாண்டியன், சடையன் மாறன் (சீமாற சீவல்லபன்) போன்றோர் ஆண்டு வந்துள்ளனர். இப்பாண்டிய அரசர்களின் வரிசையில் சடையன் மாறனுக்குப்பின் வந்தவன் இராஜசிம்மன் ஆவான். இவன் பராந்தகச் சோழனுடன் ஏற்பட்ட போரில் தன் நாடு இழந்தான். பின் இலங்கை வேந்தனின் உதவி பெற்று சோழனை வெள்ளுரில் எதிர்கொண்டான். இருப்பினும் இதில் இவனுக்குத் தோல்வியே கிட்ட மதுரை நகரையும் சோழர்களிடம்

---

[23] அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, நூற்பா எண். 56 எழுதப்பெற்ற உரையில் இடம்பெறும் மேற்கோள்பாடல்.

பறிகொடுத்தான். மேலும் உதவிய இலங்கை வேந்தன் காசிபனையும் இச்சோழன் தோற்கச் செய்தான்.

பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சி நிலவியதை பாண்டி நாட்டிலுள்ள ஊர்ப்பெயர்கள் பல உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக தொண்டி அமைந்துள்ள திருவாடானை வட்டத்தில் சோழியக் குடி, சோழந்தூர், சோழப் பெரியார் போன்ற ஊர்கள் அமைந்திருப்பதைக் கொண்டு இதனை உறுதி செய்து கொள்ளலாம்.

மேலும் எம்.எஸ். கமால் தன் இராநாதபுரமாவட்டம் என்ற நூலில் பாண்டிமண்டலத்தில் சோழர் ஆட்சி நிலவியதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "இராமநாதபுர மாவட்டம் முழுவதும் பாண்டிய நாட்டின் பகுதியாக விளங்கியபோதிலும், சுமார் முன்னூறு ஆண்டுகள் சோழப் பேரரசிற்கு அடங்கிய நாடாக கி.பி. 919 முதல் இருந்து வந்ததை வரலாறு வர்ணித்துள்ளது. அப்பொழுது இந்த நாட்டின் வடபகுதி ராஜராஜ பாண்டிய நாடு, ராஜேந்திர சோழ வளநாடு என்றும் தென்பகுதி செம்பிநாடு எனவும் வழங்கப்பட்டது.. இதன் நிர்வாகத்தைச் சோழ இளவல்கள் "சோழ பாண்டியர்" என்ற பட்டத்தைச்சுமந்து, இயக்கி வந்தனர்." [24] என்ற குறிப்பு பாண்டிய நாட்டில் சோழ ஆட்சி நிலவியதை உறுதி செய்கின்றது.

**நந்திக்கலம்பகத்தில் தொண்டி பற்றிய குறிப்பு (கி.பி. 826 முதல் 850 வரை)**

நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத்தலைவன் மூன்றாம் நந்தி வர்மன் ஆவான். இவன் தெள்ளாறு வென்ற நந்திவர்மன் என்று அழைக்கப்பெற்றான். இவன் தெள்ளாறு என்னுமிடத்தில் மூவேந்தர் படைகளை வென்றான். கூடவே தன் அரியணைப் பட்டத்திற்கு ஊறு செய்தவர்களையும் வென்றான். இதுமட்டுமில்லாது பழையாறை,

[24] எம்.எஸ். கமால், இராமநாதபுர மாவட்டம், ப. 10

கடம்பூர் போன்ற இடங்களில் போர்புரிந்து வெற்றி பெற்றான். இவனுக்கும் நடையன் மாறனுக்கும் தொண்டியில் போர் நடைபெற்றது. இதில் இவன் வெற்றி பெற்றுத் தன் ஆட்சியைத் தொண்டிவரை விரித்தான்.

“தென்னன் தொண்டி நகரம் கைப்படுத்த பிரான்” என்ற குறிப்பு நந்திக்கலம்பகத்தில் இடம்பெற்றுள்ளது.

‘பகரங்கொ ணெடுந்திவலை பனி விசும்பி பறித்தெறிய பண்டு முந்நீர்

மகரங்கொ ணெடுங் கூலவரைதிரித்த மாலென்பர் மன்னர் யானை

சிகரங்கள் போன்மடியத் தெள்ளாற்றுக் கண் சிவந்தான் தென்னன் தொண்டி

நகரங்கைப் படுத்தபிரானந்தி நரபதி பணிகோனங்கள் கோவே”[25]

என்ற பாடலின் வழியாக மலைகளைப் போல யானைகள் மடிய தெள்ளாற்றில் கண் சிவக்கப் போர் செய்த நந்தி தென்னன் தொண்டி நகரைக் கைப்பற்றி அதுவரை தன் ஆட்சியை நிலை நிறுத்தினான் என்பதைப் பெற முடிகின்றது. இவ்வகையில் பல்லவர் ஆட்சி காலத்தில் தொண்டி பல்லவ மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது தெரியவருகிறது.

**<u>பிற்காலப் பாண்டியர்கள் ஆட்சி</u>**

இராஜசிம்மப் பாண்டியனுக்குபின் பாண்டியர் ஆட்சி தேய்வுற்றது. சோழ ஆட்சி பாண்டியப் பகுதிகளையும் இணைத்து ஆண்டது. விஜயபாலன், முதற் பராந்தகன், கண்டராதித்தன், இரண்டாம் பராந்தகன், உத்தம சோழன், முதலாம் இராசராசன்,

---

[25] ------------------நந்திக் கலம்பகம், பாடல்எண். 42

முதலாம் இராசேந்திரன் போன்றோர் சோழ மண்டலத்தை வெற்றியுடன் ஆட்சி புரிந்து வந்தனர்.அவர்களின் ஆளுநர்கள் பாண்டிநாட்டில் அரசு செலுத்தினர்.

முதலாம் இராச ராச சோழன் காலத்தில் தொண்டி பவித்திர மாணிக்கம் என்று அழைக்கப் பெற்றிருக்கிறது. பவித்ர மாணிக்கம் என்பது இராச ராச சோழனின் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். தொண்டியில் உள்ள சிவன் கோயிலில் உள்ள பாண்டியர் கல்வெட்டில் அவர்கள் சோழர்களுக்கு அடங்கிய நிலையில் வடிக்கப்பெற்ற கல்வெட்டில் தொண்டியைப் பவித்திரமாணிக்கம் என்றே குறித்துள்ளனர்.

இராச ராசன், ராஜேந்திரன் ஆகியோர் ஈழத்தின் முழுப் பகுதியையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தனர். குறிப்பாக ராஜேந்திரன் ஈழத்தில் இருந்த பாண்டி நாட்டு மணிமுடி மற்றும் அரசச் சின்னங்களையும் தன் வசப்படுத்தினான்.

இவர்களுக்குப் பிறகு முதலாம் இராசாதி ராசன், வீரராசேந்திரன், அதிராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கரமன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதி ராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் போன்றோர் சோழ மண்டலத்தையும் பாண்டி மண்டலத்தையும் ஆண்டனர். இவ்வகையில் பிற்கால சோழர்கள் ஆட்சி பாண்டி மண்டலத்தில் நிலவியிருந்தது.

இரண்டாம் இராசஇராச சோழன் காலத்தில் தொண்டியில் ஓர் போர் நடைபெற்றுள்ளது. இரண்டாம் இராச இராச சோழன் காலத்தில் பாண்டிய நாட்டை சோழ ஆட்சிக்கு உட்பட்டு பாராக்கிரமப் பாண்டியன் ஆண்டுவந்தான். இவனுக்கும் இவனின் உறவினனான குலசேகரப் பாண்டியனுக்கும் அரசுரிமைப் போர் ஏற்பட்டது. இப்போரில் குலசேகரப் பாண்டியன் வெற்றி பெறுகிறான்.

இந்நிலையில் பராக்கிரமப் பாண்டியனுக்கு உதவி செய்ய இலங்கை அரசன் முன்வந்தான். பராக்கிரம பாபு என்ற பெயருடைய இலங்கை அரசன் தன் படைகளைப் பராக்கிரமப் பாண்டியனுக்குத் துணையாக அனுப்பினான். இப்படைக்கும் குலசேகரப் பாண்டியன் படைக்கும் தொண்டியில் போர்நடைபெற்றது. அப்போரில் குலசேகரப் பாண்டியன் தோற்க பராக்கிரமப் பாண்டியனின் மகன் வீரபாண்டியன் பாண்டிய மன்னன் ஆனான். இவன் காலத்தில் தொண்டியில் ஒரு குளம் வெட்டப்பெற்றது. அதற்குப் பெயர் கைக்களான் குளம் ஆகும். இதற்கு மருதுபாண்டியர் காலத்தில் மதகு போன்றன சீர் செய்யப்பெற்றுள்ளன. இவன் பெயரில் வீரபாண்டிய பட்டணம் என்ற ஊரும் அமைந்துள்ளது.

இந்நேரத்தில் சோழப்படைகள் குலசேகரப் பாண்டியனுக்கு உதவி செய்ய வீரபாண்டியனை விரட்டிவிட்டு மீண்டும் குலசேகரப்பாண்டியன் அரசு கட்டில் ஏறுகிறான். இருப்பினும் மீளவும் போர் ஏற்பட்டு வீரபாண்டியன் அரியணை ஏறினான். இவ்வாறு தொடர்ந்து படையெடுப்பும், அமைதியின்மையும் பாண்டி நாட்டை ஆட்கொண்டன.

இரண்டாம் இராசஇராசனுக்குப் பின் சில அரசர்களைத் தொடர்ந்கு வந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வீரபாண்டியனிடம் இருந்த அரசு பறிக்கப்பட்டு குலசேகரப் பாண்டியனின் மகன் விக்கிரமப் பாண்டியன் அரசுரிமை பெற்றான். விக்கிரமப் பாண்டியனுக்குப் பின் அரசுரிமையை அவனின் மகனான குலசேகரப் பாண்டியன் பெறுகிறான். இவன் சோழ அரசின் மீது பகை கொண்டு மட்டியூர், கழிக்கோட்டை போன்ற பகுதிகளில் சோழப் படைகளை எதிர்கொண்டுத் தோற்றான். இருப்பினும் மீளவும் சோழ அரசினோடு உடன்பாடு கொண்டு பாண்டிய நாட்டை ஆளும் உரிமை பெற்றான்.

**பிற்காலப் பாண்டியர்கள்**

சோழ பேரரசின் காலத்தில் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்ட நிலையில் அமைதியோடு பாண்டியர் வம்சத்தினர் இருந்துவந்தனர். மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் சோழப் பேரரசு தன் வலிமையை இழக்கத் தொடங்கியது. அப்போது பாண்டி மண்டலத்தில் அடங்கியிருந்த சடையவர்ம சுந்தர பாண்டியன் வலுப்பெற்று எழுந்து, சோழநாட்டின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்புப் பாண்டியர்களுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. மூன்றாம் இராசராசசோழன் பாண்டிய நாட்டிற்குக் கப்பம் கட்டவேண்டிய நிலைக்கு ஆளானான்.[26]

முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன், பராக்கிரம பாண்டியன், அதிவீரராம பாண்டியன், போன்றோர் பிற்காலப் பாண்டியர்களாக விளங்கிப் பாண்டியநாட்டை ஆண்டனர். இக்காலத்தில் சோழ மண்டலமும் பாண்டிநாட்டின் ஆளுகைக்குக் கீழ் இருந்தது என்பது கவனிக்கத்தக்கது. இவர்களின் ஆட்சிக் காலம் கி.பி. 1251ஆம் ஆண்டு முதல் 1311 ஆம் ஆண்டு வரை நிகழ்ந்துள்ளது. இக்காலத்தில் தொண்டி நகரும் இவர்களின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதைச் சொல்லவும் வேண்டுவதில்லை.

**இசுலாமியர். ஆட்சி**

தமிழகத்தில் சங்க காலம் தொட்டு அரபியர்களுடன் வணிகத் தொடர்பு இருந்து வந்தள்ளது. பல்லவர் ஆட்சிக் காலத்தின் நிறைவுக் காலத்தில் ˙அரபு நாட்டைச் சார்ந்த இசுலாமியர்கள் தங்கள் மதம் பரப்பும் நோக்கில் தமிழகத்திற்கு வந்தனர். காயல்பட்டிணம் என்று தற்போது அழைக்கப்படும் கொற்கைத்

---

[26] முத்தமிழ்ச் செல்வன், தமிழக வரலாறு என்ற நூலில் தரப்பெற்றுள்ள கருத்துகளின் சாரம் பக். 136 முதல் 236 வரை

துறைமுகத்திற்குத் தொடர்ந்து அரபியர்கள் வருகை தந்த வண்ணமாக இருந்தனர். இது குறிக்கத்தக்க கடல் வணிகத் தலமாக விளங்கியது. இங்கு வந்த இசுலாமியர்கள் தமிழகத்திற்குள் தம் மதத்தைப் பரப்ப முயன்றனர்.

இவர்களுள் குறிக்கத்தக்கவர் சுல்தான் செய்யது இப்ராகிம் ஆவார். இவர் முகம்மது நபியின் பரம்பரையைச் சார்ந்தவர். இவர் மாலிக்காபூர் படையெடுப்பிற்கு முன்னதாகவே, பாண்டிநாட்டில் தம் மதம் பரப்ப வேண்டி பாண்டிய மன்னர்களை நேரடியாகச் சந்தித்தார். பாண்டிய நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று பாண்டிய மன்னர்கள் ஆண்டனர். சடையவர்மன் இசுலாமியர்களை அனுமதித்தான். விக்கிர பாண்டியன் அல்லது பௌத்திர மாணக்கப் பட்டிணத்தை ஆண்ட மன்னன் இசுலாமியர்களை அனுமதிக்கவில்லை.

இதன் காரணமாக சிறு போர் ஏற்பட்டது. இப்போரில் இசுலாமியர்கள் வென்றனர். இப்போர் தற்போதைய பெரியபட்டிணமாக விளங்கும் பௌத்திர மாணிக்கப்பட்டிணத்தில் நடைபெற்றது. “பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் கோட்டை, அரண்மனை, கருவூலம் ஆகியவை சுல்தான் செய்யது இபுராஹிமின் உடைமை ஆகின. இந்த மாபெறும் வரலாற்று நிகழ்ச்சி நடைபெற்றது. ஹிஜ்ரி 583 துல்கயிதா பிறை 10 (அதாவது 11.1.1188) ஆகும். பாண்டிய நாட்டு வரலாற்றில் இந்த நிகழ்ச்சி ஒரு புதிய திருப்பு முனையாக அமைந்தது”[27] என்று இதனைக் குறிக்கிறார் எம்.எஸ். கமால்.

---

[27] எஸ்.எம். கமால், நபிகள் நாயகம் வழியில், ப. 67

சுல்தான் செய்யது இப்ராகிமின் ஆட்சிக் காலம் பாண்டியர் பகுதியில் பத்தாண்டுகள் நடைபெற்றிருந்தன. அக்காலத்தில் தொண்டியில் இசுலாமியர்கள் வாழத் தொடங்கினர். இதனைக் கமால் அவர்களின் குறிப்பு எடுத்துரைக்கிறது.

‘ஏறத்தாழ 10 ஆண்டுகள் நடைபெற்ற சுல்தான் செய்யது இபுராகிமின் நல்லாட்சியினை உணர்ந்த குடிமக்கள் பலர் புதிய சமயமாகிய இஸ்லாத்தை நாளடைவில் ஏற்று வாழ்ந்து வந்தனர். வடக்கே சுந்தரபாண்டியன் பட்டணத்தில் இருந்து, மச்சூர், தொண்டி, மங்கலக்குடி, அஞ்சுக்கோட்டை, நம்புதாடை, திருப்பாலக்குடி, இராஜசிங்க மங்கலம், அழகன் குளம், ஆற்றங்கரை, வேதாளை, சிக்கல், முதுகுளத்தூர் ஆகிய ஊர்களில் முஸ்லீம்கள் பரவலாக வாழத் தொடங்கினர்.”[28] இவர்கள் அஞ்சு வண்ணம் என்றும் அழைக்கப்பெற்றனர். மனு தர்மத்தின் வாயிலாக நான்கு வருணங்கள் அமைந்திருந்தன. இவர்கள் ஐந்தாவது வர்ணமாக ஏற்றுக்கொள்ளப்பெற்றனர்.

இதன் பின்பு பாண்டியர்தம் எழுச்சி காரணமாக பௌத்திர மாணிக்கப்பட்டிணத்தைச் சார்ந்த பாண்டியனின் மகன் மிக்க படைகளுடன் போர் எடுத்து வந்தான். இப்போரில் சுல்தான் செய்யது இப்ராகிம் அவர்கள் வீரமரணம் அடைகிறார். இவர் வீரமரணம் அடைந்த நாளை ஹஜ்ரி 594 துல்கயிதா பிறை 23 (26.9.1198) என்று காட்டுகிறர் எஸ்.எம்.கமால்.[29] இவரின் உடல் ஏர்வாடியில் வைக்கப்பெறுகிறது. இந்த ஏர்வாடி பின்னாளில் வழிபாட்டுத் தலமாக மாறுகிறது.

---

[28] எஸ்.எம். கமால், நபிகள் நாயகம் வழியில், ப. 68

[29] எஸ்.எம்.கமால், நபிகள் நாயகம் வழியில். ப. 74

இவற்றின் வழியாக கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் இசுலாமியர்கள் தொண்டி நகரில் இருந்ததாக அறியவருகிறது.

கி.பி. 1311 ஆம் ஆண்டு மாலிக்காபூர் மதுரையை நோக்கிப் படையெடுத்த நிலையில் இசுலாமியர்களின் ஆட்சிக்கான முன்னேற்பாடு தோன்றிவிட்டது. இதன்பின் முகமது பின் துக்ளக் காலத்திலும் தமிழகத்தின் மீது இசுலாமியப் படையெடுப்பு நிகழ்ந்தது. முகமதுபின் துக்ளக்கின் காலத்தில் தமிழகம் இருபத்து மூன்றாவது ஆட்சி மாநிலமாக விளங்கியது. இப்பகுதி மாபார் என்று அழைக்கப்பெற்றிருக்கிறது. தில்லிக்கும் தமிழகத்திற்கும் உள்ள கால, இட இடைவெளி துக்ளக் ஆட்சி மதுரையில் வீழ்ச்சி பெறக் காரணம் ஆகியது. துக்ளக் ஆட்சியில் மதுரை ஆட்சியாளர்களாக விளங்கியவர் தன்னாட்சி பெறத் துவங்கினர். 1333 ஆம் ஆண்டில் ஜலாலுதின் என்பவர் மதுரையின் சுல்தானாக விளங்கினார். 1378 ஆம் ஆண்டுவரை மதுரையில் சுல்தான் ஆட்சி நிலவியதாக எஸ்.எம். கமால் கருதுகிறார். [30] இதன்பின் விஜயநகர ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. விஜயநகரப் பேரரசின் இளவரசான குமார கம்பண்ணன் என்பவன் கி.பி. 1370 ஆம் ஆண்டில் சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வரக் காரணமாக அமைந்தான்.

**விஜயநகர ஆட்சிக்காலம்**

இசுலாமிய மதத்தின் ஆளுமையைக் குறைக்க விஜய நகரப் பேரரசு துங்கபத்திரை ஆற்றின் கரையில் துவக்கப்படுகிறது. அரிகரன், புக்கன் என்ற இரு சகோதரர்கள் வித்யாக நகரம் என்ற பெயரில் ஏற்படத்திய அமைப்பே பின்னாளில் விஜயநகரப் பேரரசானது.

---

[30] எஸ்.எம். கமால், முஸ்லீம்களும் தமிழகமும், ப. 80

முதலாம் புக்கனுடைய மைந்தனான குமார கம்பணன்தான் மதுரையில் நடைபெற்ற சுல்தான்களின் ஆட்சியை அகற்றினான். இரண்டாம் புக்கன் என்பவனும் எஞ்சியிருந்து இசுலாமிய ஆட்சியை அகற்றினான்.

இவ்வாட்சிக்குக் கீழ், இராமேசுவரத்தை விருப்பாட்சி உடையார் என்பவர் மகா மண்டலாதிபதியாகி ஆட்சி செய்தார். 1509 ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயரின் ஆட்சி அதிகாரத்திற்குப் பாண்டி நாடு உட்பட்டது. இதன்பின் விஜய நகர ஆட்சி தேய்வுறத் தொடங்கியது. விஜயநகர ஆட்சிக்கு உட்பட்ட நாயக்கர்கள் மதுரையைத் தங்களின் ஆட்சிக்குரியதாக ஆக்கினர்.

**நாயக்கர் கால ஆட்சி.**

கி.பி. கி.பி. 1559 ஆம் ஆண்டு முதல் கி.பி. 1564 ஆம் ஆண்டுவரை விசுவநாத நாயக்கர் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாண்டார். இவரே பாளையக்காரர்களிடம் ஆட்சி அதிகாரத்தை அளித்தார். இம்மரபில் வந்த திருமலை நாயக்கர் மதுரையை மையமாக வைத்துத் தன் ஆட்சியை நடத்தினார். இவர் காலத்தில் சேதுபதிகள் இராமநாதபுரக் காவலுக்கென நியமிக்கப்பெற்றனர். இவ்வாறு நியமிக்கப்பெற்றவர்களிடம் அரசுரிமைப் போர் எழுந்தது. இரண்டாம் சடையப்பன் என்பவருக்கும் தம்பி என்பவருக்குமான அரசுரிமைப்போரில் தம்பி திருமலை நாயக்கரின் உதவியை நாடிப்பெற்று அரசுரிமையைப் பெற்றான். இருப்பினும் அரசுரிமைப் போர் ஓயவில்லை.

இதன் காரணமாக சேதுபதிகள் காத்த நாட்டை மூன்றாகப் பிரித்தார். இராமநாதபுரத்தை இரகுநாதனுக்கும், சிவகங்கையைத் தம்பிக்கும், திருவாடானையைத்

தக்கதேவனுக்கும்[31] அளிக்கும் முடிவு எடுக்கப்பெற்றது. திருவாடானைப் பகுதியில் அடங்கிய தொண்டியும் தக்கதேவனின் ஆட்சிக்கு உட்பட்டது.

திருமலை நாயக்கரின் காலத்தில் கடற்கரைப்பகுதியில் டச்சுக்காரர்களும், போர்த்துகீசியர்களும் தம் ஆதிக்கத்தை நிறுவ முயன்று வந்தனர். டச்சுக்காரர்களைப் புறக்கணித்து, போர்த்துக்கீசியர்களுக்குச் சார்பாக திருமலை நாயக்கர் செயல்பட்டார். இதன் காரணமாக போர்த்துகீசியர்கள் தமிழகத்திற்கு நுழைவது எளிதானது.

அரங்க கிருஷ்ணமுத்து வீரப்பன், இராணி மங்கம்மாள்,விஜயரங்க சொக்கநாத நாயக்கர், மீனாட்சி போன்றோர் நாயக்கர் ஆட்சியை நடத்தினர். மீனாட்சியின் ஆட்சிக்காலத்தில் அவளது ஆட்சிக்குத் துணையாகச் சென்ற கான்சாகிபு அவளைச் சிறை செய்து நாயக்கர் ஆட்சியை நிறைவு பெறச் செய்தான்.

**சேதுபதிகளின் ஆட்சிக்காலம்**

சேதுபதி மன்னர்கள் இராமன் கட்டிய அணையைப் பாதுகாக்க நியமிக்கப்பெற்றவர்கள் என்றும், நாயக்கர் காலத்தில் இராமேசுவரம் செல்லும் பக்தர்களுக்குப் பாதுகாப்பு தர நாயக்கர்களால் நியமிக்கப்பெற்றவர்கள் என்றும் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இருப்பினும் கி.பி. 1603 ஆம் ஆண்டு முதல் சேதுபதிகளின் ஆட்சி தொடக்கம் பெற்றிருக்கிறது. திருமலை சடைக்கன் என்ற இயற்பெயருடைய உடையான் ரகுநாத சேதுபதி என்பவரே சேதுபதிகளின் முதல்வர் ஆவார்.[32] இவரைத் தொடர்ந்து திருமலை சேதுபதி, கிழவன் சேதுபதி போன்ற பலரும் ஆட்சி செய்தனர். கிழவன் சேதுபதி தொண்டியில் உள்ள தர்காவிற்கு அறக்கொடை

---

[31] முத்தமிழ்ச்செல்வன், தமிழக வரலாறு, ப. 291

[32] எஸ்.எம். கமால், சேதுபதி மன்னர் வரலாறு,ப. 19

வழங்கியுள்ளார். [33]. மேலும் தொண்டியந்துறைக் காவலன் என்றும் சேதுபதியினர் அழைக்கப்பெற்றுள்ளனர்.

கி.பி. 1730 ஆம் ஆண்டில் தொண்டி சிவகங்கைச் சீமையுடன் இணைக்கப்பெற்று இருக்கிறது. இதன் காரணமாக மருது பாண்டியர்கள் இந்நகரினை மேலாண்மை செய்துள்ளனர். சிவகங்கை சரித்திரக் கும்மி தொண்டியில் மருது சகோதரர்களுக்கும் பல போர்கள் ஆங்கிலேயருக்கும் நடைபெற்றதாகக் குறிக்கிறது. கி.பி. 1795 ஆம் ஆண்டு ஏறக்குறைய சேதுபதிகளின் ஆட்சி தேய்வுறத் தொடங்கியது. ஆங்கிலேயர்களின் ஆட்சி வலுப்பெறத் தொடங்கியது.

**ஆங்கிலேய ஆட்சிக்காலம்**

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியாரின் அரசியல் தலையீடு காரணாக தமிழகத்தில் அவர்களின் ஆட்சி வளரத்தொடங்கியது. இரு நூறாண்டுகள் இவ்வாட்சி தொடர்ந்தது. இக்காலத்தில் நடைபெற்ற வேலூர் கலகம், திருவாடானை சிறை எரிப்புக் கலகம் ஆகியன தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சிக்குக் காட்டுகளாக அமைவனவாகும்.

குறிப்பாக இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட மருது சகோதரர்கள் தொண்டி நகரத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களின் ஆட்சி காலத்தில் தொண்டியில் உள்ள கைக்களான் குளம் செப்பம் செய்யப் பெற்றுள்ளது. இது குறித்த கல்வெட்டு ஒன்று கைக்களான் குளத்தின் கரையில் கிடைத்துள்ளது.

**தொண்டி கைக்களான் குளத்தின் மேற்புறம் உள்ள மதகுக் கல்வெட்டு (கி.பி. 1795)**

---

[33] எஸ்.எம். கமால், முஸ்லீம்களும் தமிழகமும், ப.92

"சிவமயம்

கலியுகம் 4896சாலி வாகன சகாப்தம் 1717 இதின் மேல் செல்லா நின்ற ராக்ஷத ஆண்டு அற்ப்பசி மாதம் 27 சோமவராமும் பஞ்சமியும் புநற் பூச நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் தொண்டிப் பட்டணம் கைக்களான் குளம் கலுங்கு கட்டி முகிஞ்சுது ராச மானியரா(ன) மருதுபாண்டியன் உபயம் அயூப் சாயபு மரைக்காயர் அதிகாரத்தில் கட்டி முடிஞ்சுது. அருணாசல ஆசாரி கட்டி முடிஞ்சுது, என்ற செ. ராசுவின் குறிப்பு இதனை உறுதி செய்யும்."[34]

இவ்வகையில் தொண்டி மருதுபாண்டியர் காலத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை உணரமுடிகின்றது.

இக்கால எல்லையில் நகரத்தார்கள் தொண்டி துறைமுகத்தைப் பயன்படுத்தினர். இங்கிருந்து பர்மா நாட்டுத் தேக்குமரங்களை இறக்குமதி செய்தனர். மேலும் இலங்கைக்குக் கடல் வழிப் போக்குவரத்து இங்கிருந்து நடைபெற்றுள்ளது. இருநூறு பேர் கொண்ட பயணிகள் கப்பல் இலங்கை நோக்கிப் பயணப்பட்டதாகக் குறிக்கின்றனர் ஆய்வாளர்கள். [35]

மேலும் இங்கு 1980 ஆம் ஆண்டு தொண்டியம்மன் கோவில் அருகில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாய்வில் ராஜராஜனின் ஒரு செப்புக்காசும், நாயக்கர்களின் இரு காசுகளும் கிடைத்துள்ளன. மேலும் செம்மை நிற, கருப்பு நிற பானையோடுகள் கிடைத்துள்ளன. காதணிகள், பச்சைக்கற்கள், சங்கு மாலைகள் ஆகியனவும்

---

[34] எஸ். எம்.கமால், (கல்வெட்டாய்வர் இராசு தந்த செய்தி) மருதுபாண்டியர், கல்வெட்டுப்படிகள். பின்னிணைப்பு. பக்க எண் இல்லை.

[35] டி.எஸ் ஸ்ரீதர், Excavation of archealogical sights in tamilnadu p.38

இவ்வகழ்வாய்வில் கிடைத்துள்ளன.[36] இதன் காரணமாகத் தொண்டியின் பழமையை உணர்ந்து கொள்ள இயலும்.

**<u>தொண்டி கடலாய்வு</u>**

தொண்டியில் கடலாய்வும் நிகழ்ந்துள்ளது. தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் சார்பில் அங்கு கடல் அகழாய்வுத் துறையில ் பணியாற்றும் அதியமான் என்பவரும் ஜெயக்குமார் என்பவரும் தமிழகக் கடற்கரையில் கிடைக்கும் நங்கூரங்கள் பற்றி ஆய்வு செய்துள்ளனர். இதன் அறிக்கை 2004 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.[37]

---

[36] டி.எஸ் ஸ்ரீதர், Excavation of archealogical sights in tamilnadu p.39

[37] Description of anchors Metal anchor 1 In 1986, a stock type iron anchor was salvaged off Thondi at a depth of 10 m (Figure 2), which weighs about one tonne. The length of the shank is about 2.0 m. The submerged portion of the teeth in the seabed is eroded. One side of the stock and the shackle that connected the chain are broken. The broken portions of the stock and shackle suggest that the anchor was detached on hitting the shipside while it was hauled up. On cleaning the top layers, engravings were found on one side of the shank and near the crown of the anchor (Figures 3 and 4). From the engraving it can be inferred that 1864 stands for the year of manufacture. The name Guerigny may imply the company that moulded the anchor. The significance of the other letters is not clearly understood

தொண்டி கடற்கரையில் இரும்பாலான ஒரு டன் எடை கொண்ட நங்கூரம் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. இதன் காம்புப்பகுதி இரண்டு மீட்டர் நீளமுடைதாகக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த சங்கிலிப் பகுதி உடைந்து இதனுடன் காணப்படவில்லை. இந்த நங்கூரத்தில் இது உருவாக்கப்பெற்ற ஆண்டு, உருவாக்கிய குழுமத்தின் பெயர்கள் ஆகியன சுட்டப்பெற்றுள்ளன. இந்த் நங்கூரம் கி.பி ஆயிரத்து எண்ணூற்று அறுபத்துநான்காம் ஆண்டு உருவாக்கப்பெற்றுள்ளது. இதற்கான புகைப்படச் சான்றுகளை இவ்வர்ய்வாளர்கள் தந்துள்ளனர்.



**Figure 2.** Iron anchor recovered off Thondi.

---

Ancient anchors off Tamil Nadu coast and ship tonnage analysis N. Athiyaman1,* and P. Jayakumar2 1Centre for Underwater Archaeology, Tamil University, Thanjavur 613 005, India CURRENT SCIENCE, VOL. 86, NO. 9, 10 MAY 2004, p.1261-1262



**Figure 3.** Engravings on the shank of anchor.



**Figure 4.** Engravings on the crown of the anchor.

இப்புகைப்படங்களை உற்று நோக்கினால் இந்நங்கூரம் உருவாக்கப் பெற்ற ஆண்டு முதலானவை தெரியவரும். இச்சான்றுகளின் காரணமாக தொண்டி துறைமுகமாக

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்காம் ஆண்டில் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

**தொண்டியின் தற்கால நிலை**

தொண்டி தற்போது இராமநாதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருவாடனை பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூராட்சியாக இது விளங்குகிறது. இது தற்போது ஒரு மீன்பிடி துறைமுகமாக விளங்குகிறது. இங்கு 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 15, 298 என்ற அளவில் மக்கள் தொகை அமைந்துள்ளது.

**தொண்டி பேரூராட்சி வரலாறு**

கி.பி. 1887 ஆம் ஆண்டு வரை தொண்டிப் பகுதி சானிடரி ஆசோசியனாக அமைந்திருந்து. ரிப்பின் பிரபு காலத்தில் ஸ்தல ஸ்தாபனச் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடன் 15.6.1888 தேதியுள்ள 368 நிர் சர்க்கார் ஆணையின்படி தொண்டி, நம்புதாளை, சின்னத் தொண்டி ஆகிய மூன்று ஊர்களும் சேர்க்கப்பெற்று யூனியன் போர்டு என்று உருவாக்கப்பெற்றது. இதன்பின் 1931 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டுவரை பஞ்சாயத்து போர்டு என்று பெயர் கொண்டு அழைக்கப்பெற்றது. 1951 ஆம் ஆண்டு முதல் பஞ்சாயத்து சட்டப்படி நிர்வகிக்கப்பெற்று வருகிறது, [38] இந்நகரில் பதினைந்தாயிரம் அளவில் மக்கள் வசித்துவருகின்றனர்.

**பிற இடங்கள்**

---

38 https://m.facebook.com/permalink.php?story_fbid=1628526574077646&id=1588505651413072

இங்கு அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலயமும், உந்தி பூத்த பெருமாள் திருக்கோயிலும் உள்ளன. மேலும் தொண்டியம்மன் என்ற அம்மன் ஆலயமும் உள்ளது. இவற்றுள் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் கீழும், மற்ற திருக்கோயில்கள் இந்துசமய அறநிலையத்துறையின் பராமரிப்பின் கீழும் உள்ளன. இவைதவிர கடற்கரையில் பல மாரியம்மன் கோயிலகள் உள்ளன.

இங்கு மூன்று தர்காக்கள் உள்ளன. அவை திறப்புக்காரர் தர்கா, புனித சேகு அபுபக்கர் சாயபு தர்கா, ஒலியுல்லா தர்கா என்பனவாகும். கடற்கரை பள்ளிவாசல், புதுப் பள்ளிவாசல், பெரிய பள்ளி வாசல் ஆகிய பள்ளி வாசல்களும் உள்ளன.

பாங்க் ஆப் இந்தியா, ஐசிஐசிஐ வங்கி. கனரா வங்கி, பாரத நிலவள வங்கி, ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகள் இங்கு அமைந்துள்ளன. தொண்டியில் அரசு மருத்துவமனை ஒன்றும் இயங்கிவருகிறது.

மீன் அங்காடி ஒன்றும் காய்கறி அங்காடி ஒன்றும் இயங்கி வருகின்றன. கடற்கரை சாலை, பெருமாள் கோவில் சாலை ஆகியன இவ்வூரின் முக்கிய சாலைகளாக விளங்குகின்றன. இங்கு பல பள்ளிகள் இயங்கி வருகின்றன. அரசு உயர் நிலைப்பள்ளி ஒன்றும், பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி ஒன்றும் கல்வி வளம் சேர்த்து வருகின்றன. இவை தவிர முனர்வா பள்ளி, இஸ்லாமிக் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, அல்ஹீலால் மெட்ரிக் பள்ளி ஆகியனவும் இங்குக் கல்விப் பணியாற்றி வருகின்றன. இங்கு கடலியல் படிப்பிற்கான மையம் ஒன்றையும் அழகப்பா பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. மேலும் இங்கு அழகப்பா பல்கலைக்கழகத்தின் சார்பில் மாலை நேர கலை அறிவியல் கல்லூரி ஒன்றும் செயல்பட்டுவருகிறது.

1999 ஆம் ஆண்டுமுதல் அருட்பெருஞ்சோதி சத்திய தருமசாலை என்ற அமைப்பின் கீழ் மக்களுக்கு வயிற்றுப்பசி தீர்க்கும் அன்னம்பாலிப்பு நடைபெற்று வருகிறது.கடற்கரைக்கு அருகில் இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு உட்பட்ட இடத்தில் நூறு ஆண்டு குத்தகை வாடகை என்ற அளவில் இந்த இடம் ஏற்கப்பெற்றுத் தற்போது இங்கு இவ்வன்னம் பாலிப்பு நடைபெற்றுவருகிறது.

சிறு துறைமுக அமைப்பும் இந்த ஊரில் ஏற்படுத்தப்பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் செயற்கைக்கோள் படம் உணர்த்தும்.




தொண்டி நகரின் வரைபடம்




**தொகுப்புரை**

தொண்டி என்ற கீழ்த்திசை நகரம் சங்க காலத்திற்கு முன்பிருந்தே இருந்தமைக்கான சான்றுகளைக் கொண்டுள்ளது. கல்வெட்டுச்சான்றுகள், இலக்கியச் சான்றுகள் இதனை உறுதி செய்கின்றன. மேலும் இந்நகரம் விடுதலைக்கு முன்பு வரை துறைமுகநகரமாக விளங்கியது என்பதும் தெரியவருகிறது. தற்போது நகருக்குள் கடல் நீர் வந்து விட்ட காரணத்தால் இயற்கையான துறைமுக அமைப்பினை இது இழந்துவிட்டது. மேலும் இந்நகரம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகில் அமைந்திருப்பதாலும் இதனைத் துறைமுகமாக அமைத்துக் கொளள இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது.

காப்பியகாலம், பக்தி இலக்கிய காலம், பல்லவர் காலம், பிற்கால பாண்டியர் காலம், விஜயநகரப் பேரரசின் காலம், நாயக்கர் காலம், சேதுபதிகள் காலம், மருதுபாண்டியர் காலம், கிழக்கிந்திய கம்பெனியின் காலம், விடுதலைப் போராட்ட காலம் என்ற எல்லா நிலையிலும் இந்நகரம் குறிக்கத்தக்க நகரமாக விளங்கியுள்ளது.

இந்நகருக்கு வருகை தந்த இசுலாமியர்கள் இந்நகரில் பரவி வாழ்வதற்கான சூழலைப் பெற்றுள்ளனர். இதன் காரணமாக இந்நகரம் இசுலாமியர்களின் கடற்கரை நகரமாகத் தற்போது விளங்குகிறது.

இதன்வழி செல்லும் கிழக்குக் கடற்கரை சாலை தற்போது இவ்வூரின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளது. இந்நகரம் பல கல்வி நிறுவனங்களைக் கொண்டு கல்விக்கு வாய்ப்பளிக்கம் நகரமாகவும் விளங்கிவருகிறது.

இங்குள்ள கோயில்கள் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின்னாக எழுப்பப்பெற்றிருக்க வேண்டும் என்பதை உணரமுடிகின்றது. இங்குள்ள தர்க்காக்களுக்கு சேதுபதி மன்னர்கள் கொடையளித்துள்ளனர்.

தொண்டியம்மன் கோவில் வளாகத்தில் 1980 ஆம் ஆண்டு அகழ்வாய்வு நிகழ்த்தப்பெற்றுள்ளது. இதில் பானைகள், சோழர் காசுகள், நாயக்கர் நாணயங்கள் கிடைத்துள்ளன.

இவ்வகையில் குறிக்கத்தக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகராகத் தொண்டி விளங்கி வருகிறது. இன்னமும் இவ்வூரில் அகழ்வாய்வு செய்யவும் கடலாய்வு செய்யவும் வாய்ப்புகள் உள்ளன.

## இயல். 2. தொண்டியின் நாட்டுப் புற வளங்கள்

கிழக்குக் கடற்கரை சார்ந்த பகுதியாகத் தொண்டி விளங்குவதால் இப்பகுதியில் மீனவர்கள் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பல நூற்றாண்டுகளாக மீன் பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். வத்தல் என்னும் சிறு படகுகளை மனித முயற்சியால் இயக்கி மீன்பிடித்து வந்துள்ளனர். பாய் மரக் கப்பல்களையும் இயக்கி வந்துள்ளனர். மீன்பிடித் தொழில் பல மனிதர்களின் உழைப்பால் நடைபெறுவது என்பதால் தங்களின் அசதி தீர அவர்கள் பாடல்களைப் பாடி வந்துள்ளனர். அப்பாடல்கள் நாட்டுப் புற இலக்கிய வளங்களாக தற்போதும் ஓரளவிற்கு நிலவி வருகின்றன.

இப்பாடல்கள் தவிர தொண்டியில் அமைந்துள்ள ஸ்ரீ வழிகாட்டு விநாயகர், ஸ்ரீ சிதம்பரேஸ்வரர், ஸ்ரீ உந்தி பூத்த பெருமாள், ஸ்ரீதொண்டி அம்மன் கோயில்கள் குறித்தும் சில வாய்மொழிக் கதைகள் நிலவி வருகின்றன.

மேலும் தொண்டி இசுலாமியர்கள் அதிகம் வாழ்ந்து வரும் பகுதியாகும். இப்பகுதியில் பல இசுலாமிய மெய்ஞ்ஞானிகள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் பலவும் வாய்மொழிக் கதைகளாக வழங்கி வருகின்றன.அவையும் தொண்டியின் நாட்டுப்புற வளங்களாகக் கொள்ளத்தக்கன.

இவை தவிர தொண்டி கடலில் தோன்றிய புயல், சீற்றம் குறித்த பதிவுகள், மீன்பிடித் தொழில் நுட்பப் பதிவுகள் போன்றன வாய்மொழி இலக்கியங்களாக இத்தொண்டி பகுதியில் வழங்கி வருகின்றன.

தொண்டி பற்றிய வரலாறுகள் வாய்மொழி வழியாகவும் பெறப்படுகின்றன. “ கிரேக்கர், ரோமர், யவனர் என மேலைநாட்டினரும் சீனர், சாவகர், சிங்களர் என கீழை நாட்டினரும் கால்பதித்த துறைமுகப்பட்டினம் தொண்டிமாநகர். இதன் கடற்கரைத் தெருவுக்குப் பெயர் ‘பன்னாட்டார் தெரு’ என்பதாகும். பல நாட்டவரும் வந்து தங்கி வணிகம் செய்த தெரு. வாசனைப் பொருட்களும் துணிமணிகளும் ஏற்றுமதியான தொண்டிச் சீமையில்தான் கீழைத்தேச பொருட்களும் தேக்கு மரங்களும் அரபுக் குதிரைகளும் வந்திறங்கியதாக வரலாறு கூறுகின்றது. ஆண்டொன்றுக்கு 25,000 குதிரைகள் வந்திறங்கியதாக ஆவணங்கள் கூறுகின்றன. மிடுக்காக நடைபயிலும் பெண்ணை இன்றும் தஞ்சைப் பகுதியில் தொண்டிக் குதிரை போல் நடக்கிறாள் எனக் கூறும்

பழக்கம் உண்டு. இங்கு வந்து கரையேறிய பர்மாவின் தேக்கு மரங்கள்தான் செட்டிநாட்டு பங்களாக்களை அரண்மனையாக்கியுள்ளன. தொண்டியிலிருந்து புறப்பட்ட மரக்கலங்கள் கிழக்கையும் மேற்கையும் இணைத்தன. 1940 – களில் இங்கிருந்து கப்பலில் இலங்கை செல்ல வெறும் இரண்டு ரூபாய் தான் கட்டணம். விடுதலை பெற்றபின் கள்ளத் தோணியில் பயணம் செய்ய இருபத்தைந்து ரூபாய்தான் கட்டணம். இலங்கையில் கள்ளத்தோணியருக்கு 'மரக்கல மினுசு' எனப் பெயர்.

தொண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே முப்பது கல் தொலைவே உள்ளது. இவ்வூர் மக்கள் முற்காலத்தில் பாய்மரக்கப்பலேறி வைகறையில் சென்று வாணிபம் செய்து விட்டு மாலையில் ஊர் திரும்பி விடுவாராம். பயணக் கட்டணம் கால்ரூபாயாம். 1890 முதல் 1915 வரை தொண்டிக்கும் கொழும்புக்கும் நீராவிக் கப்பல் போக்குவரத்து இருந்ததாம்.

காலாதிகாலமாக இங்கு வந்து சென்று கொண்டிருந்த அரபுக்கள் இஸ்லாத்தின் வருகைக்குப் பின் – முஸ்லிம்களான பின் தொண்டித் துறைமுகத்தை வசிப்பிடமாகவும் கொண்டனர். இதை உறுதிப்படுத்துவது போல் அலைவாய்க்கரையை அடுத்து ஓடாவித் தெரு, சோனகர் தெரு, மரைக்காயர் தெரு, லெப்பைத் தெரு என தெருக்கள் பெயர் பெற்றுள்ளன. 2500 ஆண்டுகளுக்கு மேலாக வெளிநாட்டினரின் விருப்பமுள்ள நகராக விளங்கிய தொண்டி மாநகரில் கால் வைத்துத்தான் பலரும் மதுரையை அடைந்துள்ளனர்.

பூர்வீகக் குடிகளின் கணக்கோடு இங்குள்ள மீனவப் படையாட்சிகளும் உள்ளனர். பனிரெண்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு சோழ நாட்டுப் படைக்கும் சிங்களப் படைக்கும் போர் நடந்தனத ஆர்ப்பாக்கத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றால் அறியக்கிடைக்கிறது. போர் நடந்த போது சிங்களர் வந்து பாளையம் இறங்கிய இடமே பிற்காலத்தில் ‘புதுப்பட்டினம்’ ஆனது.

போராளிகளாய் படைகளில் ஆட்சி செய்த படையாட்சிகளே பிற்காலத்தில் போரில்லா காலத்தில் மீன்பிடித் தொழிலில் இறங்கியுள்ளனர். வாள் பிடித்த கைகள் வாள் போன்ற வாளை மீன் பிடித்துள்ளன. ஆதிக்குடிகளோடு கடந்த 200 ஆண்டுகளுக்கு முன் இங்கு குடியேறியவர்களை அவர்களின் வீட்டுப் பெயர்கள் அடையாளம் காட்டுகின்றன. எக்க குடியார் வீடு, தெக்கத்தியார் வீடு, சேர் வாய்க்கால் வீடு, கண்ணங்குடியார் வீடு, அனுமந்தங்குடியார் வீடு, குணங்குடியார் வீடு என ஊர்ப் பெயர்களை அடையாளம் காட்டும் வீட்டுப் பெயர்கள்.

குணங்குடி மஸ்தான் எனப் பேசப்படும் ஞானியின் தந்தையின் ஊர் குணங்குடி் தாயாரின் ஊர் தொண்டி. இங்கு பிறந்து வளர்ந்து கீழைக்கரை அரூஸியா மதரசாவில் ஓதியவரே குணங்குடி மஸ்தான் எனும் சுல்தான் அப்துல் காதர். தொண்டித் துறைமுகத்தின் விரிவான வரலாறு பதிவாகாமல் இருந்தாலும் துணுக்குகளாக பல சங்கதிகள் கிடைக்கின்றன. இங்கு வந்து குடியேறிய

அரபிகளில் மொரோக்காவிலிருந்து வந்து குடியேறிய சையிது லப்பை குடும்பத்தினரைப் பற்றி பன்னூலாசிரியர் தம் இஸ்லாமியக் கலை களஞ்சியத்தில் பதிவு செய்துள்ளார்.

பல்வேறு கால கட்டங்களில் அரபு முஸ்லிம்கள் தொண்டியில் வந்து குடியேறியிருந்தாலும் 13 – ஆம் நூற்றாண்டில் அரபகத்திலிருந்து கப்பல் கப்பல்களாக கிழக்குக் கடற்கரைப் பட்டினங்களில் வந்து குடும்பங்களோடு குடியேறினர். அவற்றில் தொண்டியும் ஒன்று. இவர்களின் அடையாளத்தை நாம் நன்கறிவோம். இவர்கள் தம் மாப்பிள்ளைகளை வீட்டோடு வைத்துக் கொள்வர். சொத்துக்கள் யாவையும் பெண்களுக்கு மட்டும் உரியவை. பழவேற்காட்டிலிருந்து காயல்பட்டினம் வரை பனிரெண்டு பட்டினங்களில் இன்றும் அவர்கள் தனித்த அடையாளத்துடன் வாழ்கின்றனர்.

வெளிநாட்டுத் தொடர்புகள் உள்ள ஊர்களில் பர்மாக்காரர் வீடு, சிங்கப்பூரார் வீடு, பினாங்கார் வீடு, கொழும்பார் வீடு என குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். இவற்றில் ‘சீயத்தார் வீடு’ என வீட்டுப் பெயர் இருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தொண்டியில் சீயத்தார் வீடு என ஒரு குடும்பத்தார் உண்டு. அதென்ன சீயத்தார். சயாம்தான் சீயமாக மாறியுள்ளது. சயாம் நாட்டில் வணிகம் செய்தவர்கள் சீயத்தார் என அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். சயாமின் இன்றைய பெயர் தாய்லாந்து.

தொண்டித் துறைமுகத்திலிருந்து சென்று இலங்கை திருக்கோணமலை துறைமுகத்தில் தொழில் செய்த அலித் தம்பி மரைக்காயரின் மகன் சுல்தான் அபூபக்கர் அங்கு இரண்டு பள்ளிவாசல்களைன் நிர்மாணித்து வக்பு செய்துள்ளார். கி.பி.1770 – இல் இவர் கட்டிய பெரிய திருக்கோணமலை சோனகத் தெருவில் உள்ளது. 1781 – இல் கட்டிய சிறிய பள்ளி மரைக்காயர் பள்ளி எனும் பெயரில் என்.சி.சாலையில் உள்ளது. இரு பள்ளிகளுக்கும் வருவாய் பெற சில கடைகளையும் தோட்டங்களையும் வக்பு செய்துள்ளார். இவரின் மகன் சீனித் தம்பி மரைக்காயரும் மைத்துனர் முகம்மது அலீ மரைக்காயரும் பல நல்லறங்கள் செய்துள்ளனர். பல்வேறு பகுதி மக்கள் தொண்டியில் வந்து வாழ வழி வகுத்துள்ளனர்.

தொண்டியின் சகோதர ஊரான நம்புதாழையைச் சேர்ந்த கிதுர் முகம்மது எனும் நல்லத் தம்பிப் பாவலர் தொண்டி அரசு பொது மருத்துவமனைக்கு எதிரில் பேரும் புகழோடு வாழ்ந்தார். இலங்கை கண்டியை அடுத்த கம்பளையில் பெரும் வணிகராகத் திகழ்ந்த பாவலர் ‘இசைத்தேன்’ எனும் இசைப்பாடல் நூலை வெளியிட்டுள்ளார். ‘இசைமுரசு’ நாகூர் அனிபா தன் முதலடிகளை இவர் மூலம்தான் வைத்துள்ளார். கம்பளை, மதுரை, தொண்டி, சென்னை என பாவலரின் வாரிசுகள் வாழ்கின்றனர். பாவலரின் புதல்வர்களில் இருவர் சென்னையில் டாக்டர்களாக உள்ளனர். அவர்கள் டாக்டர் காதர் மஸ்தான்,

டாக்டர் அக்பர் அலீ. பாவலரின் பேரர் லியாக்கத்தலி ‘பாவலர்’ என்ற பெயருடனேயே தொண்டியில் வாழ்கின்றார்.ஷ

இன்றுள்ள மதுரை துணிக்கடைகளில் கணிசமானவை தொண்டிக்காரர்களுடையவை. தொண்டியின் ஊராட்சித் தலைவராக விளங்கிய ‘பாம்பாட்டி வீட்டு’ செய்யது அகமதுவின் புதல்வர்கள் துணி வணிகத்தில் பெரும் புள்ளிகள்.

குணங்குடி மஸ்தான் சாகிபின் மாமா கட்டை ஷைகின் கோரி இங்குள்ள வாழைத் தோப்பில் உள்ளது. இவர்களின் வழியில் தோன்றிய முகம்மது அப்துல் காதர் மதுரை ‘காஜியுல் குலாத்’ ஆக அரசால் நியமிக்கப்பட்டு அங்கேயே மறைந்தார். இவரின் மகன் முகம்மது இபுறாஹீம் சாகிபு தொண்டியில் காஜியாக இருந்தார். அடுத்தும் தொண்டிக்கு காஜியாக வந்தவர் முந்தைய காஜியின் புதல்வரான முகம்மது இஸ்மாயில் சாகிபே. இவர் மாபெரும் மார்க்க மேதையுமாவார்.

நாகூரை புலவர் கோட்டை என்பர். தொண்டி புலவர் பேட்டை. இங்கு பல்வேறு எழுத்தாளுமைகள் வாழ்ந்துள்ளனர்."[39] என்ற குறிப்புகள் தொண்டியின் வரலாற்றை உரைப்பன. இவற்றிற்குச் சான்றுகள் தேடப்படவேண்டிய நிலையில் இவை வாய்மொழி வரலாறுகளாகவே பதிவு செய்யப்பட வேண்டியனவாக உள்ளன.

இவற்றைத் தொகுப்பது என்பது தொண்டி மக்களின் வாழ்க்கைமுறையை அறிந்து கொள்ள உதவுகின்றது. இவ்வகையில் இவ்வியல் இவ்வாய் மொழி வளங்களைப் பதிவு செய்வதாக அமைகின்றது.

**கோயில்கள் பற்றி வழங்கி வரும் கதைகள்**

தொண்டியில் இந்து, இசுலாமியர், கிறித்துவர் போன்ற பல சமயத்தார்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வழிபாட்டுத் தலங்களும் புகழ் மிக்க நிலையில் விளங்கி வருகின்றன.

இந்து சமயம் சார்ந்த நிலையில் அருள்மிகு வழிகாட்டு விநாயகர், அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு உந்தி பூத்த பெருமாள் திருக்கோயில், அருள்மிகு தொண்டியம்மன் திருக்கோயில் போன்றன குறிக்கத்தக்கனவாக உள்ளன. இவை தவிர தொண்டியின் கடற்கரைப்

[39] Fernando Joseph Dev Anandh, http://www.heritagevembaru.org/2018/08/blog-post_26.html

பகுதியில் பல அம்மன் கோயில்கள் தற்காலத்தில் எழுப்பப்பெற்றுள்ளன. கடல் சூழ்ந்த மாரியம்மன், சந்தன மாரியம்மன் போன்ற கோயில்கள் தற்காலத்தில் எழுப்பப்பெற்றுள்ளன.

இவற்றில் முன்பு கூறியன பழமை வாய்ந்தன என்பதால் அவை பற்றிய தகவல்கள் பின்வரும் நிலையில் விவரித்துரைக்கப்பெறுகின்றன.

**அருள்மிகு வழி காட்டு விநாயகர்**

அருள்மிகு வழி காட்டு விநாயகர் திருக்கோயில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ளது. இதனருகில் அருள்மிகு தொண்டியம்மன் கோயிலும் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள விநாயகரை ஆதி சங்கரர் பணிந்து பாடியதாக ஒரு குறிப்பு காணப்படுகிறது. இந்தக் கணபதிக்கு மார்க கணபதி என்றும் பெயருண்டு. மார்க்கம் என்ற வடமொழிச் சொல்லுக்கு வழி என்று பொருள்.

'டுண்டி' என்ற வடமொழிச் சொல்லிற்குத் தொந்தி வயிறு என்று பெயர். காசியில் விசுவநாதர் கோயிலுக்கு முன்புறத்தில் உள்ள விநாயகர் 'டுண்டி' விநாயகர் என்று அழைக்கப்பெறுகிறார்.'டுண்டி' என்ற பெயர் ஓரளவிற்குத் 'தொண்டி' என்பதுடன் ஒத்து ஒலிப்பதால் காசி விநாயகருக்கும், தொண்டிக்கும் தொடர்பு ஏற்படுத்தும் வாய்மொழிக் கதைகள் இங்கு நிலவி வருகின்றன.

**வாய்மொழிக் கதை 1**

இராமபிரான் இலங்கைக்கு முதன் முதலில் அணை கட்ட தொண்டியைத் தேர்ந்தெடுத்தார். இதற்காக வழிபடு விநாயகரைத் தரிசித்துத் தன் பணியைத் தொடங்க இராமர் முயன்றார். ஆனால் தொண்டி விநாயகர் “இங்கிருந்துப் பாலம் கட்டுவதைவிட, இன்னும் சற்றுத் தள்ளிச் சேதுக்கரையில் கட்டினால் இலங்கையின் கோட்டைப் பகுதிக்கே நேரில் செல்லலாம்” என்று சொல்லி இராமனுக்கு வெற்றி கிடைக்க வாழ்த்தினாராம். இதன் காரணமாக இராமன் சேதுக்கரையில் பாலம் கட்டத் தொடங்கி அதன் வழியாக இலங்கை சென்று அவர் சீதையை மீட்டார் என்பது தொண்டியுடன் தொடர்புடைய இராமயாண இதிகாச வாய்மொழிக் கதை.

இவ்வளவு சக்தி வாய்ந்த பிள்ளையாரை ஆதி சங்கரர் வணங்கியுள்ளார். அவர் “கணேச பஞ்சரத்னம்” என்ற நிலையில் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் தொண்டியில் உள்ள வழிகாட்டு விநாயகருக்கு உரியன என்று தொண்டியின் மக்கள்[40] உரிமை கொண்டாடுகின்றனர்.

உப்பூரில் உள்ள விநாயகரே இராமனுக்கு அருள் செய்த விநாயகர் என்று கருதுவாரும் உண்டு. மேலும் ஆதி சங்கரர் பாடிய கணேச பஞ்சரத்னம் மதுரையில் பாடப்பெற்றது என்று கருதுவாரும் உண்டு.

[40] தகவலாளி கருப்பையா தந்த தகவல்

ஆனால் காமகோடி. ஆர்க் என்ற இணையதளம்[41] இக்கணேச பஞ்சரத்னம் தொண்டியில் பாடப்பெற்றது என்று குறிப்பிடுகிறது. கணேச பஞ்சரத்னத்தின் வடமொழி ஒலி வடிவமும் அதன் பொருளும் பின்வருமாறு.

“முதாகராத்தமோதகம் ஸதா விமுக்திஸாதகம்

கலாதராவதம்ஸகம் விலாஸிலோகரக்ஷகம்

அநாயகைகநாயகம் விநாசிதேபதைத்யகம்

நதாசுபாசுநாசகம் நமாமி தம் விநாயகம்”

மனம் மகிழ்ந்து, கையில் மோதகம் ஏந்தி, எப்போழுதும் மோட்ஷம் நல்குபவரான விநாயகரை வணங்குகிறேன். அவர் சந்திரப்பிறை அணிந்தவர். அமைதி கொண்டோரைக் காப்பவர். துணையற்றவருக்கு துணையானவர். யானை அரக்கனைக் கொன்றவர் வணங்கியவரை குறைதீர்த்துக்காப்பவர்.

நதேதராதிபீகரம் நவோதிதார்கபாஸ்வரம்

நமத்ஸுராரிநிர்ஜரம் நதாதிகாபதுத்தரம்

ஸுரேச்வரம் நிதீச்வரம் கஜேச்வரம் கணேச்வரம்

மஹேச்வரம் ஸமாச்ரயே பராத்பரம் நிரந்தரம்

விநாயகரை வணங்காதவருக்கு விநாயகர் பயமானவர். அவர் உதித்தெழும் சூரியன் போல் விளங்குகின்றார். தேவரும் அசுரரும் அவரை

[41] http://www.kamakoti.org/tamil/adi1.htm

வணங்க, வணங்கியவரின் தீயதைப் போக்கி, தேவர்களுக்கும், நவநிதி திரளுக்கும், கஜாஸுரனுக்கும், கணங்களுக்கும் தலைமை தாங்கி பரம்பொருளாய் நிற்கும் அவரை எக்கணமும் சரணம் அடைகிறேன்.

ஸமஸ்தலோகதங்கரம் நிரஸ்ததைத்யகுஞ்சரம்

தரேதரோதரம் வரம் வரேபவக்த்ரமக்ஷரம்

க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்

மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்

கஜாஸுரனை அழித்து அகில உலகுக்கும் நன்மையைச் செய்தவர் விநாயகர். அவர் பருத்த தொந்தியும், சிறந்த யானை முகமும் கொண்டவர். அவர் கருணை புரிபவர். அவர் பொறுமையானவர். அவர் மகிழ்ச்சி, தோன்ற புகழ் சேர்ப்பவர். வணங்கியவருக்கு நன்மனம் தந்து விளங்கும் அவரை வணங்குகின்றேன்.

.அகிஞ்சநார்திமார்ஜநம் சிரந்தநோக்த்திபாஜநம்

புராரிபூர்வநந்தநம் ஸுராரிகர்வசர்வணம்

ப்ரபஞ்சநாசபீஷனம் தநஞ்ஜாதிபூஷணம்

கபோலதாநவாரணம் பஜே புராணவாரணம்

விநாயகர் ஏழைகளின் துன்பத்தைத் துடைத்து உபநிஷதங்கள் போற்ற நிற்பவர். பரமசிவனின் மூத்தமகனாய் அசுரர்களின் கர்வத்தை அடக்கியவர். மதநீர் பெருகும் பழம்பெரும் வாரணமுகத்தவனை வணங்குகிறேன்.

நிதாந்த காந்ததந்த காந்தி மந்தகாந்தகாத்மஜம்

அசிந்த்யரூபமந்த ஹீநமந்தராயக்ருந்தநம்

ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்

தமேகதந்தமேவ தம் விசிந்தயாமி ஸந்ததம்

விநாயகர் மிக அழகான தந்தங்களைக் கொண்டவர். அவர் யமனை அடக்கிய பரமசிவனின் புதல்வர். அவர் எண்ணுதற்கரிய உருவம் கொண்டவர். முடிவில்லாதவர். அவர் இடையூறுகளைத் தகர்ப்பவர். அவர் யோகிகளின் மனதில் குடிகொண்டவரான அந்த ஏகதந்தரை எப்பொழுதும் தியானம் செய்கிறேன்.

மஹாகணேசபஞ்சரந்தமாதரேண யோந்வஹம்

ப்ரஜல்பதி ப்ரபாதகே லமுகு ஸ்மரந் கணேச்வரம்

அரோகதாமதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்

ஸமாஹிதாயுரஷ்டபூதிமப்யுபைதி ஸோசிராத்

இந்த கணேச பஞ்சரத்னத்தை எவன் தினமும் காலையில் அருள்மிகு கணபதியை மனதில் தியானித்துக் கொண்டு பாராயணம் செய்கிறானோ, அவன்

நோயின்றி குறை யேதுமின்றி, நல்ல கல்விகளையும் நன்மக்களையும், அஷ்ட ஐஸ்வர்யங்கள் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

இவ்வாறு கணேச பஞ்சரத்னப் பாடல்கள், கணபதியைத் துதிக்கும் நிலையில் அமைந்துள்ளன. இப்பாடல்களில் இந்த இடத்தில் பாடப்பெற்றன என்ற நிலையில் குறிப்பு இல்லாத காரணத்தால் இதனைப் பலரும் தம் ஊர் சார்ந்து அமைத்துக்கொள்கின்றனர்.

**அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில்**

தொண்டியின் பழமையான கோயில்களில் ஒன்று அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில் ஆகும். இக்கோயில் பதினாறாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது. இக்கோயில் மூலவராக சிதம்பரேஸ்வரர் விளங்குகிறார். அம்மனாக சிவகாமி அம்மை விளங்குகிறாள். விநாயகர், தட்சிணா மூர்த்தி, சுப்பிரமணியர், சண்டிகேசுவரர், நவகிரகங்கள், பைரவர் போன்ற தெய்வங்கள் திருச்சுற்றுத் தெய்வங்களாக விளங்குகின்றன. இதனை இராமநாதபுர சமஸ்தானம் நிர்வகித்து வருகிறது.[42]

இக்கோயிலில் பொது வழிபாடுகளும், சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

**அருள்மிகு உந்தி பூத்த பெருமாள் கோயில்**

[42] தகவலாளி சண்முகம் தந்த தகவல்

அருள்மிகு உந்தி பூத்த பெருமாள் கோயில் தொண்டி புதிய பேருந்து நிலையத்திற்குச் சற்று அருகில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஸ்ரீதேவி, பூதேவி உடன் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். அருள்மிகு ஆண்டாள், அருள்மிகு அனுமன், அருள்மிகு கருடன் போன்ற கடவுளர்கள் சுற்றுப்பிரகார தெய்வங்களாக விளங்குகின்றனர்.

இக்கோயில் பதிமூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில் என்று கருதப்படுகிறது. இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

பிரம்மா எப்பொழுதும் திருமாலின் உந்தியில் இருப்பவர் ஆவார். அவர் இல்லாமல் இருக்கும் உருவமாக தொண்டியில் அருளும் பெருமாள் காட்சி தருகிறார். பிரம்மா தன் பிறப்பிடத்தைக் கண்டு வணங்குவதற்காகவே தோன்றிய பெருமாள் இவர் என்பது இங்குச் சொல்லப்படும் வாய்வழிச் செய்தியாகும்.

இங்கு வந்துத் தரிசிக்கும் மக்கள் அனைவரும் பிரம்மாவின் சாயலைப் பெற்றவர்கள் என்ற கருத்தும் உண்டு. பிரம்மா நாள்தோறும் வணங்குவதால் இங்கு வரும் மக்களால் பிரம்மப் படைப்புகளாக விளங்குவதால் பிரம்ம உருவங்களாகக் கொள்ளத்தக்கவர்கள் என்பது இவ்வாய்வழிச் செய்தியின் தலைமுடியாக உள்ளது.

**அருள்மிகு தொண்டி அம்மன்**

தொண்டி என்ற ஊரின் பெயரைக் கொண்டு விளங்கும் இத்தெய்வம் வடக்கு நோக்கிச் சுடுகாட்டை அடுத்துக் கோயில் கொண்டுள்ள தெய்வமாக விளங்குகிறது. இக்கோயிலின் வெளிப்புறத்தில் பதினெட்டாம்படிக் கருப்பர் சந்நிதி உள்ளது.

இவ்வம்மன் பற்றிய வாய்வழிக் கதை ஒன்று உள்ளது. "பராசர முனிவர் சத்யதேவி அம்மனைத் தரசிக்க வேண்டினார். அவ்வம்மன் காமேஸ்வரம், தொண்டி ஆகிய இரு இடங்களில் காட்சி தருவதாக அவருக்கு அறிவுறுத்த அவர் படகில் தொண்டிக்கு வந்து சேர்ந்தார். அங்குச் சத்யதேவி தொண்டியம்மனாகக் காட்சி தந்துள்ளார்[43]. இவ்வாறு சக்தி மிகுந்த தெய்வமாகத் தொண்டியம்மன் விளங்குகிறது.

இவ்வம்மனுக்கு எருது கட்டுவிழா நடைபெறுகிறது. இவ்வம்மனைச் சமுத்திர ராஜா கடல் வாழ் உயிரினங்களையும், கடல் சார்ந்து வாழ் மக்களையும் பாதுகாக்கச் சொல்லி வேண்டி வழிபட்டதாக ஒரு வாய்மொழிக் கதை உலவுகிறது.[44]

இவ்வம்மன் ஒரு முறை புயல் ஏற்பட்ட காலத்தில் கடலில் திரை தெரியாத கப்பல்களுக்கு ஒளியைப் பாய்ச்சி தொண்டிக் கடற்கரைக்கு அழைத்து வந்ததாக ஒரு கதை வழங்கி வருகிறது. [45]

---

43 தகவலாளி பாண்டி தந்ததகவல்

44 தகவலாளி தொண்டியம்மாள் தந்த தகவல்

45 சத்குரு வேங்கடராமசாமி, தொண்டி திருத்தல மகிமை, ப. 10

இவ்வாறு தொண்டியம்மன் சக்தி மிகுந்த தெய்வமாகத் தொண்டிப் பகுதியில் விளங்குகின்றது.

**தொண்டியில் உள்ள தீர்த்தங்கள்**

தொண்டியில் பல்வேறு தீர்த்தங்கள் உள்ளன. கடலே ஒரு தீர்த்தமாகும். இத்தீர்த்தத்தின் பெயர் தேவசந்தித் தீர்த்தம் என்பதாகும்.[46] இவைதவிர காயத்ரீ கட்டம், பராசர துறை போன்றனவும் தீர்த்தங்களாக விளங்குகின்றன.

**கடல் தீர்த்தம் என்ற தேவசந்தி தீர்த்தம்**

தொண்டியில் உள்ள கடல் தீர்த்தம் ˙தேவ சந்தி தீர்த்தம் என் அழைக்கப்பெறுகிறது. இந்தத் தீர்த்தம் கங்கா தீர்த்தம் என்றும் அழைக்கப்பெறுகிறது. இதற்கு நிஸ்ஸங்க தீர்த்தம் என்ற பெயரும் இருந்து வந்ததாக அறியமுடிகின்றது.

காலை, உச்சிப்பகல், மாலை ஆகிய மூன்று சந்திகளில் சந்தியா வந்தனம் செய்து புண்ணியம் பெறும் கடல் தீர்த்தமாக இத்தீர்த்தம் விளங்குகின்றது. இந்தச் சந்தி காலங்களில் தேவர்கள், பிதுர்கள், குருவக்கள், தெய்வத் திருவருள் ஆகியன மிகும் என்ற நிலையில் இத்தீர்த்தில் குளித்து சந்தியாவந்தனம் செய்துப் புண்ணியம் பெறும் நிலை இக்கடல் தீர்த்தத்திற்கு உண்டு.

---

[46] சத்குரு வேங்கடராமசாமி, தொண்டி திருத்தல மகிமை. ப.5

தொண்டியில் சேறு, சகதி இல்லாது அபூர்வமாய் ஊரை ஒட்டிக் கிழக்கில் நீண்டிருக்கும் உத்தமத் தீர்த்தம் தேவ சந்தி தீர்த்தம் ஆகும்.

மேலும் திருப்பரங்குன்றத்தின் சுனையில் தோன்றும் அதிசய மீன்கள் போன்ற மீண்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் இங்குத் தோன்றுகின்றன. இம்மீன்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த கார்த்திகைப் பெண்களை நினைவூட்டுவனவாக உள்ளன. இம்மீன்கள் கந்தலோக மீன்கள் ஆகும். இவற்றைத் தெளிமீன்கள் என்றும் சிலர் குறிப்பிடுவர். கார்த்திகை நட்சத்திரத்தன்று திருப்பரங்குன்றத்தில் இருந்து இந்தக் கடலுக்கு இம்மீன்கள் வருவதாகக் குறிக்கப்பெறுகிறது.[47]

**காயத்ரி கட்டம்**

காயத்திரி கட்டம் என்றொரு கட்டம் என்ற நீராடும் இடம் பழைய காலத்தில் தொண்டியில் இருந்துள்ளது. வாலி இங்கு வந்து காயத்ரீ கட்டத்தில் நீராடி சந்தியாவந்தனம் செய்துள்ளான். தற்போது இது மறைந்துவிட்டது.

**பராசரர் துறை**

சத்யதேவியைத் தரிசிக்க வேண்டிப் படகில் பராசரர் வந்து இறங்கியத் துறை பராசரர் துறை எனப்படுகிறது.

[47] சத்குரு வேங்கடராமசாமி, தொண்டி திருத்தல மகிமை ப. 8

இவ்வாறு பல்வேறு தீர்த்தங்களை உடையதாகத் தொண்டி விளங்குகின்றது.

**<u>தொண்டி தர்ம தேவதை அன்ன சத்திரம்</u>**

தொண்டி நகரம், தேவ சந்தி தீர்த்தம் உள்ள இடம் என்பதால் இங்குப் பல மடங்கள் இருந்திருக்கின்றன. மருது பாண்டியர் தொண்டியில் மடம் கட்டியதாகக் குறிப்பு உள்ளது.

தேவகோட்டையைச் சார்ந்த அரு.லெ குடும்பத்தார் தொண்டியில் தர்மதேவதை அன்ன சத்திரம் என்ற ஒன்றை நிறுவியுள்ளனர். பராசரர் சத்ய தேவியைத் தரிசிக்க வந்தார் என்ற கதையின் வழியே தொண்டிக்கும் தர்ம தேவதைக்கும் தொடர்பு உள்ளதை அறியமுடிகின்றது. இவ்வகையில் சத்ய தேவி என்ற பெயர் தனித்தமிழ்ப் பெயராகி, தர்ம தேவதை என்ற பெயரில் அன்னசத்திரம் அமைக்கப்பெற்றுள்ளது. ஒட்டுக் கூடமாக உள்ள இந்த சத்திரத்தில் தர்ம தேவதையைக் காட்டும் வகையில் ஒரு அணையா விளக்கு உள்ளது. இந்தத் திருவிளக்கு ஏற்றி தர்மதேவதைக்கு வழிபாடு நடக்கிறது.

இச்சத்திரம் வைத்துள்ளவர்கள் வீட்டில் துக்க காரியம் ஏதேனும் நடந்தால் அன்று அந்த விளக்கு தானாக அணைந்துவிடும் என்ற நம்பிக்கை முன்னர் இருந்ததாகத் தகவலாளி முத்துக்கருப்பன் குறிப்பிடுகிறார்.

மேலும் இச்சத்திரத்தில் இருந்து அரசி ஏற்றுமதி செய்யப்பெற்றுள்ளது. இக்குடும்பத்தாருக்கு இரு கப்பல்கள் இருந்ததாகவும், அக்கப்பல்களில் அரிசி

ஏற்றுமதி செய்து இலங்கைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ததாகவும் தகவலாளி முத்துக்கருப்பன் குறிப்பிடுகிறார்.

நகரத்தார்கள் அண்மைக் காலம் வரை இலங்கைக்குக் கடல் வணிகம் செய்துள்ளனர் என்பதற்கு ஒரு சான்றாக இந்த தர்ம தேவதை சத்திரம் அமைந்துள்ளது. இச்சத்திரத்திற்கு இருபது ஏக்கர் நிலம் தற்போது இச்சத்திரம் உள்ள இடத்தைச் சுற்றி இருந்ததாகவும் தகவலாளி தகவல் தருகிறார். தற்போது சிறு இடம் மட்டுமே உள்ளனது.

அரிசி என்பது பசி நீக்குவது. தர்ம தேவதையும் பசி நீக்குபவள். அறம் செய்பவள். அரிசி வணிகம் செய்தவர்கள் தர்மதேவதை பெயரால் இந்தச் சத்திரத்தை நிர்வகித்து வருகின்றனர். அரசியல் நெருக்கடி அறிவிக்கப்பெற்ற காலத்திலும் இங்கு மதிய வேளையில் அன்னதானம் செய்யப்பெற்றுள்ளது.

மேலும் இதன் அருகில் உள்ள உந்தி பூத்த பெருமாள் கோயில் இச்சத்திரத்தாரின் பராமரிப்பில் இருந்துள்ளது. பெருமானனேந்தல் லட்சுமண ஐயர் தனது பொருட்செலவில் கட்டிய இக்கோயில் அவருக்குப் பின் வாரிசு இல்லாததால் இக்குடும்பத்தாருக்கு தான அடிப்படையில் தரப்பெற்றுள்ளது. பின்னாளில் இக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை பொறுப்பில் வந்துள்ளது.

இவ்வகையில் தர்ம தேவதை அன்னசத்திரம் பல செய்திகளுக்கு உண்மையான சான்றாக இன்றும் நிலவிவருகிறது.

**<u>தொண்டி கழிமுகப்பகுதி</u>**

தொண்டியில் மணிமுத்தாறு, பாம்பாறு போன்றன கலக்கின்றன. கொட்டாம்பட்டி நத்தம் பகுதிகளில் உள்ள பன்னியாமலை, கருமலை, பூலாமலை, மொட்டமலை, கரந்தமலை ஆகிய மலைக்காடுகளில் உற்பதியாகிற பல காட்டாறு ஓடைகள் ஒன்று சேர்ந்து திருமணிமுத்தாறு நதியாக உருப்பெறுகிறது. மதுரை பூதக்குடி, அம்மாபட்டி, குன்னாரம்பட்டி, உடம்பட்டி, கருங்காலங்குடி, சிவல்பட்டி, கரையிபட்டி, கொங்கம்பட்டி, எரிச்சிமலம்பட்டி வழியாக சிவகங்கை மாவட்ட திருப்பத்தூர் கடந்து நடுவிகோட்டை அருகே பாம்பாறு என்ற பெயரில் பிரான்மலை பகுதியில் இருந்து வரும் மணிமுத்தாறு ஆற்றுடன் கலந்து பம்பாறு என்ற பெயருடன் தேவகோட்டை வழியாக சென்று இறுதியாக மீமிசல் தொண்டி இடையேயுள்ள அலையாத்தி காடுகளை தழுவி வங்க கடலில் சென்று கலக்கிறது.

இங்கு, இசுலாமிய வழிபாட்டிடங்கள் பற்றிய வாய்மொழிக் கதைகள் பலவும் இங்கு நிலவுகின்றன. அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

**பல்லக்கு அப்பா**[48]

ஹிஜ்ரி ஆண்டு 1268 ரபியுல்அவ்வல் மாதம் பிறை 12-ல் நூர் முகம்மது, பாத்திமா தம்பதியரின் மகனாகக் கீழக்கரையில் பிறந்தவர் ஹபீப் முகம்மது சதக்கத்துல்லா என்பவர் ஆவார். இவர் பல அற்புதங்கள் செய்ததாக வாய்மொழிக் கதைகள் வழங்கி வருகின்றன.

---

[48] ஜே.எம். சாலி, தி இந்து, மார்ச் 3, 2016

இவருக்கு மூன்று வயது ஆனபோது இவரின் தந்தையார் இறந்து விடுகிறார். இருப்பினும் இவரின் கல்வி தடைபடாமல் தொடர்ந்தது. இவர் தன் ஞானக் கல்வியை கீழக்கரை இறைநேசர் மாப்பிள்ளை லெப்பை ஆலிமிடம் பெற்றார். அவரிடம் தீட்சை பெற்று ஆன்மிகப் பணிகளில் ஈடுபட்டார்.

பல்லக்குத் தம்பி தம்முடன் படித்த கல்வத்து நாயகத்துடன் இலங்கைக்குச் சென்று வந்தார். மேலும் இவர் கீழ்த்திசை நாடுகளுக்கும் சென்று அற்புதங்களை நிகழ்த்தினார். இவர் தன் இருபத்து மூன்று வயதில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார். இவர் ஞானநெறியில் ஈடுபட்டிருந்தாலும் இல்லற வாழ்வைப் புறக்கணிக்கவில்லை. கல்வி பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே ஆயிஷா அம்மையாரை மணம் புரிந்தார். சில ஆண்டுகளில் மனைவி காலமானதால் அவருடைய தங்கை சேமு நாச்சியார் எனும் ஷைமாவைத் துணைவியாக்கிக் கொண்டார்.

இவர் ஒருமுறை தொண்டி நகருக்கு ஒரு பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து ஊர் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தங்கள் ஊரில் அடக்கமாகியிருக்கும் அவருடைய பாட்டனார் அபூபக்கர் வலியுல்லாவை தரிசிக்கவே அவர் கீழக்கரையிலிருந்து பல்லக்கில் வந்தார்.

இதன் காரணமாக இவர் பல்லக்கு வலியுல்லா என்று மக்களால் அழைக்கப்பெற்றார். அந்தப் பெருமகன் தர்காவில் அமர்ந்தபடி அரபு

மொழியில் பாட்டனாரின் புகழைப் பாடினார். கவிதை ஊற்றெடுத்துப் பெருகியது. தொண்டி மக்கள் அவருடைய பாடலைக் கேட்டு நெகிழ்ந்தனர்.

இறைவனின் பேரன்பில் மூழ்கியவராகப் பல்லக்கு வலியுல்லா இருந்ததால் உயிரினங்களின் பேச்சைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். ஒருமுறை அவர் புறாவைச் சுட்டிக்காட்டி, அது தம்மை 'காத்தமுல் வலி' என்று சிறப்பித்துச் சொல்வதாக மற்றவர்களிடம் கூறினார். அவ்வாறே ஒரு வண்டைச் சுட்டிக்காட்டி, அது தம்மை "சையதுல் ஆலிம்" என மொழிவதாகத் தெரிவித்தார்.

இன்னொரு சமயம் தமது உடம்பில் அமர்ந்திருந்த ஈக்களைக் காட்டி அவை தம்மை இறைவனின் நல்லடியார்-மூமின்- என்றும், இறைநேசர் என்றும் சொல்கின்றன என்றார். பல்லக்கு அப்பா ஒருமுறை முத்துப்பேட்டைக்குச் சென்றிருந்தபோது ஒருவரின் இல்லத்தில் புனுகுப் பூனையைக் கண்டார். அது கூண்டில் அடைக்கப்பட்டிருந்தது. அதை சற்றுநேரம் பார்த்துவிட்டு, அது இங்கு பிடித்து வரப்பட்ட விதத்தை தம்மிடம் கூறுவதாகச் சொன்னார். அருகில் இருந்தவர்கள் விவரம் கேட்டபோது, எந்த வனப்பகுதியில் யாரால் அது பிடித்துவரப்பட்டது என்பதை எடுத்துச் சொன்னார்.விசாரித்துப் பார்த்ததும் நடந்தது அதுதான் என்பது தெளிவாயிற்று. இதன்வழி இவர் விலங்கு, பறவைகளிடம் பேசும் சக்தி பெற்றவர் என்பதை உணரமுடிகின்றது.

ஒரு முறை கீழக்கரை ஓடைக்கரை பள்ளிவாசலில் மவ்லு□து ஓதும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது பல்லக்கு அப்பா

இடையிடையே குறுக்கிட்டு என்னென்ன ஓதவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் குறித்த நேரத்தில் நிகழ்ச்சியை முடிக்க முடியாது என்ற எண்ணத்தில், அவரைச் சிலர் அங்கிருந்து அழைத்துச் சென்று அருகிலிருந்த

அறையில் பூட்டி வைத்துவிட்டு வந்தார்கள். மவ்லூது ஓதி முடிந்ததும் வந்திருந்தவர்களுக்கு வழங்கப்படும் தப்ரூக் உபசாரப் பொருள்கள் அந்த அறையில்தான் வைக்கப் பட்டிருந்தன. ஏற்பாட்டாளர்கள் அறையைத் திறந்தார்கள். தப்ரூக் பொட்டலங்கள் இருந்தன, ஆனால் அடைக்கப்பட்டிருந்த பல்லக்கு வலியுல்லாவைக் காணவில்லை. தெருவில் அவர் சென்றுகொண்டிருப்பதைப் பார்த்து அனைவரும் வியப்படைந்தனர்.

கீழக்கரை பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றுவதற்காகப் பல்லக்கு அப்பா அங்கசுத்தி செய்துகொண்டிருந்தார். அப்பொழுது நீர்த் தடத்திலிருந்து சில முறை தண்ணீரைக் கைகளால் அள்ளி வீசினார். அதைப் பார்த்த சிலர் காரணம் கேட்டார்கள். தொண்டியில் ஒரு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் சில வீடுகள் பாதிக்கபட்டுள்ளன. அந்தத் தீயை அணைப்பதற்காவே இவ்வாறு செய்தேன். தீ இப்போது அணைந்துவிட்டது என்று கூறினார். அதை நம்பாத சிலர், உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் விசாரித்துவர ஏற்பாடு செய்தார்கள். தொண்டியில் தீ விபத்து ஏற்பட்டு சற்றுநேரத்தில் தானாகவே அது அணைந்து விட்டது என்ற தகவல் அவர்களுக்குக் கிடைத்தது.

பல்லக்கு அப்பா தஞ்சை மாவட்டத்தில் இறைநேசர்கள் உறையும் ஊர்களுக்கு அவ்வப்போது செல்வார். அதிராம்பட்டினத்துக்கு ஒருமுறை சென்றிருந்தபோர்து அவரைப் பற்றி ஒருவர் இகழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார். ஞானதிருஷ்டியினால் அதை உணர்ந்து கொண்டார் அப்பா. அந்த நபர் ஒரு நாள் நடைபெற்ற கூட்டத்தில் நின்றிருந்தார். அவரை அடையாளம் கண்டுகொண்ட அப்பா அருகில் வரும்படி அழைத்தார். இதை எதிர்பார்த்திராத அவர் பயந்துகொண்டே பக்கத்தில்வந்து நின்றார். அவரிடம் இவர் “மனம்போன போக்கில் பேசிக்கொண்டுத் திரியாதே! நாவை அடக்கிப்பேசி நல்லவனாக மாறு!” என்றார். ஞானியான அவரை பழித்துரைத்து வந்ததற்காக அந்த நபர் வருந்தித் திருந்தினார்.

இவர் தான் உயிர் துறப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன்னரே தமது முடிவு நேரத்தை அறிவித்தார். ஏராளமான அன்பர்கள் வெளியூர்களிலிருந்து வருவார்கள்! என்றார். அதன்படி ஹிஜ்ரி 1360-ம் ஆண்டு துல்காயிதா மாதம் இருபத்தைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை உலகைத் துறந்தார். அன்று வழக்கம்போல் காலை உணவருந்திய பிறகு ஜும்மா தொழுகை நேரத்தில் மறைந்தார். கீழக்கரை புது பள்ளிவாசலை அடுத்துள்ள தோட்டத்தில் பல்லக்கு அப்பா நல்லடக்கம் செய்யப்பட்டார். இவ்வாறு பல்லக்கு அப்பா பற்றிய பல நிகழ்வுகள் இன்றும் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன.

மேலும் பல இசுலாமிய வழிபாட்டிடங்கள் தொண்டியில் உள்ளன. அவை பற்றிய செய்திகள் பின்வருமாறு.

“அண்மைக்கால வரலாற்றில் கூட தொண்டி மாநகர் இடம் பிடித்துள்ளது. சிவகங்கையை ஆண்ட மருது பாண்டியர்கள் ஆங்கிலேயர்களுக்கு அஞ்சி தொண்டிக்கு வந்த போது மருதரசர்களால் தொண்டியில் குடியேற்றப்பட்ட காதர் மீரா அம்பலம் என்பார் வீட்டில் தஞ்சம் புகுந்தனர். அவர்களை காதர் மீரா அம்பலம் பாய்மரக்கப்பலில் ஏற்றி நடுக்கடலில் பல நாட்கள் வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

முஸ்லிம்கள் பெருந்தொகையாக வாழும் தொண்டியில் பல பள்ளிவாசல்கள் உள்ளன. இவற்றில் கிழக்குத் தெரு பள்ளி பழமையான கல்லுப் பள்ளியாகும். கடலோரமிருந்த பழைய பள்ளியொன்று இப்போது புதிதாக ஓடாவித் தெரு பள்ளியாகியுள்ளது. தெற்குத் தெருவில் ஒரு பள்ளிவாசல் உள்ளது. வடக்குத் தெரு பள்ளி ஒரு முக்கியமான பெரிய பள்ளிவாசலாகும்.

வடக்குத் தெரு பள்ளிவாசலுக்கு வடக்கே கைக்கோளன் குளக்கரையின் தெற்கில் ஷைகு மலங்கு சாகிப் தர்கா உள்ளது. வெளிநாட்டிலிருந்தோ வெளி மாநிலத்திலிருந்தோ வந்து அழைப்புப் பணியாற்றிய இறை நேசச் செல்வர் மலங்கு சாகிப். இவரின் தர்கா கைக்கோளன் குளக்கரையில் அமைந்திருப்பதால் இப்பகுதியில் கணிசமாக கைக்கோளர்கள் - நெசவாளர்கள் வாழ்ந்ததாக உய்த்துணரலாம்.

பெரும் புலவர்களின் வம்சா வழியில் கி.பி.1845 - இல் பிறந்த ஷைகு மஸ்தான் மோன நிலையிலேயே இருந்ததால் ‘மோனகுரு மஸ்தான்’ என

அழைக்கப்பட்டார். இவருடைய அடக்கத்தலம் தொண்டியம்மன் கோவிலுக்கு கிழக்கில் உள்ளது. இதை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கட்டிக் கொடுத்துள்ளார்கள். ஞானக் கடலாக விளங்கிய அன்பர் எழுதிய பாடல்கள் 'மோன குரு மஸ்தான் சாகிபு பாடல்கள்' என நூலாக வெளி வந்துள்ளது.

ஷைகு அபூபக்கர் வலி எனும் இறைநேசச் செல்வர் கீழக்கரையில் பிறந்து தொண்டியில் மண முடித்து வாழ்ந்து நற்போதனைகள் செய்து மறைந்தவர். இவருடைய அடக்கத்தலம் தொண்டிக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இவரை ஆற்காடு நவாப் முகம்மதலி வாலாஜா தொண்டியில் சந்தித்துள்ளார். இவரின் பெயரை தொண்டியரோடு கீழக்கரையினரும் தம் பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர். என்றாலும் மரியாதை நிமித்தம் அப்பெயரை 'தொண்டியப்பா' என விளிக்கின்றனர்.

சோனகர் தெருவிலுள்ள சேமலப்பா எனும் சையிது முகம்மது லப்பை அடக்கத்தலமும் ஒரு வரலாற்றுப் பதிவே. சேமலப்பா பாசிப்பட்டினம் நெய்னா முகம்மது வலியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு மேலும் சில அடக்கத்தலங்கள் உள்ளன.

மதரஸதுல் இஸ்லாமியா செயல்படாமல் போய் விட்டது. ஆயிஷத்துல் சித்தீகா, கமாலியா என மதரஸாக்கள் செயல்படுகின்றன. பெண்கள் மிகப் பெருமளவில் ஆலிமாக்களாக உருவாகும் நிலை பாராட்டுக்குரியது.

நான்கைந்து தலைமுறைகளுக்கு முன் கிழக்குக் கடற்கரை சாலையெனப் பெயர் பெற்றிருக்கும் சேது ரஸ்தா சீரான சாலையாக உருவாகும் முன்

சென்னைக்கு வடக்கேயுள்ள பழவேற்காட்டிலிருந்து மாட்டுவண்டியில் பயணித்து தொண்டிக்கு வந்து அரபு மொழி கற்றிருக்கின்றனர்.

கீழக்கரை மேதை சதகத்துல்லாஹ் அப்பாவின் மாணவரான தொண்டி முகம்மது தீபிடம் கல்வி கற்க பழவேற்காடு முகம்மது ஜான் தொண்டிக்கு சென்றிருக்கிறார் எனும் தகவலை பழவேற்காடு மூத்தவர்கள் பதிவு செய்து வைத்திருக்கின்றனர்" [49]

இவ்வாறு தொண்டி இசுலாமியர்களின் குறிப்பிடத்தக்க வாழ்விடமாக விளங்குகிறது.

**<u>நாட்டுப் புற இலக்கிய வளம்</u>**

தொண்டியில் பல்வேறு நாட்டுப்புற இலக்கிய வளங்கள் வாய்மொழியாக வழங்கப்பெற்று வருகின்றன. அம்பா பாடல் என்ற மீனவர் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், புயல் குறித்த நினைவுகள், பழைய மீன் பிடி முறைகள், ஒயில் பாடல்கள் போன்ற பல நாட்டுப்புற இலக்கிய வளங்கள் தொண்டியில் வாய்மொழி இலக்கியங்களாக பதிவின்றி விளங்கி வருகின்றன. அவற்றில் சில இங்குப் பதிவு செய்யப்பெற்றுத் தரப்பெறுகின்றன.

**<u>தொண்டி துறைமுகம்</u>**

தொண்டி துறைமுகத்தில் இருந்து தனுஷ்கோடி வழியாக இலங்கை செல்லும் கடல் வழி 1914 ஆம் ஆண்டுவரை இருந்துள்ளது. ஆங்கிலேயர்

---

[49] சமூக நீதி அறக்கட்டளை, இணையதளம் தொல் புகழ் படைத்த தொண்டி 2

காலத்தில் இவ்விலங்கைப் பயணவழி மிகச் சிறப்போடு இருந்துள்ளது. :ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு வீசிய புயலில் தனுஷகோடி மூழ்கடிக்கப்பெற்ற நிலையில் இக்கடல்வழிப் பாதை தன் பயன்பாட்டை இழந்தது. தூத்துக்குடிக்குத் துறைமுகம் வந்த பிறகு தொண்டி துறைமுகம் சிறப்பினை இழந்தது என்பது முன்னரே குறிக்கப்பட்டது.

**புயல் பாதிப்புகள்**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்து மூன்றாம் நாள் மன்னார் வளைகுடாவில் ஏற்பட்ட புயல் கரையைக் கடந்த நிலையில் பெரும் பாதிப்புகளை இராமநாதபுர மாவட்டம் சந்தித்தது. குறிப்பாக தனுஷ்கோடி என்ற ஊர் பெரிதும் பாதிக்கப்பெற்றது. நள்ளிரவில் பாம்பன் - தனுஷ்கோடி இடையேயான தொடர்வண்டியானது, கடல்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது இந்தப் புயல் கரையைக் கடந்ததால் அந்தத் தொடர்வண்டி கடலில் விழ அனைத்துப் பயணிகளும் இறப்பைத் தழுவ வேண்டியதாயிற்று. இந்தப் புயல் பாதிப்புத் தொண்டியிலும் இருந்ததாக மீனவ மக்கள் குறிக்கின்றனர்.

எழுபது வயது சார்ந்த மூதாட்டி தொண்டியாயி இந்தப் புயல் பற்றிப் பின்வருமாறு நினைவுகளைக் கொண்டுள்ளார்.

“சுனாமியில அவ்வளவு பாதிப்பு இல்ல. ஆனா அறுபத்துநாலு புயலு … வெள்ளம்.. சரி வெள்ளம்…வீடெல்லாம் இடிஞ்சு போச்சு… நாங்க திருப்பாலைக் குடிக்குப் போயிட்டோம். அப்புறம் வீடு இடிஞ்சுபோச்சுன்னு சொன்ன பிறவு

நாங்கள் வந்தோம். நீஞ்சிக்கிட்டே வந்தோம். புள்ளைகளெல்லாம் காணோம். அப்புறம் தேடிப் புடிச்சோம்... ரொம்ப பாதிப்பு அந்த புயலிலே"[50] என்று தன் நினைவுகளை அவர் பதிவு செய்கிறார்.

**வழிபாட்டு முறைகள்**

**தொண்டியம்மன் கரி வேசம் கட்டுதல்**

தொண்டியம்மன் கோவிலில் கரி வேசம் கட்டுதல் என்ற நிகழ்வு நடை பெறுகிறது. இதில் மீனவர்கள் கலந்து கொள்கின்றனர். தங்களில் உடலில் சேறு, கரி எல்லாம் பூசிக் கொண்டு புரட்டாசி மாதத்தில் நேர்த்திக் கடன் செய்யும் நாட்டுப்புற வழிபாட்டு முறை ஒன்றும் தற்காலத்தில் நடைபெற்று வருகிறது. இதுபற்றி "புரட்டாசி மாசத்தில மாடுகளுக்குப் பின்னாடி கரி வேசம் போட்டுக் கிட்டு... எங்க அப்பால்லாம் போயிருக்காரு"[51] என்று செல்வேந்திரன் பதிவு செய்கிறார்.

**கங்காதேவிப் பொங்கல்**

விவசாயிகள் தைத்திருநாளைப் பொங்கல் என்று கொண்டாடுவதைப் போல மீனவர்கள் கங்காதேவிப் பொங்கல் என்ற ஒரு திருவிழாவை நடத்திக் கொள்கின்றனர். இவ்வகையில் கங்காதேவி எனப்படும் கடல் தேவிக்கு நன்றி செலுத்தும் பாங்கு மீனவர்களிடம் இன்றளவும் காணப்படுகிறது.

---

[50] தகவலாளி தொண்டியாயி தந்த தகவல்.

[51] தகவலாளி செல்வேந்திரன் தந்த தகவல்

**<u>வெள்ளைக்காரர்கள் கட்டிய பங்களா</u>**

மணிமுத்தாறு கடலில் கலக்கும் இடத்திற்கு அருகில் வெள்ளைக்காரர்களால் ஒரு பங்களா கட்டப்பட்டுள்ளதாகச் செல்வேந்திரன் குறிப்பிடுகிறார். இது பயணியர் பங்களாவாக இன்னமும் காணப்படுகிறது.

**<u>மீன் பிடித்தலில் உள்ள சவால்கள்</u>**

தற்காலத்தில் மீன்பிடித்தலுக்குப் பல நவீன முறைகள் கையாளப்பெறுகின்றன. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் பாய்மரக்கப்பல்கள், சிறு வத்தல்கள்(படகுகள்) மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பெற்றுன. இவை மனித சக்தியால் இயங்குபவையாகும். படகுகளைக் கடலில் செலுத்தி, மீன்வளத்தைப் பெறுவது என்பது மீனவர்களின் பணி. இப்பணியில் படகுகளை வலித்தல் என்பது மனித முயற்சி சார்ந்ததாகும்.

ஐந்து அல்லது ஆறு பேர் சிறு படகுகளைக் கடலில் செலுத்திட இருவர் வலை வீசுவது என்ற முறையில் மீன்பிடித்தல் நடைபெற்றுள்ளது. இது பற்றிக் குறிப்பிடும் கோபி என்பவரின் வாசகங்கள் பின்வருமாறு.

“ ஒரு குறிப்பிட்ட எல்லை வரை படகை வலித்துக் கொண்டு போகவேண்டும். தாய்கிட்டக் குடிச்ச பாலெல்லாம் வெளிய வந்துரும். திரும்பி அப்படியே வரணும். காலைல எட்டரை மணிக்குத் தான் வரமுடியும். என்னை

சுருக்கக் கட்டி ஐந்து கிலோ மீட்டர்ல விட்டுருவாங்க. நான் வலைய இழுத்துக் கிட்டே போகணும். எங்க அண்ண மேலப் பக்கம் நிப்பாரு. நான் கரையப் பக்கம் இழுப்பேன். ஈஸ்ட் வெஸ்டா இழுத்துக்கிட்டே போகணும். அதுல வர சின்ன மீனு, சின்ன இராலு எல்லாத்தையும் வலையிலருந்து பிரிக்கணும். மறுபடி அது இரண்டாயிரம் தூண்டில் இருக்கும். அதை சுத்தம் பண்ணி வச்சாதான் அடுத்து மீன் பிடிக்க முடியும். அப்ப காலையில வர்றோம். அப்பறம் வலைய ரெடி பண்றோம். திரும்பி வலைய இழுத்துக்கிட்டுப் இராத்திரி ஏழு மணிக்குப் போகணும். காலை நான்கு மணிக்குத் திரும்ப வரணுமி. வேலை சரியா இருக்கும். கையெல்லாம் பொத்து ஊத்தும்.

கடலுக்கு நடுவில இந்தா இந்தக் கையப் பாருங்க (கிழக்குப் பக்கம் தான் உட்கார்ந்திருக்கிற இடத்தில் இருந்துக் காட்டுகிறார்) இதுக்கு ஐந்து கிலோமீட்டர்ல கல்லு வீடு பெரிய வீடு இருக்கு. முன்னாடி வாழ்ந்திருப்பாங்க போல… மீனு பிடிக்கப்போறவங்கக் கிட்ட எங்க வலையப் போட்ட அப்படின்னா அவன் சொல்லுவான் கல்லுல போட்டேன். கல்லுல போய் வல சிக்கிக்கிடும். அதனால ஒரு மாளிகை உள்ள இருக்கு.

இப்ப வேலை நடந்துகிட்டிருக்கு. இப்ப மணி எட்டரை. இது எடுத்து முடிய பன்னெண்டரை ஆயிரும். அப்புறம் குளிக்கணும். சாப்பிடணும். அப்புறம் வலைய எடுத்துக்கிட்டுப் போகணும். மீன் பிடிக்கறதுக்கு ஒரு நேரம். இறால் பிடிக்கிறதுக்கு ஒரு நேரம். நண்டு பிடிக்கிறதுக்குன்னு ஒரு நேரம். அந்த நேரம் பாத்துப் பிடிக்கணும்.

மீனவனுக்கு அன்புக்கு மேல கோபம் தான் வரும். எதுக்குக் கோபப் படுறோம்னு தெரியாது. ஏன்னா அவன் பிழைப்பு அப்படி. அவன் கையெல்லாம் காய்ச்சுப் போயிடும்.

இதோ இது கடல்புல். நெல்லு நாத்து மாறி இது கடல்ல நிக்கும். இதுக்குக் கீழே தான் மீன் தங்கும். உயிர்வாழும்.

புயல் வர்றதுக்கு ஒரு அரை மணி நேரத்திக்கு முன்னாடியே மீனவனுக்குத் தெரியும். பொழுத மீனவன் பார்த்தே கண்டுபிடிச்சுடுவான்.

நாட்டுப்படகு.. தண்டு வலிக்கிறது. திரை திருப்பறதுக்குச் சுக்கான் பேரு. தண்டு வலிக்கிறவங்க பாடுறது அம்பாப் பாட்டு. இப்ப பிளாஸ்டிக் வலை. அப்ப பிளாஸ்டிக் வலை கிடையாது" என்று தன் அனுபவங்களை, கேட்டவற்றைப் பகிர்ந்து கொள்கிறார் கோபி.

"நாங்க நைலான் நூல எடுத்துக்கிட்டு நாட்டுப்படகு.... தண்டு வலிக்கிறது. போவோம். இலங்கைக்குக் கூட போவோம். எண்பதுக்கு முன்னால இலங்கைக்குக் கூட போயிருக்கிறோம். ஒண்ணும் சொல்லமாட்டாங்க. இலங்கைக்கு போறபோது நான்கு நாட்கள் கூட கடல்ல இருக்கணும். மூணு நாள் பிடிச்ச மீன அரிந்து, உப்பு வைப்போம். நான்காவது நாள் மீனுதான் பச்சைமீனு. அதுதான் கரைக்கு மீனா வரும்.

நாலு நாளும் சாப்பாடு கடல்லதான். பெரிய மண்பானையில் கஞ்சி எடுத்துக்கிட்டுப் போவாம். அங்க அவிச்ச மீனு தொட்டுக்க வச்சுக்குவோம். மீன அவிக்கிறதுக்கு மண்ணெண்ணெய் அடுப்பு இருக்கும். தகர டப்பாவில அடுப்ப

வச்சி அதன் மேல மண்பானையில தண்ணி அவிய வைக்கணும். வெடுக்கு வாசனை வராது. உப்புத் தண்ணிக்கு நல்லாருக்கும். கஞ்சி கொஞ்சம்தான். தண்ணி அதிகம். உப்புத் தண்ணிதான். கவிச்சி வராது. முதல் பொங்கள் அழுக்கா வரும். அத விட்டுடணும். இரண்டாவது முறை, மூணாவது முறைதான் நல்லாருக்கும். கீழயும் பாதிக்காது. மேலேயும் பாதிக்காது" என்று தன் அனுபவத்தை எடுத்துரைக்கிறார்................

இவ்வாறு மீன்வர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் மீன்பிடித்த வரலாறு மீனவர்களிடம் உள்ளது. தற்போது விசைப்படகுகள் வந்த காரணத்தினால் இவ்வாழ்க்கைமுறை தற்போது இல்லை.

**அம்பா பாடல்**

அம்பா பாடல் என்பது மீனவர்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல் ஆகும். இவ்வம்பா பாடல் ஒரு குழுவினர் தொடங்க மறு குழுவினர் பாடுவது என்ற நிலையில் அமைவதாகும். தன் தொழிலில் களைப்பு தெரியாமல் இருக்க மீனவர்கள் பாடுவது அம்பா பாடலாகும்.

இப்பாடல்கள் பற்றி நாட்டுப்புறவியில் அறிஞர் ஆ. சிவசுப்பிரமணியன் "நாட்டார் பாடல்களை வகைப்படுத்தும் போது அதில் ஒரு முக்கியப் பிரிவாக உழைப்பு அல்லது தொழிற்பாடல்கள் அமையும்.

கடுமையான உழைப்பின்போது வேலைத்திறனை அதிகரிக்கவும்இ வேலையினை முறைப்படுத்தவும்இ நீண்ட வேலை நேரத்தில் ஏற்படும் மனச்சோர்வை நீக்கவும் பாடப்படும் பாடலே உழைப்புப் பாடலாகும்.தோணித்

தொழிலாளர்களின் நாட்டார் பாடல்கள் உழைப்புப் பாடல் பிரிவிலேயே அமையும். இப்பாடல்கள் அம்பா அல்லது அம்பாப் பாட்டு என்று குறிப்பிடப்படும். இதைப் பாடுவதை ‘‘அம்பா போடணும்’’ என்று குறிப்பிடுவர்.

அம்பாப் பாடலானது ஒற்றை அம்பா இரட்டை அம்பா என இருவகைப்படும். வேலையின் தன்மைஇ கால அளவு ஆகியனவற்றிற்கேற்ப இவை பாடப்படும். கடலோடிகளின் பாடலை இது போன்று இரண்டாகப் பகுப்பது மரபாகவுள்ளது.

கடலோடிகளின் பாடலைக் குறைந்த இழுப்புப் பாடல் நீண்ட இழுப்புப் பாடல் என்று ஹோரஸ் –பி-பெக் என்ற அமெரிக்க நாட்டார் வழக்காற்றியலறிஞர் பகுக்கிறார். ‘‘இவ்விருவகைப் பாடல்களும் அவர்கள் வேலை செய்ய உதவும் ஒத்திசைவுடன் கூடிய ஒரு பல்லவியைச் சார்ந்திருக்கும்.

நீண்ட இழுப்புடன் கூடிய கடலோடிகளின் பாடல்கள் நங்கூரத்தை இழுத்து நிறுத்தல்இ உச்சிபாய் மரத்தை நிறுத்தல்இ தண்ணீர் பம்புகளை அடித்தியக்குதல் போன்ற நெடிய பணிகளைச் செய்யும் போது பயன்படுத்தப்படும்.

குறைந்த இழுப்புடன் கூடிய பாடல் விரைந்த உணர்ச்சியுடன் கூடியது. முக்கியமாக பாய்மர குறுக்குக் கட்டைகளை இழுத்துக் கட்டுதல் பாயை

மேலே ஏற்றல் போன்ற பணிகளிலோ கூட்டு முயற்சி தேவைப்படும் பணிகளிலோ பாடப்படும்''[52] என்று குறிப்பிடுகிறார்.

இலங்கை சார் அம்பாப் பாடல்கள் தொகுக்கப்பெற்று அம்பா என்றே நூலாக வெளியிடப்பெற்றுள்ளன. மு. புஷ்பராஜன் என்பவர் இலங்கையில் உள்ள அம்பாப் பாடல்களைத் தொகுத்து அம்பா என்றொரு நூலாகக் கொண்டுவந்துள்ளார். இவர் நடத்துநர் தொழில் செய்தவர். இவருக்கு இருந்த தமிழ் ஈடுபாடு இப்பாடல்களைத் தொகுக்கவைத்துள்ளது. அம்பாப் பாடல்களில் கடவுள் வணக்கம், காதல், சோகம், தொழில் முறை போன்ற வகை சார் பாடல்கள் அமைந்திருப்பதாக இவர் வகைமை செய்துள்ளார். [53]

இவ்வகையில் தொண்டியில் சில அம்பாப் பாடல்கள் பதிவு செய்யப்பெற்றன. அவற்றின் வரிவடிவம் பின்வருமாறு.

அய்யாக்கண்ணு, பொன்னுராக்கு ஆகியோர் பாடிய பாடல்கள்

**அம்பா பாடல் -1**

"கந்தனுக்கு ஏலேலோ முன்பிறந்த

ஏலேலோ முன்பிறந்த ஏலேலோ

கணபதியே ஏலேலோ முன்நடவாய்! ஏலேலோ

---

[52] http://globalparavar.org

[53] http://www.noolaham.org/wiki/index.php

கணபதிக்கு ஏலேலோ முன்பிறந்த

ஏலேலோ முன்பிறந்த ஏலேலோ

கணபதியே ஏலேலோ முன்நடவாய்! ஏலேலோ

என்தாயே ஏலேலோ கங்காதேவி

ஏலேலோ கங்காதேவி ஏலேலோ

எனக்குதவ ஏலேலோ வேணுமம்மா ஏலேலோ

வேணும்மின்னு ஏலேலோ காவேரியாம்

ஏலேலோ காவேரியாம் ஏலேலோ

என்பெத்தவளே என் தாயே கங்காதேவி

மால நல்ல ஏலேலோ படிபூரம்மா

ஏலேலோ படிபூரம்மா ஏலேலோ

சமுத்திர ஏலேலோ தேவியரே ஏலேலோ

தேவியரே ஏலேலோ திரும்புமம்மா

ஏலேலோ திரும்புமம்மா ஏலேலோ

திரும்பி வந்து எம்முகமே பாருமம்மா ஏலேலோ

எங்கும் பர ஏலேலோ தேசிகனே

ஏலேலோ தேசிகனே ஏலேலோ

எனக்குதவ ஏலேலோ வேணுமய்யா

வல்வினையே ஏலேலோ அழைக்கணுமா

ஏலேலோ அழைக்கணுமா ஏலேலோ

வாவென்று ஏலேலோ சொல்லணுமா ஏலேலோ

என்தாயே ஏலேலோ கங்காதேவி

ஏலேலோ கங்காதேவி ஏலேலோ

எனக்குதவ ஏலேலோ வேணுமம்மா ஏலேலோ

வேணும்மின்னு ஏலேலோ காவேரியாம்

ஏலேலோ காவேரியாம் ஏலேலோ

என்பெத்தவளே என் தாயே கங்காதேவி

மால நல்ல ஏலேலோ படிபூரம்மா

ஏலேலோ படிபூரம்மா ஏலேலோ

சமுத்திர ஏலேலோ தேவியரே ஏலேலோ

கூடிநல்ல நாங்களெல்லாம் அழைக்கணுமா

ஏலேலோ அழைக்கணுமா ஏலேலோ

கூப்பிட்டு ஏலேலோ நாங்க சொல்லணுமா ஏலேலோ

நடந்து வந்தா ஏலேலோ தடம் தெரியும்

ஏலேலோ தடம்தெரியும் ஏலேலோ

பறந்துவரோம் ஏலேலோ பைங்கிளியே ஏலேலோ

வந்தாரே ஏலேலோ வாழவைக்கும்

ஏலேலோ வாழவைக்கும் ஏலேலோ

சிங்கார ஏலேலோ நீ கொழும்பு ஏலேலோ

கொண்டுவந்தா ஏலேலோ கருப்பு வாத்தி

ஏலேலோ கருப்பு வாத்தி ஏலேலோ

மூடிவச்சா ஏலேலோ கம்மாகரை ஏலேலோ

கம்மா கரை ஏலேலோ மேட்டவிட்டு

ஏலேலோ மேட்டவிட்டு ஏலேலோ

கார்மேகம் ஏலேலோ ஓடிவாரும் ஐயா ஏலேலோ

கார்மேகம் ஏலேலோ நீலவர்ணம்

ஏலேலோ நீலவர்ணம் ஏலேலோ

கருக்கலிலே ஏலேலோ வாருமையா ஏலேலோ

என்தாயே ஏலேலோ கங்காதேவி

ஏலேலோ கங்காதேவி ஏலேலோ

எனக்குதவ ஏலேலோ வேணுமம்மா ஏலேலோ

வேணும்மின்னு ஏலேலோ காவேரியாம்

ஏலேலோ காவேரியாம் ஏலேலோ

என்பெத்தவளே என் தாயே கங்காதேவி

மால நல்ல ஏலேலோ படிபூரம்மா

ஏலேலோ படிபூரம்மா ஏலேலோ

சமுத்திர ஏலேலோ தேவியரே ஏலேலோ

வந்தாரே ஏலேலோ வாருமையா

ஏலேலோ வாருமையா ஏலேலோ

மக்களெல்லாம் ஏலேலோ காணுமையா ஏலேலோ

எங்கும் பரா தேசிகனே ஏலேலோ

ஏலேலோ தேசிகனே ஏலேலோ

ஏழைபங்கு ஏலேலோ ஏழை குலதெய்வம ஏலேலோ

வான்பக்கம் ஏலேலோ என்பக்கம்

ஏலேலோ என்பக்கம் ஏலேலோ

வருகிறாரே ஏலேலோ வாருமையா ஏலேலோ

வருகிறார் ஏலேலோ வலையச் செட்டி

ஏலேலோ வலையச் செட்டி ஏலேலோ

வந்திறங்கும் ஏலேலோ பந்தலிலே ஏலேலோ

அண்ணன் என்பார் ஏலேலோ குடை கொடுத்தார்

ஏலேலோ குடை கொடுத்தார் ஏலேலோ

குன்னக்குடி ஏலேலோ வேல்முருகன் ஏலேலோ

அண்ணன் என்பார் ஏலேலோ தம்பி என்பார்

ஏலேலோ தம்பி என்பார் ஏலேலோ

அஞ்சு பெற்றால் ஏலேலோ தோழன் என்பார் ஏலேலோ

என்தாயே ஏலேலோ கங்காதேவி

ஏலேலோ கங்காதேவி ஏலேலோ

எனக்குதவ ஏலேலோ வேணுமம்மா ஏலேலோ

வேணும்மின்னு ஏலேலோ காவேரியாம்

ஏலேலோ காவேரியாம் ஏலேலோ

என்பெத்தவளே என் தாயே கங்காதேவி

மால நல்ல ஏலேலோ படிபூரம்மா

ஏலேலோ படிபூரம்மா ஏலேலோ

சமுத்திர ஏலேலோ தேவியரே ஏலேலோ

இப்பாடல் தொடர்ந்து அவர்களின் கடல் பயணத்தில் தொடர்கிறது. அடிவரையறை இல்லை. ஆனால் வேலை, பொழுது வரையறை உண்டு என்ற அளவில் மிக நெடிய பாடல்களாக இவை விளங்குகின்றன.

**அம்பா பாடல் 2**

அம்பாவ சொல்லணுமா ஓவளவ

ஓவளவ ஆனை தண்ட பூட்டணுமாம் ஓவளவ

பூட்டுங்க நாலுதண்ட் ஓவளவ

ஓவளவ புதுமையுள்ள நாகூருக்கு ஓவளவ

நாகூரு கந்திரியாம் ஓவளவ

நாற்பத்தெட்டு தீவட்டியாம் ஓவளவ

நம்ம ஊரு மீனாவ ஓவளவ

நல்லா மீரான் தாய் மொழிய ஓவளவ

அடியேம்மா ஓவளவ

என்னப் பெத்த மாதாவவே ஓவளவ

மாதாவ மனதில் எண்ணி ஓவளவ

நல்ல மங்கை தாய நெஞ்சில் எண்ணி ஓவளவ

வாருமையா முகம்பார்க்க ஓவளவ

தாடியம்மா திருவாக்கு ஓவளவ

வாடியம்மா ஏ வலதுபுறம் ஓவளவ

தாடியம்மா திருவாக்கு ஓவளவ

யார் அறிவார் பிள்ளைக்குணம் ஓவளவ

தயவு இறங்கி படியே யம்மா ஓவளவ

ஊதிடுவார் தீங்குழலை ஓவளவ

உலகமகா கத்திரிக்கா ஓவளவ

கத்திரிக்கா வலம்பொலிய ஓவளவ

நீயும் சுற்றிவந்தார் ஓவளவ

மாரியம்மா வலதுபுறம் ஓவளவ

தாரியாம்மா திருவாக்கு ஓவளவ

வந்தாவரா சிந்தாமணி ஓவளவ

அவளிருக்க நந்தவனம் ஓவளவ

ராமருக்கு அம்புவில்லு ஓவளவ

சீதைக்கு செண்பகப்பூ ஓவளவ

சீதைக்கு யோவனம் ஒவளவ

சிம்மாசனம் ஆளப்போறா ஓவளவ

அங்கிருங்க அவ வந்தா ஓவளவ

அங்குமில்ல இங்குமில்ல ஓவளவ

காளி நல்ல பிறந்தாளாம் ஓவளவ

கண்ணிருந்தா மக்கள காத்திருக்க ஓவளவ

படிபோட வேணுமின்னே ஓவளவ

பார் உலகு காக்கணுமம்மா ஓவளவ

அம்பா சொல்லணுமாக ஓவளவ

ஆணைத்தண்டு பூட்டணுமா ஓவளவ

**பாடல் 3**

நண்டு படும் தொண்டியல்லோ ஐயாலா

நகர படும் நம்பதாழை ஐயாலா

கீரி படும் கீழக்கரை ஐயாலா

கொண்டுவரும் மக்களே ஐயாலா

இவ்வாறு பாடப்படும் பாடல்கள் தண்டு வலிக்கும் அம்பாப் பாடல்களாகும். இப்பாடல்கள் தற்போது அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

ஏனெனில் இலங்கை நாட்டின் இராணுவ நெருக்கடி, மற்றும் விசைப்படகுகளின் வேகம் போன்றன கருதி இப்பாடல்கள் தற்போது பாடப்படுவதில்லை.

இப்பாடல்களில் கங்கா தேவி என்று கடல் குறிக்கப்படுகிறது. தண்டு பூட்டுதல் என்பது இரண்டாம் பாடலில் இடம் பெறுகிறது. இதுவே வத்தையை வலிக்கும் துடுப்பு ஆகும். மேலும் இப்பாடல்களில் இராமயணச் சாயல் அமைந்துள்ளது. இராமன், சீதை போன்ற இதிகாசப் பாத்திரப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் இப்பாடல்கள் தொண்டியின் வாய்மொழி இலக்கியங்களாக விளங்குகின்றன. இருப்பினும் இவை தேய்வில் உள்ளன என்பது கவலைக்குரிய செய்தியாகும்.

இப்பாடல்களில் தொண்டியம்மன் பற்றிய குறிப்பு காணப்படுவது இம்மண்ணின் பாடல் என்பதைக் காட்டுவதாக உள்ளது. மேலும் கடவுள் சார்ந்த இந்த அம்பாப் பாடல்கள் தற்போது பழனி, கொல்லங்குடி நடையாத்திரையின் போது பாடப்படுவதால் மக்களிடம் புழக்கத்தில் உள்ளது.

**ஒயில்**

ஒயில் என்பது நாட்டுப்புற ஆடல் வகைகளில் ஒன்றாகும். இதன் இயல்புகளைப் பற்றிப் பின்வரும்பகுதி விவரிக்கின்றது. “ஒயிலாட்டம் என்பது, ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம். அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பல பொருள் தாங்கி நிற்கும்

ஒயில் என்ற வார்த்தையே, இவ் ஆட்டத்தின் பெயராகியுள்ளது. இது முற்றிலும் ஆண்கள் சார்ந்த கலை . ஆண்மையின் கம்பீரத்தை உணர்த்தும் இந்தக் கலையாட்டத்தினைப், பெண்கள் கலந்து கொண்டு ஆடுவதில்லை.ஜ1ஸ இந்த ஆட்ட அடவுகள், ஆண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை ஆகும். பத்து முதல் 12 பேர் கொண்ட இந்த ஆட்டத்தில், எதிரெதிர் திசையிலோ, அல்லது நேர்த்திசையிலோ நின்று கொண்டு ஆடுவார்கள். சிறகை விரித்தால் மயிலாட்டம், சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம் என்று இக்கலையின் தன்மை வர்ணிக்கப்படுகிறது.

பானைத்தாளம், தவில், சிங்கி, சோலக் போன்ற இசைக்கருவிகளை இந்த ஆட்டத்தில் பயன்படுத்துவதுண்டு. பானைத்தாளம் என்பது, குடத்தில் மாட்டுத்தோலைக் கட்டி இசைக்கப்படும் வல்லிசைக் கருவியாகும். பறைக்குப் பதிலாக இந்தக் கருவியை இசைக்கிறார்கள். இவைகளோடு கலைஞர்கள் காலில் அணிந்திருக்கும் சலங்கை இன்னுமொரு கருவியாக மாறி அடவுக்கேற்ப இசைக்கும். இந்த இசைக்கருவிகளைக் கட்டுப்படுத்தி வகைப்படுத்துவதே சிங்கி என்ற இசைக்கருவியின் வேலை. பாடலும், ஆடலும் நிறைந்த இக்கலையில், பாடத்தெரிந்தவருக்கு ஆடத்தெரிந்திருக்கத் தேவையில்லை. பாடலுக்குத் தகுந்தவாறு அடவு வைத்து ஆடற்கலைஞர்கள் ஆடுவார்கள்.

பெரும்பாலும் இராமாயணக்கதைகளே பாடல்களாகப் பாடப்படுகின்றன. இது தவிர பவளக்கொடி கதை, மதுரைவீரன் கதை, முருகன் கதை,

சிறுத்தொண்டர் கதை, வள்ளி திருமணக் கதைகளையும் பாடி ஆடுவதுண்டு. ரெட்டியார் மற்றும் முக்குலத்தைச் சேர்ந்த சில இனத்தினர், இக்கலையை மரபு ரீதியாக நிகழ்த்தினர். இப்போது தலித்துகள் உள்ளிட்ட பிற இனத்தினரும் இக்கலையாடலில் ஈடுபடுகின்றனர். மரபுசார்ந்து இயங்கிய பலர் கிறித்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக, கிறிஸ்தவ ஆலயங்களிலும் அண்மைக்காலமாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் பைபிள் கதைகளைப் பாடி ஆடுகின்றனர்”[54]

இவ்வாறு ஒயில் என்பது ஆட்ட வகைகளில் ஒன்றானக விளங்குகின்றது. தொண்டிப் பகுதியில் ஒயில் ஆடப்பட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் இங்கிருந்து அருகில் இருக்கும் மீமிசல் கல்யாண ராமர் கோயில் திருவிழாவில் இராமாயண ஒயில் பெருத்த வெற்றியுடன் ஆடப்பெற்றுள்ளது. அவ்வாறு ஆடப்பெற்ற ஒயிலின் சில பாடல்கள் பின்வருமாறு.

**<u>பொன்ராக்கு பாடிய ஒயில் பாடல்கள்</u>**

பாடல் 1.

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

நல்ல ஆரணங்கு தசரதர்

[54] https://ta.wikipedia.org/wiki

நல்ல ஆரணங்கு தசரதர்

புத்திரர் நாங்க

என்பேர் இராமன் என்பார்

என்பேர் இராமன் என்பார்

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

நல்ல ஆரணங்கு தசரதர்

நல்ல ஆரணங்கு தசரதர்

புத்திரர் நாங்க

என்தம்பி எம்பி

விசயன் தம்பி

இலட்சுமணன் என்பார்

இலட்சுமணன் என்பார்

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

நல்ல ஆரணங்கு தசரதர்

நல்ல ஆரணங்கு தசரதர்

புத்திரர் நாங்க

மாது இவள் ஜானகி என்பார்

மாது இவள் ஜானகி என்பார்

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

அயோத்தி ஆளுகின்ற

நல்ல ஆரணங்கு தசரதர்

நல்ல ஆரணங்கு தசரதர்

புத்திரர் நாங்க

பாடல்.2

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பார்த்து விடைதாரும் இதுநேரமே மாமியரே

பார்த்து விடை தாரும் இதுநேரமே மாமியரே

நானே பணிந்தேன் வெகுநேரமா மாமியரே

என் நாயகன் செல்கிறார் கானகமே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பார்த்து விடைதாரும் இதுநேரமே மாமியரே

பார்த்து விடை தாரும் இதுநேரமே மாமியரே

எனக்கு வாழ்த்தி விடை தாரும் மாமியரே

நான் வனம் போய் வருவதற்கு மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பார்த்து விடைதாரும் இதுநேரமே மாமியரே

பார்த்து விடை தாரும் இதுநேரமே மாமியரே

எனக்குப் போற்றி விடை கொடுங்க மாமியரே

நான் போகவரக் கைகொடுங்க மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பாதம் பணிந்தேன் நமஸ்காரம் மாமியரே

பார்த்து விடைதாரும் இதுநேரமே மாமியரே

பார்த்து விடை தாரும் இதுநேரமே மாமியரே"

இந்தப் பாடல்கள் இராமயண ஒயில் பாடல்களாக தொண்டிப்பகுதியில் விளங்கி வருகின்றன.

இவ்வொயில் ஆட்டங்கள் இங்கு பல முறைகளில் ஆடப்பெறுகின்றன.

1. சாதாரண ஒயில்,
2. அனுமன் ஒயில்,
3. சீதை ஒயில்,
4. ஒத்தை அடி ஒயில்,

5. இரட்டை அடி ஒயில்,
6. சூர்ப்பநகை ஒயில்

போன்றன குறிக்கத்தக்கனவாகும். அனுமன் ஒயில் கடல்தாவும் வேகத்துடன் ஆடப்படுகிறது. சீதை ஒயில் மாலை ஏந்தி வரும் நிலையில் மென்மையான ஆட்டமாக உள்ளது. சூர்ப்பனகை ஒயில் மயக்கம் வந்தவள் ஆடுவது போல உள்ளது. இவற்றை முத்துராக்கு ஆடிக்காண்பித்தார்.

இவ்வாறு ஒயில் என்ற நாட்டுப்புற ஆடல் கலை இன்னமும் தொண்டிப் பகுதியில் நடைபெற்றுவருகிறது.

**தாலாட்டு**

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுடன் பாடல்கள் பயணிக்கின்றன. அவ்வகையில் மனிதனின் தொடக்கமான குழந்தை நிலையில் அக்குழந்தைக்குச் சார்பாக, ஓய்வாக இருக்கத் தாலாட்டு பாடப்படுகிறது. இத்தாலாட்டுப்பாடல்களில் தாய் தன் பிறந்த வீட்டின் பெருமைகளை மிகுத்துப் பாடுவாள். இத்தாலாட்டு பற்றிய வரையறை பின்வருமாறு.

‘ குழந்தையின் அழுகையை நிறுத்தவும், தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டு (டுரடடயடில) ஆகும். தாலாட்டு நாட்டார் பாடல் வகைகளில் ஒன்று. வாய்மொழி இலக்கியங்களாக வழங்கிவந்த தாலாட்டுக்கள் நாட்டாரியல் ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

தாலாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்த நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று.

தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையை உடையன. அவ்விசையில் மயங்கி குழந்தை மெய்ம்மறந்து தூங்குகின்றது. ”தால்” என்பது நாவைக் குறிக்கும். நாவினால் ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதே தாலாட்டுதல் எனவும் கூறுவர். தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம். ஆராரோ ஆரிரரோ என்ற சந்தத்தின் மூலம் ஓசை எழுப்புவதால் இது ஆராட்டுதல் என்றும் சொல்லபடும்”[55]

பாண்டிய நாட்டுத் தாலாட்டுகளில் தொண்டி முத்து பற்றிய பல தகவல்கள் கிடைக்கின்றன. குழந்தையைத் தொண்டி முத்தே என்று பாராட்டும் பாங்கு இருக்கிறது. பின்வரும் இரு பாடல்களும் இதற்குச் சான்றுகள் ஆகும்.

**பாடல் 1**

ஆறோ பெருகி வர

அலைகடலும் பொங்கி வர

அந்த அலைகடலின் கரையினிலே

அராபியக் கப்பல் வர

---

[55] https://ta.wikipedia.org/wiki

ஆராரோ ஆரிராரோ

ரண்டு கப்ப கொடி பிடிக்க

அந்தக் கொடியில ரட்ட

மச்சம் அசைஞ்சி வர-பரதவர்கோன்

கப்பலுன்னா பாதுகாப்பும் சேர்ந்து வரும்

ஆராரோ ஆரிராரோ

அழகான குதுரவரும் - அராபிய

யாவாரிய சுமந்து வரும்

குல்லா வச்ச யாவாரி

ஆணி முத்த வாங்கிப் போவோம்

ஆராரோ ஆரிராரோ

கொற்கைத் துறைமுகத்தில் - கண்ணே நீ

கொண்டு வந்த கெட்டி முத்தே

குலசேகரப் பட்டணத்தில் - கண்ணே நீ

குளிச்சி எடுத்த வெண் முத்தே

ஆராரோ ஆரிராரோ

தொண்டி துறைமுகத்தில் - கண்ணே நீ

துணிந்தெடுத்த பார் முத்தே

வங்காளக் கடலினிலே - கண்ணே நீ

வாரி வந்த நல்முத்தே

ஆராரோ ஆரிராரோ

தென்மதுர வீதியில் - கண்ணே நீ

வித்து வந்த பாண்டி முத்தே

ரோமாபுரித் தேசத்திலும் - நம்

பவுசைச் சொல்லுதடி

ஆராரோ ஆரிராரோ

மூணு கப்ப கொடி புடிக்க

முத்துக் கப்ப ஓடி வர-மூழ்கி

முத்தெடுக்கும் பாண்டியரே -உன்மாமன்

பதறாம கண்ணுறங்கு

ஆராரோ ஆரிராரோ........[56]

என்ற தாலாட்டில் தொண்டித் துறைமுகம் குறிக்கப்படுகிறது. தற்போது மீன் பிடி தளமாக உள்ள தொண்டி நகரம் ஒரு காலத்தில் துறைமுகமாக இருந்தது என்பதற்கு இவ்வாய்மொழிப் பாடல் ஒரு சான்று.

**பாடல் 2**

தொண்டி சார்ந்து மற்றொரு தாலட்டுப் பாடலும் கிடைக்கிறது. அது பின்வருமாறு.

முத்தில் ஒரு முத்தோ

முதிர விளைந்த முத்தோ

பாண்டி பெருமுத்தோ

பாட்டனார் ஆண்ட முத்தோ

ஐந்தும் பதிந்தும் முத்தோ

[56] http://www.heritagevembaru.org/2017/08/blog-post_20.html

ஐயாக்கள் ஆண்ட முத்தோ

சின்னஞ் சிறு முத்தோ

சீயாக்கள் ஆண்ட முத்தோ

ஐந்தும் பதிந்த முத்தோ

ஐயாக்கள் ஆண்ட முத்தோ

ஆராய்ந்த முத்தோ

அலைகடலில் ஆழி முத்தோ

கோர்க்காத முத்தோ

கோதைகைக் குஞ்சரமோ [57]

என்ற தாலாட்டுப் பாடலிலும் தொண்டி குறிக்கப்படுகிறது. தொண்டியில் நல்ல முத்துக்கள் விளைந்துள்ளன என்பது இப்பாடல் வழி அறியலாகும் செய்தியாகும்.

இவ்வாறு நாட்டுப்புற இலக்கியங்களின் வாயிலாகவும் தொண்டியின் பெருமையை அறிந்து கொள்ளமுடிகின்றது.

**தொகுப்புரை**

---

[57] தகவலாளி வள்ளி தந்த தகவல்

தொண்டி பற்றிய தகவல்கள் பல இன்னமும் வாய்வழிச் செய்திகளாகவே உள்ளன. அவற்றில் உள்ள உண்மைத் தன்மை கண்டறியப்படவேண்டியன என்றாலும் நாட்டுப்புறப் பாடல்கள் தொன்று தொட்டு மக்களின் மனதில் இருந்து வருவதால் இவற்றில் இடம்பெறும் செய்திகள் உண்மைக்கு உரியன என்பது கருதத்தக்கது.

தொண்டியில் பழங்காலத்தில் துறைமுகம் இருந்ததையும், அங்கு முத்துக்குளிப்பு நடந்ததையும் கடற்கரைப் பரதவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் நாட்டுப்புறப் பாடல்களில் குறிப்பாக தாலாட்டுப்பாடல்களில் தொண்டி முத்து என்பது இடம் பெற்றுள்ளது. இதன் காரணமாக முத்து விளைந்த இடம் தொண்டி என்பது தெரியவருகிறது.

தொண்டியில் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில், அருள்மிகு உந்திபூத்த பெருமாள் கோயில், அருள்மிகு தொண்டியம்மன் கோயில் ஆகியன குறிக்கத்தக்க தொன்மை வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன. அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயிலில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

கைக்கிளான் குளம் நெசவளார் பகுதி சார்ந்து அமைந்துள்ளது. இக்குளம் மருதுபாண்டியரின் காலத்தது என்ற கருத்தும் உண்மையானது.

தொண்டியில் உள்ள தர்மதேவதை சத்திரம், தொண்டிக்கும் சத்திய தேவதைக்கும் உள்ள தொடர்பினைக் காட்டுவதாக உள்ளது.

இசுலாமியர்கள் பலர் தொண்டியில் ஞானம் விளைவித்துள்ளனர். அவர்கள் பற்றிய வாய்மொழிக் கதைகள் இங்குப் பதியப்பெற்றுள்ளன. தொண்டி குறிக்கத்தக்க அரபு மொழி பயிற்று இடமாக விளங்கியுள்ளது.

இங்கு வாழும் மீனவர்கள் தொண்டியில் நிகழ்ந்த புயல்கள், தொண்டியின் பழைய மீன்பிடி நினைவுகள் ஆகியவற்றுடன் வாழ்ந்து வருகின்றனர். இயந்திரப் படகுகள் வந்தபின் நாட்டுப்புற இலக்கிய வளர்ச்சி தேய்வடைந்துள்ளது. இதனை மீட்டெடுக்க வேண்டும்.

## இயல். 3 தொண்டியின் இலக்கிய வளங்கள்

சங்ககாலம் தொட்டு தொண்டியில் தமிழ் இலக்கியவாணர்கள் இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. சங்ககாலம் தொட்டு, இற்றைக்காலம் வரை பல்வேறு இலக்கியவாணர்கள் தொண்டி பற்றிய குறிப்புகளைத் தந்து இந்நகரை இலக்கிய வளமுள்ளதாக ஆக்கியுள்ளனர்.

இசுலாமிய சமயத்தார் பலராலும் இத்தொண்டி இலக்கியவளமுடையதாக திகழ்கிறது. இவர்களுள் முதன்மையானவர் குணங்குடி மஸ்தான் சாகிபு ஆவார். இவர் பல ஞானப்பாடல்களை எழுதித் தமிழுக்கு ஞான வளம் சேர்த்தார். குணங்குடி மஸ்தான் சாகிபுவுடன் வாழ்ந்த மோனகுரு நயினார் முகம்மது அவர்களும் சில இல்ககியப் பதிவுகளைச் செய்துள்ளார். இவர்களுக்குப் பின்வந்த மோன குரு மஸ்தான் சாகிபு என்பவரும் இலக்கிய வளம் சேர்த்துளள்ளார். இவர்களை அடுத்து தொண்டி அபுபக்கர் அப்பா என்பவரும் இலக்கிய வளங்களைத் தந்துள்ளார்.

இவர் கி.பி. ஆயிரத்து எழுநூற்றுத் தொன்னூற்று இரண்டாம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தை நைனார் முகம்மது சாகிப் ஆவார். இவரின் தாயார் பாத்திமா ஆவார். இவரின் தந்தையார் பிறந்த ஊர் தொண்டி என்றும் இவரின் தாயார் பிறந்த ஊர் தொண்டி என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன. இருப்பினும் இவர் தன் தாய்மாமன் வாழைத்தோட்டத்தில் சில காலம் தங்கியிருந்தார் என்ற குறிப்பின்படி இவரின் தாயார் ஊர் தொண்டி என்பது தெரியவருகிறது. இவர் கனாகபிஷேகமாலை என்ற நூலை இயற்றிய கனக கவிராயர் என்பவரின் பரம்பரையில் பிறந்தவர். இவரின் தந்தையார் ஊர் குணங்குடியாகும். இது தொண்டியில் இருந்துப் பதினாறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

இவருக்குப் பெற்றோர் இட்டப் பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பதாகும். இவருக்குப் பதினேழு வயதானபொழுது இவரின் தாய்மாமன் மகளை இவருக்கு மணமுடித்து வைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவந்தன. ஆனால் இவரின் மனம் திருமணம் செய்து கொள்வதனை விரும்பவில்லை.

ஞானத்தைத் தேடி தன் பயணத்தை அவர் தொடங்கினார். கீழக்கரையில் வாழ்ந்த அப்துல் காதிர் லெப்பை ஆலிம் என்பவரை நாடி அவர் வழியாக ஞானக்கல்வி கற்று வந்தார். இக்காலத்தில் இவரின் உணவாக சோற்றுக் கற்றாழை மட்டுமே அமைந்தது. சில நேரங்களில் வெறும் சோறு மட்டுமே இவரின் பசியாற்றி இருக்கிறது.

இதனைத் தொடர்ந்து திரிசிரபுரம் மௌலவி ஷாம் சாகிபிடம் சென்று தீட்சை பெற்றார். திருப்பரங்குன்றம் சிக்கந்தர் மலையில் நாற்பது நாட்கள் யோக நிட்டையில் அமர்ந்தார். இதனைத் தொடர்ந்து ˙இவர் கி.பி. 1813 ஆம் ஆண்டு முற்றும் துறந்த நிலையை அடைந்தார். சூபி நெறியில் நிற்க ஆசை கொண்ட இவர் அதற்கான குருவைத் தேடினார். திருச்சியில் ஆலிமாகவும், சூபி ஞானியாகவும் விளங்கிய ஷாம்வலீ அவர்களிடம் சென்று ஞான தீட்சை பெற்றார்.

பகற்பொழுதில் நோன்பும் இரவெல்லாம் தொழுகை, அழுகை என இவர் ஞான வயப்பட்டார். இவ்வாறு மூன்று மாதங்கள் மேற்காட்டிய குருவுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தார். இதன்பிறகு அறந்தாங்கி அருகில் உள்ள கலபம் என்ற கிராமத்திற்குச் சென்று ஆறுமாதங்கள் தங்கி ஞானம் பயின்றார். இதன்பின் தொண்டியில் தாய்மாமனின் வாழைத்தோப்பில் நான்கு மாதங்கள் தங்கியிருந்து நிட்டை பயின்றார்.

இதுபோது உறவினர்கள் இவரை இல்லறம் நோக்கி அழைக்க முயல இவர் அவர்களிடம் இருந்துத் தப்பிக்க சதுரகிரி, புறாமலை, நாகமலை, யானைமலை

போன்ற மலைகளில் இவர் வாழ்ந்தார். மலைக்காடுகளில் கிடைக்கும் உணவுகளை உண்டார். தொடர்ந்து இவர் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். இப்பயணம் ஏழு ஆண்டு காலமாக அமைந்தது.

அதன்பின் நாகூர் நாயகம், எஜமான், பாதுஷா நாயகமவர்களை நாகூர் நகரில் சந்திக்கிறார். அவரின் முன்பு பின்வ:ரும் பாடலைப் பாடுகிறார்.

"திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து

தீன் கூறி நிற்பர் கோடி

சிங்கா சனாதிபர்க ணதரேந்தியேவந்து

ஜெய ஜெயா வென்பர் கோடி

ஹக்கனருள் பெற்ற பெரியோர்கள் வலீமார்கள்

அணியணியாய் நிற்பர் கோடி

அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ்ஞானிகள்

அணைந்தருகில் நிற்பர் கோடி

மக்கநகராளும் முஹம்மதிறஸூல் தந்த

மன்னரே என்பர் கோடி

வசனித்து நிற்கவே கொலுவீற்றிருக்குமுன்

மகிமை சொல வாயுமுண்டோ

தக்க பெரியோனருள் தங்கியே நிற்கின்ற

தவராஜ செம்மேருவே

தயவு வைத்தெனையாள் சற்குணங்குடி கொண்ட

ஷாஃஹல் ஹமீதரசரே!"[58]

இப்பாடலைப் பாடி நாகூர் நாயகத்தை வழிபட்டு அங்கு சில நாட்கள் இவர் தங்கியிருந்தார். அதன்பின் காடு, மேடு, குப்பை மேடுகள் எனப் பல்வேறு இடங்களில் அவர் தங்கினார்.

இதன்பின் காரைக்காலில் சில காலம் தங்கினார். அங்கு இவரைச் சுத்தம் அற்றவர் என்று கேலி பேசியவர்களை மூன்று நாள் ஆடாமல் அசையாமல் தொழுகை செய்யும் நிலையிலேயே நிறுத்தித் தன் வலிமையை உணர்த்தினார். இதன் காரணமாக இவர் புகழ் பரவ இவரைத் துதிக்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். இவர்களிடம் இருந்துத் தப்பிக்க இவர் சென்னைக்கு நகர்ந்தார்.

சென்னை இராயபுரத்தில் பாவா லெப்பை என்பவரின் முட்புதர்கள் நிறைந்த இடத்தில் தங்கி ஆழ்ந்த நிஷ்டை புரிந்தார். அவ்விடம் வளம் மிக்கதாக ஆனது. தீமைகள் அகன்றன. நன்மைகள் கூடின. இதனைக் கண்ட அவ்விடத்தின்

---

[58] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப. 312

சொந்தக்காரர் குணங்குடியார் தங்க ஒரு தைக்கா ஆசிரமம் அமைத்துத் தந்தார். ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் இந்த இடத்தில் குணங்குடியார் தங்கினார்.

இவர் தொண்டியில் இருந்து இங்கு வந்ததால் தொண்டியார் பேட்டை என் இவ்விடம் வழங்கப்பெற்றது. தற்போது இது தண்டையார்பேட்டையாக மருவி வழங்கி வருகிறது.

இவரை இந்துக்கள் சுவாமி என்றழைத்தனர். இசுலாமியர்கள் இறையன்பர் என்றும் அழைத்தனர். மேலும் ஆரிபு பில்லா என்றும் இவர் அழைக்கப்பெற்றார்.

இவர் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தெட்டாம் ஆண்டு தன் நாற்பத்தேழாவது வயதில் பரிபூரணம் அடைந்தார். இவர் வாழ்ந்த இடத்திலேயே இவருக்குத் தர்கா அமைக்கப்பெற்றுள்ளது. இவரின் ஆலயம் தண்டையார் பேட்டை, பிச்சாண்டி லேன் என்ற தெருவில் அமைந்துள்ளது.

**சீடர்கள்**

இவரின் சீடர்களாக இசுலாமியர்களும், இந்துக்களும் இருந்தனர். பெரும்பாலும் இந்துக்களே இவரின் சீடர்களாவர். ஐயாசாமி முதலியார், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், வெங்கட் ராயப்பிள்ளைக் கவிராயர், கோவளம் அருணாசல முதலியார் மகன் சபாபதி காயற்பட்டினம் காதிர் நயினார் லெப்பை போன்றோர் இவர்களில் குறிக்கத்தக்கவர்கள் ஆவர்.

இவர்கள் மஸ்தான் சாகிபு அவர்களைக் குருவாக் கொண்டு அவர் மீது முறையே குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி, நான்மணிமாலை, தோத்திரப் பாடல்கள், வாயுறை வாழ்த்து போன்ற பனுவல்களைப் பாடியுள்ளனர்.

**<u>குணங்குடி மஸ்தான் சாகிபு படைத்தளித்த இலக்கியங்கள்</u>**

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் ஓராயிரத்து ஐம்பத்தேழு பாடல்களை எழுதியுள்ளதாகத் தொகுப்பாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றில் பின்வரும் பகுதிகள் அடங்குகின்றன.

**<u>1.குரு வணக்கம்</u>**

தான் குருவாகக் கொண்ட முஹ்யித்தீன் அப்துல் கா்திர் ஜீலானி அவர்களை வணங்கும் முறையில் இப்பகுதி எழுதப்பெற்றுள்ளது. இது பத்துப் பாடப்பகுதிகளைக் கொண்டது.

1. குருவணக்கம்
2. வஸ்துதயத்தினானந்தம்,
3. விளையாட்டினானந்தம்,
4. தன்னியலினானந்தம்,
5. மகிமையியானந்தம்,
6. வலிமையினானந்தம்,
7. இரக்கத்தினானந்தம்
8. பெருமையினானந்தம்,
9. தன்னிலையினானந்தம்,
10. காரணத்தினானந்தம்

ஆகிய பத்து பாடல் பகுதிகளைக் கொண்டது. இதில் குரு நிகழ்த்திய அதிசயங்களும், குருவின் அகிலத்தை அளக்க வல்ல வல்லமையையும் புகழ்ந்து மஸ்தான் சாகிபு பாடல்கள் புனைந்துள்ளார்.

குருவணக்கம் என்ற முதல் பகுதி தனக்கு மெய்ப்பொருள நல்க வந்த குருவினைப் போற்றி உரைக்கிறார். இவரின் குரு கீழக்கரையில் இருந்ததாக வரலாற்றுக்குறிப்புகள் இருக்கு இவர் அவர் குணங்குடியில் உறைபவராகப் பாடியுள்ளார்.

"இணங்கு மெய்ஞ்ஞானப் பேரின்பக்கடலின்

இன்னமு தெடுத்தெமக் களிப்போன்

பிணங்கிய கோச பாசமா மாயைப்

பின்னலைப் பேர்த் தெறிந்திடுவோன்

வணங்கிய தவத்தினோர்க்கருள் புரிய

வள்ளலாய் வந்தமர்ந்தோன்

குணங்குடி வாழு முகியித்தீனாமென்

குருபதஞ்சிரத்தின் மேற்கொள்வாம்"[59]

என்ற பாடலில் குரு குணங்குடியில் இருப்பவராகச் சுட்டப்பெறுகிறார். குணங்குடி என்பது இங்கு குணங்களின் குடி என்ற நிலையில் ஒரு குறியீட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**2. வஸ்துதயத்தினானந்தம்,**

[59] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்றிரட்டு, ப. 49

உலகில் உள்ள எல்லாப் பொருள்களிடத்திலும் (வஸ்து) தயை கொண்டு அவற்றின் உள்ளும் புறமுமாக குரு கலந்து அவற்றை இயக்கிக் கொண்டுள்ளார் என்பதை இப்பகுதியில் மஸ்தான் சாகிபு எடுத்துரைக்கிறார்.

“பறுதானியத்திலோ சுபகாயத்தெனப்

பகர்பரா பரமதனிலோ

பற்பல விதங்கொண்அயானியத்திலோ

பரிபூரணந்தன்னிலோ

அரிதான தரத்திலோ அலிபெனுஞ் சுகவாரி

ஆகும் நுக்தாவதனிலோ

குறிகுண தீதலட்டாங்கயோ கத்திலோ

கோடானு கோடி மறையாற்

கூறரிய சிவராஜ யோகத்திலே

வருட்குறையா பெருங்கடலிலோ

நரலைநிகரருளாள னேநீ இருப்பதிந்

நாயினேற் கருள் செய்குவாய்

நற்குணங்குடி கொண்ட பாத்துஷா

வானகுருநாதன் முகியிந்தீனே.”[60]

பரிபூரணம், உயர்வு, தாழ்வு போன்ற அனைத்திலும் கடலைப் போன்ற விரிவுடைய குருவகானவரே நாய் போன்ற எனக்கும் அருள் செய்தவரே, என்அரசே என்று குணங்குடி மஸ்தான் வஸ்துகள் அனைத்திலும் குருவினைக் காண்கிறார். கடல் என்ற குறியீடு பெரும்பாலான பாடல்களில் இடம்பெறுகிறது. இது தொண்டி சார்ந்து அவர் வாழ்ந்துள்ளார் என்பதற்கான அடையாளம்.

**3. விளையாட்டினானந்தம்,**

குரு பற்பல சித்து விளையாட்டுகள் செய்து அதில் ஆனந்தம் காட்டும் தன்மையைப் பற்றிப் பாடியது.

“அண்டகோ டிகளுமோர் பந்தெனக் கைக்குள்

அடக்கிவிளை யாட வல்லீர்

அகிலமோ ரேழினையு மாடுங்கறங்குபோல்

ஆட்டி விளையாட வல்லீர்

மணடலத் தண்டரை யழைத்து அருகு

இருத்தியே வைத்துவிளையாடவல்லீர்

மண்ணகமும் விண்ணகமும் அணுவைத் தொளைத்த தின்

மாட்டி விளையாட வல்லீர்

[60] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, பக் 52-53

கருதரிய சித்தெலாம் வல்லநீ ரடிமையென்

கண்முன் வரு சித்தில்லையோ

நண்டளந்திடுநாழி யாவனோ தேவரீர்

நல்லடிக் காளாகியும்

நற்குணங்குடி கொண்ட பாத்துஷா

வான குருநாதன் முகியிந்தீனே"[61]

என்ற பாடலில் குருநாதனின் விளையாட்டு ஆனந்தத்தை அறிந்து கொள்ளமுடிகின்றது. அண்டத்தை ஒரு பந்தென தன் கைக்குள் வைத்து விளையாடும் இயல்பினர், அண்டம் ஏழினையும் காற்றாடிபோல சுழலச் செய்து விளையாட வல்லவர், தேவர்களை அருகழைத்து அவர்களுடனும் விளையாட்டு நிகழ்த்துபவர், மண்ணகத்தையும் விண்ணகத்தையும் ஆட்டி அணுவுக்குள் நின்று விளையாட வல்லவர், இருப்பினும் என் கண்முன்னே தெரியும் சித்தினை மட்டும் காட்டுதற்கு அரியவர் குரு ஆவார். இவரின் பெருமையைக் கடலின் பரப்பினைத் தன் கால்களால் அளக்கும் நண்டு போல் நான் அளந்து பார்ககிறேன். நற்குணங்களின் இருப்பிடமாக விளங்கும் அரசரான என் குருநாதன் முகயிதீன் என்று மேற்பாடல் சுட்டுகிறது.

4. **<u>தன்னியலினானந்தம்,</u>**

தன்னுடைய இழிவான நிலையைச் சுட்டுக்காட்டி குருவிடம் தன்னை மேம்படுத்து மன்றாடும் தன்மையைத் தன்னியலினானந்தம் என்பதாகக் குணங்குடியார் பாடுகிறார்.

---

[61] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப.54

ஐயோ எனைப்போலு மாப் பெரும் பாவியிவ்

வகிலத்திலெங்கு மிலையே

அநியாய மநியாய மென்பெரும் பாதகம்

தார்பாலெடுத் தோதுவேன்

மையான கன்னியர் வலைக்குள் அகப்பட்ட

மாபாவி தீ பாவியான்

மருபூபு சுபுகானியா உமை நாடாது

மடமை குடிகொண்ட பாவி

பொய்யான வாழ்வதனை மெய்யாக நம்பியுன்

பொன்னடி மறந்த பாவி

பொல்லார்கண் நேசமே அல்லாது

நல்லோர் புறக்கணித்திட்ட பாவி

நையுமோர் பொய்யுலக னாகியே உமதடிமை

நாயினும் கடையாவனோ

நற்குணங்குடி கொண்ட பாத்துஷா வான

குருநாதன் முகியிந்தீனே”[62]

---

[62] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப. 55

என்ற பாடலின்வழி தன்னியல்புகளைச் சுட்டிநிற்கிறார் மஸ்தான் சாகிபு. இவர் தன்னைப் போல மாபாவி யாருமில்லை என்று தன்னிழிவை உரைக்கிறார். இது சாகிபு அவர்களின் கருத்து மட்டுமல்ல. இவரின் பாடலைப் படிக்கின்ற ஒவ்வொருவரின் இயல்பும் இதுவேயாகும். பெண்பித்து கொண்டு அலைகிறேன். பொய்யானவர்களிடத்தில் நேசம் கொள்கிறேன். நாயை விட இழிந்த நிலையில் நான் நிற்கிறேன். இவ்வாறாக எல்லா உயிர்களும் தன்னிலை தாழ்ந்து கிடப்பதைத் தன்மேல் ஏற்றிப் பாடுகிறார் மஸ்தான் சாகிபு.

**5. மகிமையியானந்தம்,**

குருவின் மகிமையைப் போற்றும் பகுதி இதுவாகும்.

“மாதவர்கரசான மன்னர்க்கு மன்னக
வந்த மகராஜனீயே
மண்டிசையும் விண்டிசையு நின்றசையும்,
வாசனாம் போஜனீயே
ஆதிநீ மகுசூக்கு றெகுமானு நீயெனக்
கான மருபூபு நீயே
வேதநீ வேதாவேதாந்த நீ எனையாளும்
வித்தகன் றாலு நீயே
மெய்ஞ்ஞான வீடு நீ வீட்டின் விளக்கு நீ
விரிகதிர் சுடரு நீயே
நாதனீ நவநாத சித்தர்நீ முத்தன் நீ
நாதாந்த மூர்த்தி நீயே

நற்குணங்குடி கொண்ட பாத்துஷா வான

குருநாதன் முகியிந்தீனே"[63]

என்ற பாடலின் வழியாக மன்னர்மன்னவன், மகாராஜன், போஜன் என்றெல்லாம் குருவானவரைப் போற்றி மகிழ்கிறார் குணங்குடி மஸ்தான். மேலும் ஆதியும் குரு, றெகுமானும் குரு, வேதமும் குரு, வேதாந்த முடிவம் குரு, தன்னையாளும் வித்தகனும் குரு என்று குருவின் மேன்மையை இப்பாடல்வழி உரைக்கின்றார்.

**6. வலிமையினானந்தம்,**

தந்தையும் குருவே, தாயும் குருவே, தனை ஆளும் இறைவனும் குருவே, இக, பரம் இரண்டிலும் துன்பம் ஒழித்து இன்பம் தரத்தக்கவனே, உன்னை அன்றி வேறு யார் எங்களுக்குத் துணை, பாவக்கடலில் கவிழாத மரக்கலம் நீ, என் முன்னே வந்து என் துன்பம் நீக்கி அருள்வாய் என்று குருவின் வலிமையை இப்பாடலில் காட்டி நிற்கிறார் மஸ்தான் சாகிபு.

**7. இரக்கத்தினானந்தம்**

தன்மீது இரக்கம் கொள்ளும்படி வேண்டுவதாக இப்பாடல் அமைகிறது. கல்லாவது ஒரு காலத்தில் கரையும், ஆனால் என் நெஞ்சக்கல் கரைவதில்லை. என் கவலைகள் அதிகம். இவ்வளவுதான் என்று எண்ணி உரைக்க இயலாததாக அது விளங்குகிறது.

"சொல்லு மெய்ஞ்ஞானச் சுகக்கடலை உண்டுயான்

சும்மா யிருக்க அருள்வாய்"[64]

[63] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற் திரட்டு, ப. 56

[64] மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப. 58

என்று மெய்ஞ்ஞானக் கடலில் ஒரு சொட்டு தந்துதவ வேண்டுகிறார் மஸ்தான் சாகிபு. மேலும் சும்மா இருக்க அருளச்செய்கிறார். இவ்வகையில் இரக்கத்தின் ஆனந்தமாக இப்பகுதி அமைகிறது.

**8. பெருமையினானந்தம்,**

தன் ஆசான் பெருமை சொல்வது ஆனந்தமாகும். அவ்வகையில் மஸ்தான் சாகிபு தன் குருவின் பெருமைகளை இப்பாடலில் எடுத்துரைக்கிறார். குருவின் பாதம் அண்ட பகிரண்டங்களும் ஒன்று சேர்வது. அவரின் தலைமுடியாக விளங்குவது பரிபூரணானந்தம். தேவர்கள் நாளும் பணியும் பெருமை பெற்றவர் குரு. வல்லவர் என்ற பெயர் உமக்கன்றி யாருக்குப் பொருந்தும் என்ற நிலையில் குருவின் பெருமையினால் ஆனந்தம் கொள்கிறார் மஸ்தான் சாகிபு.

**9. தன்னிலையினானந்தம்,**

இப்பாடலிலும் தன்னைப் பற்றி உரைக்கிறார் மஸ்தான் சாகிபு.

“நித்திரை தனிற் செத்த பொய்யான மெய்யுடலை
நிலையதென்றிடுவ தல்லால்
நிலையாத காயமென் றெண்ணவோர்
கனவினு நிசமாக யானறிகிலேன்
எத்தனை விதங்கடான் கற்கினும் கேட்கினும்
என்மனம் இணங்குதில்லையே”[65]

என்ற நிலையில் தன்னிரக்கம் கொள்கிறார் மஸ்தான் சாகிபு. நிலையில்லாத பொய்யுடலை மெய்யுடல் என்று எண்ணி அது எந்நாளும் இருப்பதாகக் கனவு

[65] மஸ்தான் சாகிபு பாடற்றிரட்டு, ப. 61

காண்பது பிழையல்லவா. எத்தனை கற்றாலும் கேட்டாலும் தன் மனம் நல்வழியில் செல்ல மறுக்கிறதே என்ற நிலையில் தன்னிரக்கம் இப்பாடலில் வெளிப்படுகிறது.

**10. காரணத்தினானந்தம்**

குருவாக இவரைப் பெற்றதற்கான காரணங்களைச் சொல்லி ஆனந்தப்படுகிறார் குணங்குடி மஸ்தான் சாகிபு. இப்பாடலில் இவரின் குரு செய்த அருஞ்செயல்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் குறிக்கப்படுகின்றன.

கடலிலற் கவிழ்ந்ததோர் கப்பலாலாத்துடன்

கடுகிவரவேய ழைததீர்

கம்பமுட னோடியே வந்ததோர் கப்பலைக்

கடிபூனை யாக்கி வைத்தீர்

குடிகொண்டு கர்ப்பவறை யுள்ளிருக் கையிலுமைக்

கொலை செய்ய வந்த முனியைக்

குதி கொண்டு வெளிச்சென்று விருதுண்டு கண்டுபின்

கூர்கர்ப்ப வறை புகுந்தீர்

பிடியிற் பிடித்துண்ட பிள்ளைசந்தியாசிகுடர்

பீறிவரவேயழைத்தீர்

பிரியம்வைத்தெனையான வெள்ளிடத்திந்த

விருபேரையும் தூதவிட்டீர்

நடனமிடு பாதார விந்தமென் சென்னியுற

நாட்செல்லுமோ சொல்லுமே

நற்குணங்குடி கொண்ட பாத்துஷா வான

குருநாதன் முகியிந்தீனே”[66]

என்னும் பாடலில் குரு ஆற்றிய பல சித்து விளையாட்டுகள் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன.

குருவானவர் கடலில் அழிந்துபோன கப்பலை மீண்டும் அதே பொலிவுடன் வரச்செய்தார். மேலும் கப்பல் ஒன்றைக் கடிக்கும் பூனையாக உருமாறச்செய்தார். கர்ப்பத்தில் தன்னை அழிக்க வந்த முனிவரை தாயின் கர்ப்பத்தில் இருந்து வெளியில் வந்து அந்த முனிவரை இரு துண்டாக்கி அழித்து மீளவும் கர்ப்பத்திற்குள் அடங்கினார். பிள்ளையைத் தின்ற சந்நியாசியின் வயிற்றைக் கிழித்து அப்பிள்ளையை மீட்டார். என்னை அழைத்துவர இருவரை அனுப்பியவர் இவ்வாறு பலபட பாராட்டித் தன் குருவினை ஒத்தவர் யாருமில்லை என்கிறார் குணங்குடி மஸ்தான் சாகிபு.

இவற்றில் இடம்பெறும் கடல் சார்ந்த நிகழ்ச்சிகள் தொண்டி அருகே நடைபெற்றிருக்க வேண்டும்.

**2. முகியத்தீன்சதகம்**

இது ஒரு சதக நூலாகும். இது நூறு பாடல்களைக் கொண்டது. இசுலாமிய சமயத்தை நடைமுறைப்படுத்திய நபியாரின் அருள்கேட்டு தன் குருவான முகியத்தீன் ஆண்டகையிடம் குறையிரந்து நின்ற நிலையில் இந்தப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

---

[66] மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு ப. 62

மேன்மைமிகு முகியத்தீன் ஆண்டகை (1077 - 1166) அவர்கள் மெய்ஞ்ஞானி ஆவார். இவர் உலக முஸ்லீம்கள் அனைவராலும் கொண்டாடப்படக் கூடியவர். இவர் "காதிரியா தரீகா" என்னும் ஆத்மீகபள்ளியை உருவாக்கியவர் ஆவார். இவரையே தன் குருவாகக் கொண்டார் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவருக்கு முகியத்தீன் என்பது இறைநேசரால் வழங்கப்பெற்ற சிறப்புப்பெயர் ஆகும்.

மஸ்தான் சாகிபு காதிரியா தரீகா வழிப்பட்டவர் என்பதை இவர் குறித்து எழுதப்பட்ட வாயுறை வாழ்த்துச் செய்யுள் வழி அறியமுடிகின்றத,

''ஊங்கு முரீதின் உயர்வழி அவரது

தாங்கும் காதிரியயாத் தன்னைக்

கண்ணோட்டம் இட்டு"[67]

என்ற பகுதியின்வழி அறியமுடிகின்றது.

இவ்வழியில் நின்ற குணங்குடி மஸ்தான் சாகிபு இவ்வழியின் முன்னவரான முகயிதின் அவர்களைத் தம் குருவாகக் கொண்டு முகையதீன் சதகம் பாடுகிறார்.

''அணைந்துயிர்க் குயிரா யலர் மடலவிழ்ந்த

வண்டிதா காரமா மலரின்

மணங்கமழ் நயினார் முகம்மது வென்னு

மௌனதேசிகனுடனெளையுந்

---

[67] வாயுறை வாழ்த்து

துணிந்துமா மாயைத் துணியெலாங் கிழித்துத்

துறவறந் தாங்கியா னாக்குங்

குணங்குடி வாழுமுகியிந்தீனாமென்

குருபதஞ் சிரித்தின் மேற்கோள்வோம்”[68]

மேற்குறித்த பாடல் வழியாக நயினார் முகம்மது என்னும் மோன குரு மஸ்தான் சாகிபுடன் இருந்தவர் என்ற குறிப்பு கிடைக்கின்றது. இருவருக்கும் மாயை என்னும் பெருந்துணியைக் கிழித்து, துறவறநெறியை அளித்தவர் முகியிந்தீன் ஆண்டகை என்பதைப் பெறமுடிகின்றது. இவரைப் போற்றி நூறு பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன.

இப்பாடல்களில் தன்னைப் பாவி என்றும், வம்பன் என்றும் தாழ்த்தி உரைக்கிறார். பலப் பல உவமைகளையும் இவர் இப்பாடல்களில் எடுத்துரைத்துள்ளார்.

“குரைஷித் குலக்கொழுந் தானமகு மூதுநபி

கொள்கையறியாத பாவி

கொரடா தனைக் கொண்டு மாட்டினும் அறிஞர்பின்

கூடிநடவாத பாவி

அரசிவிலை உலை அறியுமோவென்ற கதைபோல

வகலிற் படைத்த பாவி

[68] மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு ப 65

ஆருக்கு வைத்த கூழாயினும் சரிநாணி

லள்ளியடைக் கின்ற பாவி

விரிதருந் தொப்பையை விருப்பொடுவளர்க்கமேன்

மேலுமலைகிற பாவி

விதியற்ற பாவியடி யேளுமுமை நம்பினேன்

வேளையீதாளுதற்கே

வரிசைநபி வரிசை மிக உள்ள நீர் பின் றொடர

வள்ளல் ரசூல் வருகவே

வளரும் அருள்நிறை குணங்குடி வாழும் என்னிருங்கண்

மணியே முகியிதீனே"[69]

இப்பாடலில் வள்ளல் முகமது நபி அவர்களின் நாமம் குறிக்கப்பெற்று அவர் வழி செல்லாத தான் பாவி என்று உரைக்கிறார் குணங்குடி மஸ்தான். மேலும் முகியிதீன் அவரின் வழி வந்த ரசூல் என்றும் குறிப்பிடுகிறார். வயிறு வளர்ப்பதையே குறியாகக் கொ்ணடு உயிரினங்கள் இயங்கும் இழிநிலையச் சுட்டு இதிலிருந்து மாற வழியினைக் குணங்குடி மஸ்தான் சாகிபு கேட்கின்றார்.

மேலும் இப்பாடலின் நிறைவுப்பகுதி தனக்கு மீட்சி கிடைப்பது எப:போது என்று ஏங்கிய வண்ணம் பாடப்பெற்றுள்ளது.

---

[69] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப.143

**3. அகத்தீசன் சதகம்**

அகத்தீசர சதகம் என்பது அகத்தில் உள்ள ஈசனாகிய கடவுள் என்று பொருள் ெள்ள வேண்டும். இவர் பற்றி நூறு பாடல்களைக் கொண்டது இந்தச் சதகம் இந்நூறு பாடல்களும் சிறு சிறு தலைப்புகளின் கீழ் தரப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

1. குருவருள்நிலை
2. தவநிலை,
3. துறவுநிலை,
4. நியமநிநலை,
5. வளிநிலை,
6. தொகைநிலை,
7. பொறைநிலை,
8. காட்சிநிலை,
9. தியானநிலை,
10. சமாதிநிலை

என்ற பத்துப் பகுதிகளை உடையது அகத்தீசன் சதகம் என்பதாகும். இதில் சமாதி நிலை அடைவதற்கான வழிநிலைகள் படிப்படியாகக் காட்டப்பெற்றுள்ளன.

இச்சதகத்தில் குணங்குடி என்பது ஒரு குறியீட்டுப் பொருளில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

“குணங்குடி யாரநற்குணங்குடி யோங்கக்

கொடுகோடென் அடிக்கடி குணங்குங்

குணங்குடியார் துர்க்குணங்குடி போகக்

குணமெலாந் திரண்டருள பரப்பிக்

குணங்குடி யேறிக் குறைவற நிறைந்து

குணக்கலான மெய்ஞ்ஞானக்

குணங்குடி வாழு மகத்தீசனாமென்

குருபதம் சிரத்தின்மேற்கொள்வோம்"[70]

என்னும் பாடலில் குணங்குடி என்பது குறியீட்டுப் பொருளில் பயன்படுத்தப்பெற்றுள்ளது. தீக்குணங்கள் கூடி நிற்கும் தன்னிடம் நற்குணங்கள் குடி கொண்டு துர்க்குணங்கள் ஓடச்செய்யும் படி என் நெஞ்சில் வாழ்கின்ற அகத்தீசன் பாதம் பணிவோம் என்ற இப்பாடலில் குணங்குடி என்பது ஊரின் பெயராக மட்டும் இல்லாமல் நல்ல குணங்களின் குடி என்ற குறியீட்டு நிலையிலும் அமைகின்றது.

தாயனைய இன்பந் தனைத்தந்து தந்துகை

தழுவிநின் றருள் புரியவுந்

தந்தைதா யுந்தானே யாகவு மிருந்தெனைத்

தற்காத்து னருள்பு ரியவுஞ்

சேயென் றிரங்கியணை காலியின் கன்றெனச்

சீராட அருள்பு ரியவுஞ்

[70] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, ப. 180

செங்கீரை யாடுசிறு மதலைபோற் கொஞ்சிநான்

செல்வமிட அருள்பு ரியவும்

பாயுமடை கால்கண்டு கரைபுரள வருமதிப்

பால்கொடுத் தருள்பு ரியவும்

பக்குவத் தோடுமவு னத்தொட்டி லுக்குட்

படுக்கவைத் தருள்பு ரியவும்

வாயுவைக் கட்டவுந் தவராஜ சிங்கமே

வரவேண்டும் மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத்தீசனே

மவுனதே சிகநா தனே.

என்பது இச்சதகத்தின் முதற் பாடலாகும். இதில் தாய் போல் அணைத்து, அருள் பாலூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார் மஸ்தான் சாகிபு.

இப்பாடல்களிலும் கடல் சார்ந்த செய்திகள் அமைகின்றன.

‘கங்கற்ற வாழாழி வங்கத்தை யொத்தெனை

கரையேற்றி அருள்புரியவும்

கையைக் கொடுக்கவும் கையைப் பிடிக்கவும்

கைக்கொண்டு அருள்புரியவுஞ்

சங்கை தரு சங்கத்தை நீக்கவுஞ் சங்கைதரு

சமுகம்வைத் தருள் புரியவும்

தட்டாத நிஷ்டைமீ திஷ்டமொடிருத்தவுந்

தன்மயம் மருள் புரியுவும்

பொங்கும் செழுஞ்சுடர் பொருந்துகர்ப் பூரமது

போனின்ற தருள் புரியவும்

பொன்டியும் வாழியுன் புண்ணியமும் வாழிபரி

பூரணா வருள் புரியவும்

மங்களந் தங்குமெய்த் தவராஜ சிங்கமே

வரவேண்டுமென்ற னருகே

மாகுணங்குடி வாழு மென்னகத் தீசனே

மவுன தேசிக நாதனே”[71]

என்ற பாடலில் கரைகாணாத கப்பலைக் கரையேற்றுதல் போல எனக்குக் கைகொடுத்து உதவவேண்டும் என்றும் என்னை ஆள்விப்பாயா என்ற சந்தேகத்தைத் தீர்த்துச் சந்தேகமற்ற கூட்டத்துடன் சேர்க்க வேண்டும் என்றும் குணங்குடி மஸ்தான் சாகிபு வேண்டுகிறார். இவ்வகையில் தொண்டி கடற்கரை சார்ந்த நகரம் என்பதால்

[71] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற்திரட்டு, பக் 200-201

அது குறித்த சிந்தனைகள் பல குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களிடம் காணப்படுவதாக உள்ளது.

இவ்வாறு ஆதி முதல் சாமாதிநிலை ஈறாய் உள்ள படிநிலைகளைக் காட்டி விளக்கவதாக இச்சதகம் விளங்குகிறது.

## 4. பல்வகைப் பாடல்கள்

மகமூது நபியாண்டவரை முன்வைத்து,

1. சுகானுபவமுறதுதித்தல்,
2. தவமே பெறவேண்டுமெனல்,
3. குறையிரங்கி உரைத்தல்
4. வானருள்
5. பெற்றோர் மனநிலை உரைத்தல்,
6. ஆனந்தகளிப்பு

ஆகிய தலைப்புகளில் பாடல்களை மஸ்தான் சாய்பு படைத்துள்ளார்.

இப்பகுதிகளில் இருந்து ஒரு பாடல் பின்வருமாறு.

"மூல முகம்மது முப்பாழ் முகம்மது மோனமுள்ள
பாலமுகம்மது பத்தியுள்ளோர்களும் பாய்ந்தெடுக்கும்
வேலு முகம்மது வேதாந்த மூல விளக்குடைய
கோலு முகம்மது குன்றாக் குணங்குடி கொண்டவர்க்கே"[72]

[72] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற் திரட்டு, ப.309

குணங்குடியில் இருப்பவர் மூல முகம்மது. அவரே முப்பாழாகவும் இருக்கிறார். மோன நிலை எய்துவதற்கான பாலமாகவும் இருப்பவர் அவரே. பக்தியுள்ளோர் பாய்ந்து எடுக்கத்தக்க வேலாக பாதுகாப்புப் பொருளாக இருப்பதும் முகம்மது. மூல விளக்கின் கோலாக இருப்பது முகம்மது என்று முகம்மதுவின் புகழ் பாடுகிறது தவமே பெறவேண்டும் என்ற பகுதி

"கொடிகட்டிக் கொண்டெழு கோடி-தனங்

குவித்தந்த மகிழ்ச்சியாற் கூத்துக ளாடி

கெடுபுத்தி யுடையோரைக் கூடி-யானுங்

கெட்டலையாமலே கெதிபெற நாடி

இரக்கத் துணிந்துகொண் டேனே- எனக்

கிருக்குங் குறைமுழுதும் நிகழ்த்திக்கொண் டேனே."

என்ற ˙பாடலில் இவரின் ஆனந்தக்களிப்பு வெளிப்படுகிறது. கெடுமதி கொண்டோருடன் இணைந்து கெட்டு அலையாமல் கெதி பெற இறைவனை நாடி வருவதாக இதனுள் குறிப்பிடுகிறார் மஸ்தான் சாகிபு.

**5. கண்ணிகள்**

மக்களுக்கு எளிதில் சென்று அடையும் வண்ணம் ஞானக் கருத்துகளைக் கண்ணி வடிவில் படைத்து மொழிகின்றார் மஸ்தான் சாகிபு அவர்கள். குணங்குடி மஸ்தான் சாகிபு பாடிய கண்ணிகள் மாணவர்க்குப் பாடமாக அறிமுகம் செய்யப்படுகிறது. இவை சமரச நோக்கு உடையனவாகும்.

1. நிராமயக்கண்ணி,
2. பராபரக்கண்ணி,
3. றகுமான்கண்ணி,
4. எக்காலக்கண்ணி,
5. கண்மணிமாலைக் கண்ணி,
6. மனோன்மணிகண்ணி,
7. நந்தீஸ்வரக்கண்ணி

என்ற பாடல்களையும் இவர் பாடியுள்ளார். இவ்வற்றில் சில சான்றுக்குப் பின்வரும் நிலையில் காட்டப்பெறுகின்றது.

"ஆதி முதலே யகண்டபரி பூரணமென்று
ஓதுங் குணங்குடி கொண்டோனே நிராமயமே!
தேசிகனா னென்றே திருநடன மாடுகின்ற
வாசாம கோசரமே வாழி நிராமயமே!"

என்ற நிலையில் நிராமயக் கண்ணி அமைகின்றது. ஆதி முதல் அகண்ட பரிபூரணமாக விளங்குபவர் குணங்குடி கொணடது நிராமயம்

"மெய்தொழவு மேலும் மேலும்நந்தி கேஸ்வரனைக்
கைதொழு வுங்கனவு கண்டேன் மனோன்மணியே!
கோப்பாக கவும்உனையான் கொண்டாடிப் பாடவும்நீ
காப்பாக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே!"

என்பது மனோன்மணிக் கண்ணியில் அமைந்த கண்ணிகள் ஆகும். இறைவன் தனக்குக் காப்பாக அமைவான் என்ற கனவினை மனோன்மணிக் கண்ணியில் மஸ்தான் சாகிபு கண்டுள்ளார்.

நந்தீஸர் கண்ணி என்பது ஐம்பத்தோரு கண்ணிகளை உடையது. அகத்து ஈசர் மாதிரி இதுவும் நம் ஈசர் நந்தீசர் ஆகின்றார்.

ஆதியந்தங் கடந்தவுமை யாளருள் நாதாந்தச்

சோதியந்தங் கடந்தசெழுஞ் சுடரேநந் தீஸ்வரனே

முடியடியாய் நின்றநடு மூல மணிவிளக்கே

அடிமுடியாய் நின்றநடு அணையேநந் தீஸ்வரனே

என்ற கண்ணிகள் இதனுள் அமைந்துள்ளன.

**கீர்த்தனைகள்**

குணங்குடி மஸ்தான் சாகிபு கர்நாடக இசை சார்ந்த கீர்த்தனைகளையும் பாடியுள்ளார். இவை மனதிற்கும், செவிகளுக்கும் இனிமை பயப்பனவாக விளங்குகின்றன.

புதுப்பானை தன்னையுங் கரிப்பானை யாக்குவார்

பொன்னான மேனியும் போக்குவார் சோதி

மிப்போலிவர் முகம் வாடுபோலாக

வாலைப்பரவததைப் போக்குவார் சோதி

முதுகிற் கூனுமாக்கிக் கோலுங்கை கொடுத்துங்கள்

மூர்க்கமெல்லாமறப் போக்குவார் இவண்

கதி கெட்டா கிழாரி என்று புறந்திண்ணையிற்

கடத்திவதைத்துயிரையும் போக்குவார் அந்தச்

சதிகேடருறவைத்தான னீக்கினால் - பர

கதிதருகுணங்குடி வாய்க்குமோ

தாய்மார்களே பாவி சொல்வதைத்தான் சற்றுந்

தள்ளாமற் கேட்டுக்கொள்வீர் [73]

இவ்வாறு ஞான நிலையில் நின்று அருள்சுரக்கும் பாடல்களைப் பாடியுள்ளார் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள்.

தொண்டி சார்ந்த இலக்கிய வளங்களுள் இவருடையவை மிகவும் குறிக்கத்தக்கவையாகும்.

இவரின் பெருமையை இவர் மேல் திருத்தணிகை சரவணப் பெருமாளையர் பாடிய நான்மணி மாலைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு.

வாயினாற் பலநூல் வகைதெரிந் துரைத்துங்

[73] குணங்குடி மஸ்தான் சாகிபு பாடற் திரட்டு, ப. 449

காயமேல் வெண்பொடி கவினுலம் பூசியுஞ்

செய்யகல் லாடையைத் திகழ்ந்திட உடுததுஞ்

துய்ய சடைமுடி துதைதர முடித்துத்

தண்டுக மண்டலஞ் சால்புறத் தாங்கியு

மண்டல மிசைவிரி மான்றோலி னிருந்தும்

பலர்புலச் சூறையிற் படுசிறு துரும்பென

விடர்கெழு மனத்தரா யிரு◌்க்கின் றனர்பலர்

நெளிதிரைக் கடல்சூழ் நெடு◌்ம்பெரும் புவிமிசை

அளிவளர் குணங்குடி யானெனு மமல

சாற்று மச்சாதனந் தானொன் றிலாமலும்

போற்று முனதருள் பொருந்திய ஒருசிலர்

ஒருதன தியல்புணர் திருவினை யகற்றி

மூவா சைத்திற மேவாது விடுத்து

நாற்கதி நணுகுறா மேற்கதி விரும்பி

ஐம்பொறிக் கெதிர்வற வெம்புல னடக்கி

அறுசம யங்களி னெறிநிலை தேறி

எழுபிறப் பிகந்ததென் விழுமிய செருக்கிற்

பத்தியாற் படரெலா மொருவி

நித்தியா நந்த நிலையரா யினரே”[74]

என்ற பாடலில் வேடம் தரித்து பொய்த்துறவியாவதைவிட குணங்குடி நாமம் சொல்லி வாழ்ந்தால் நலம் பெறலாம் என்பது சரவணப் பெருமாள் ஐயரின் நான்மணி மாலை தரும் கருத்தாகும்.

**மோன குரு நயினார் முகம்மது**

இவர் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களுடன் இணைந்து வாழ்ந்தவராக மஸ்தான் சாகிபு அவர்களால் முகியதீன் சதகத்தில் குறிப்பிடப்படுகிறார். மோன நிலை என்பது மௌனநிலையாகும். இவரைப் பற்றிய பல குறிப்புகள் இன்னும் அறியப்படவேண்டிய நிலையில் உள்ளது.

**தொண்டி மோனகுரு மஸ்தான் சாகிபு** (1865 - 1919)

தொண்டி என்ற ஊர்ப்பெயருடன் அறியப்படுபவர் மோனகுரு மஸ்தான் சாகிபு ஆவார். இவர் கருவிலே திருவுடையவர். ஏழு வயதில் வாய் பேசா நிலை பெற்றார். இதன் காரணமாக ஊமைப்பிள்ளை என்று அழைக்கப்பெற்றார்.

இளம் வயதில் துறவு மேற்கொண்ட இவர், நாற்பது நாட்கள் தனித்திருந்து தியானம் மேற்கொண்டார். பின்னர் சிக்கந்தர் மலையிலும், பிரான் மலையிலும், மலேசியாவிலுள்ள கொடிமலையிலுழ், இலங்கையில் உள்ள ஆதம் மலையிலும், த.ஃ.ப்தர் ஜெய்லானியிலும் தவிமிருந்தார்.

---

74 திருத்தணிகை சரவணப் பெருமாளையர், குணங்குடியார் நான்மணி மாலை, பாடல்எண். 8

பின்னர் சாமிநாதன் செட்டியார், சுப்பிரமணியன்செட்டியார் ஆகியோர் தொண்டியின் கடற்கரைக்கு அருகில் கட்டிக்கொடுத்த மடத்தில் அமர்ந்து அருளுரை வழங்கினார்.[75] இவர் யாரிடமும் பேசாது தம் கருத்துகளைப் பாடலாக எழுதி வைத்துள்ளார்.

"தொண்டி மேனாகுரு செய்கு மஸ்தான் சாகிபு அவர்கள் சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பெரும்புலவரான பிச்சை இபுறாகிம் புலவரவர்கள் இலக்கணமிலக்கியம் இயையப் பார்வையிட்டுத் தர திருப்பாடற்றிரட்டு என்ற தலைப்பில் 1933 இல் சாது பொன்னம்பல சுவாமிகள் அச்சிட்டுள்ளர். 611 பாடல்கள் இச்சிறு நூல் கையடக்கமாக அழகிய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது"[76] என்று இவர் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இந்நூல் தற்போது கிடைத்திலது

**தொண்டி அப்பா**

இவரின் இயர் பெயர் அபூபக்கர் வலியுல்லா என்பதாதும். இவரை மக்கள் தொண்டி அப்பா, அல்ஆரிபு பில்லாஹி, குதுபுஸ் ஸமான் என்று பல பெயர்களில் அழைக்கின்றனர்.

இவர் கீழக்கரை இறைநேசர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர். இவரின் பெற்றோர் முகியித்தீன் ஆவார். இவரின் தாய் முகம்மது உம்மா ஆவார். இவரின் பாட்டனார் நெய்னா முகம்மது ஆவார். இருவரும் கீழக்கரையில் வாழ்ந்த ஞானிகள் ஆவர். இவர் , ஹிஜ்ரி 1130-ம் ஆண்டு பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் தேர்ந்தார்.

---

[75] https://marhummuslim.wordpress.com/category/islamart/page/9/

[76] மணவை முஸ்தபா, தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், ப. 208

இவர் தொண்டியைச் சேர்ந்த மாமுனா லெப்பை என்பவரின் குடும்பத்தில் மணம் புரிந்துகொண்டார.

இவர் பல சித்து விளையாடல்களைச் செய்துள்ளார். இவர் அடிக்கடி நாகூர் சென்று அங்கிருந்து ஞானி சாகுல் ஹமீது நாயகரைச் சந்தித்து வந்தார். அப்போது அவர் சில சித்துகள் செய்ததைக் கணடவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

நாகூர் தர்காவில் இருந்த விதானத்துச் சங்கிலி ஒன்றினை யாரும் தொட இயலாது, இறைநேசர்களால் மட்டமே தொட இயலும் என்ற நிலையில் தொண்டி அப்பா அவர்கள் கரங்கள் நீட்ட அச்சங்கிலி தானாகவே அவரின் கைகளுக்குள் வந்து அடங்கியது என்ற சித்தினைக் கீழக்கரைக் கவிஞர் கல்வத்து நாயகம் தன் சதக்கத்துல்லா அப்பா சரிதம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

“எங்கும் இலங்கிய சங்கிலி தான்
நீர் ஏந்திக்கை நீட்டிடத் தாழ்ந்ததுவே ஊர்
அங்கும் புகழ்தங்கப் பொங்கும் பெரியோர்
அபூபக்கர் ஷெய்கான குதுபுஸ் ஸமான”[77]

என்ற நிலையில் இவரின் சிறப்பு பெயர் சுட்டியே உரைக்கப்பெறுகிறது. மேலும் இவர் பிரெஞ்ச கவர்னரிடமிருந்து நாகூர் தர்காவிற்கு வந்து சேர வேண்டிய பாதுகைகளைப் பெற்றுத்தந்தார் எனவும், கர்நாடக நவாப்பிற்கும், சேதுபதி அரசர்க்கும் பகை நீங்கி நட்பு மலர ஆவன செய்தார் என்றும் இவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் கிடைக்கின்றன. இவரை

[77] தி. இந்து தமிழ் நாளிதழ், 14,4,2014

வரமுந்து பெரியோர்கள் வாழ்த்தும் இறைநேசர்

மகாராஜ தவமாரும் மணல்மேடு வாசர்

அரவிந்தத் தாள்மலரும் அதிகப் பிரகாசர்

அபூபக்கர் ஷெய்கான குதுபுஸ்ஸமான்

என்று புலவர்கள் போற்றியுள்ளனர்.

இறைநேசர் ஷெய்கு அபூபக்கர் ஹிஜ்ரி 1208-ஆம் ஆண்டு ரபியுல் ஆகிர் மாதம் பிறை 11 அன்று தன் எழுபத்தெட்டாம் ஆண்டில் மறைந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்ட தொண்டி மணல்மேடு பகுதியில் நவாபு ஒரு கட்டிடத்தை எழுப்பினார். பிறகு கீழக்கரை வள்ளல் ஹபீபு முகம்மது மரைக்காயர் தர்காவின் வெளிப்புறத்தை விரிவுபடுத்திக் கட்டினார். தற்பொழுது அது தொண்டி அப்பா தர்கா எனப்படுகிறது.

இவ்வகையில் பற்பல இசுலாமியப் பெரியோர்கள் வாழ்ந்த இடமாக தொண்டி விளங்குகிறது.

***<u>தற்கால இலக்கியவாதிகள்</u>***

தொண்டியில் பிறந்து பல்வேறு ஊர்களில் வாழும் படைப்பாளர்களும் தொண்டி சார் படைப்பாற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தொண்டியில் கல்வி சிறந்த குடும்பமாக மு.றா. வகையினர், கிழக்குத் தெரு புலவர் குடும்பம், பாண்டித்யம் மிக்க வா.மு. முகம்மது நெய்னார் சாகிபு அவர்களின் புதல்வர்கள் ஹைதர் அலி, ஜமால் முகம்மது (கவிஞர் குணங்குடிதாசன்) ரசூல்

முகைதீன், ஒய்சுல் கர்ணை போன்றவர்கள் குறிக்கத்தக்கவர்கள். இவர்களின் வாரிசுகளும் இன்றும் கல்வியாளர்களாய்த் திகழ்கின்றனர்.

நால்வரின் மருமகனார் பந்தே நவாஸ் பள்ளியாசிரியர், ஒய்சுல் கருணையின் புதல்வி நசீமா பானு எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியை. இவர்கள் குணங்குடி மஸ்தானின் தாயாதிகள். முனைவர் நசீமா பானு சென்னை, ஆழ்வார்பேட்டையில் வசித்துவருகிறார். இவர் இஸ்லாமிய தமிழிலக்கியக் கழகத்தின் மகளிர் பிரிவுத் துணைத்தலைவியாக விளங்கினார். இவர் சென்னை ஜஸ்டிஸ் பசீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் 2002ல் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

2011ல் மேத்திங்களில் மலேசியாவில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் இவர் பேராளராகப் பங்கேற்றார். பொதிகைத் தொலைக் காட்சியில் எதிரும் புதிரும் நிகழ்ச்சியைச் சிலகாலம் நடத்தியரும் இவரே ஆவார். இவர் நல்லாசிரியர் விருது பெற்றவர்.

**முகவை முத்தூஸ், தொண்டி**

தினமணி, தினத்தந்தி, தமிழ் இந்து போன்றவற்றில் எழுதி வரும் இவர், இணையத்திலும் எழுதி வருகிறார். இவரின் கவிதைகள், கதைகள் வெளிவந்து இவரை அடையாளப்படுத்தி நிற்கின்றன.

இவரின் கவிதை ஒன்று

“ இனி கவலையில்லை!

எவ்வளவு துன்பம் வந்தாலும்

கவலையில்லை

எதிர்நீச்சல் போடுவோருக்கு!

எவ்வளவு ஆழம் வந்தாலும்

கவலையில்லை

நீரில் மிதக்கும் பூக்களுக்கு!

எவ்வளவு இன்பம் வந்தாலும்

கவலையில்லை

சலனமில்லா மனிதர்களுக்கு!

எவ்வளவு ஏற்ற - இறக்கம் வந்தாலும்

கவலையில்லை

நடுநிலையோடு அணுகுவோருக்கு!

எவ்வளவு செல்வம் வந்தாலும்

கவலையில்லை

வள்ளல் தன்மை கொண்டோருக்கு!

எவ்வளவு நஷ்டம் வந்தாலும்

கவலையில்லை’

நேரெதிர் எண்ணம் கொண்டவர்களுக்கு!

எவ்வளவு பேரிடிகள் வந்தாலும்

கவலையில்லை

எதையும் தாங்கும் இதயம் கொண்டோருக்கு!

ஆம் மனிதா...

எது வரினும்

சகலமும் கடந்து சாதனை செய்...

இது உனக்கான சோதனை என நினை...

வெற்றி உனதே![78]

என்பது இவரின் கவிதையாகும்.

இவ்வாறு தொடர்ந்து இலக்கியவாதிகளால் தொண்டி இலக்கியச் செழுமைபெற்று வந்துள்ளது. ஞானத்தைத் தேடி நிற்கும் மனித குலத்திற்குக் குணங்குடியாரின் பாடல்கள் ஞானவெள்ளம் அளிப்பனவாகும்.

## தொகுப்புரை

தொண்டி பல்வேறு புலவர்கள் வாழ்ந்த பகுதியாக விளங்குகின்றது. குறிப்பாக குணங்குடி மஸ்தான் சாகிபு தொண்டியில் சில காலம் தங்கியிருந்துள்ளார்.அவரின் தாயார் ஊர் தொண்டியாகும்.இங்குள்ள வாழைத்தோப்பில் அவர் துறவியாக இருந்துள்ளார். அவரின் பாடல்கள் குணங்குடியார் பாடற் திரட்டு என்று

[78] http://www.newvarany.com/2017/02/02

தொகுக்கப்பெற்றுள்ளன. இப்பாடல்களில் கடல் சார்ந்த வாழ்க்கை முறை பல இடங்களில் சுட்டப்பெறுகிறது.

இவரைப் பற்றிப் பல புலவர்களும் இலக்கியங்ள் செய்துள்ளனர. திருத்தணிகை சரவணப் பெருமாளையர் என்பவர் நான்மணிமாலை ஒன்றை இவர்மீது பாடியுள்ளார.

இவரைத்தொடர்ந்து மோன குரு மஸ்தான் சாகிபு என்பவர் பேசாநிலையில் அறுநூறுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளர். இவரின் நினைவு ஊமைப்பிள்ளை அவுலியாவாகத் தற்போது வணங்கப்பெற்றுவருகிறது.

இவர்கள் தவிர தொண்டியப்பா என்பவரும் இலக்கியவாதியாகக் கருதத்தக்கவர். தற்காலத்திலும் தொண்டி பல்வேறு எழுத்தாளர்களைப் பெற்றுள்ளது.

# முடிவுகள்

**“தொண்டியின் வரலாறு மற்றும் நாட்டுப்புற வளங்களும், இலக்கிய வளங்களும்”** என்ற தலைப்பில் செய்யப்பெற்ற இவ்வாய்வுத்திட்டத்தின் வழியாகப் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

1. தொண்டி என்ற நகர் சேரர் நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் அமைந்திருக்கிறது. தற்போது கேரளப் பகுதியான கோழிக்கோடு அருகில் உள்ள கடலுண்டி என்னும் ஊர் சேரர் காலத் தொண்டியாகக் கொள்ளத்தக்கது. இது ஒரு துறைமுக நகரம். பாண்டியரின் தொண்டி கிழக்கில் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது. இந்நகருக்குத் தொண்டி என்ற பெயரே நிலைத்துள்ளது.

2. கீழத் திசைத் தொண்டி என்பது பாண்டியர் ஆண்ட தொண்டி நகரமாகும். இதனைத் தென்றலுடனும், நெல்லுடனும் இணைத்துச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

3. சிலப்பதிகாரம், இறையனார் அகப்பொருள், பாண்டிக்கோவை, யாப்பருங்கலக்காரிகை போன்றவற்றில் கீழ்த்திசை தொண்டி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இந்நகரில் கடல் வணிகம் நடைபெற்றதாகக் குறிக்கப்படுகிறது.

4. மருதுபாண்டியர்கள் கைக்களான் குளத்தின் மதகு கட்டித்தந்த நிலையில் அவர்களின் ஆடசிக்கு இப்பகுதி உட்பட்டிருந்தது என்பது உறுதியாகின்றது.

5. கீழவளவு மலையில் காணப்படும் தமிழி கல்வெட்டில் தொண்டியைச் சார்ந்தவர் அங்குச் சமணர்களுக்கு படுக்கை அமைத்துத் தந்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

6. தொண்டியம்மன் கோயில் மேட்டில் பல அகழ்வாய்வுகள் நடத்தப்பெற்று, சோழர், நாயக்கர் காலக் காசுகள் சேகரிக்கப்பெற்றுள்ளன. மேலும் சுட்ட செங்கல், மணிகள் போன்றனவும் கிடைத்துள்ளன. இவை தொண்டி நகரின் சங்ககாலப் பழமையை உறுதி செய்வனவாகும்.

7. தொண்டியில் பல்வேறு நாட்டுப்புற கலை வடிவங்கள் இருந்துள்ளன. அவை தற்பொழுது தேய்நிலையைப் பெற்றுள்ளன.

8. இங்குள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில், உந்தி பூத்த பெருமாள் கோயில், தொண்டியம்மன் கோயில் போன்றன பழமை வாய்ந்த கோயில்கள் ஆகும். இக்கோயில்கள் எழுந்த வரலாறு பற்றிய நாட்டுப்புறக் கதைகள் தொண்டியின் தெய்வீகச் சிறப்பினைக் காட்டுவனவாக உள்ளன. தொண்டி மிகச் சிறந்த கட்டங்களை உடையதாகக் கொள்ளப்படுகின்றது. காயத்திரி கட்டம் என்பது ஒரு காலத்தில் இங்கு இருந்த சிறந்த துறைகளுள் ஒன்றாகும்.

9. சத்ய தேவதை தொண்டியம்மனாக இங்கு விளங்குகிறாள் என்ற கருத்தும் வாய்மொழி வழியாக வழங்கி வருகிறது. இதற்குச் சான்றாக தர்மதேவதை சத்திரம் ஒன்றும் தொண்டியில் அமைந்துள்ளது.

10. அம்பாப் பாடல்களில் கடவுள் சார்ந்த பாடல்கள் இன்னமும் தொண்டியில் பாடப்பெற்று வருகின்றன. அதில் கங்கா தேவி, தொண்டியம்மன் போன்ற குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

11. இராமாயண ஒயில் இங்கு ஆடப்பெற்றுள்ளது. தற்போது அவ்வாடலின் சில பாடல்கள் கிடைக்கின்றன.

12. தாலாட்டுப் பாடல்களிலும் தொண்டியின் பெருமை பேசப்பட்டுள்ளது. தொண்டி முத்துக்குளிக்கும் துறைமுகமாக விளங்கியிருக்கவேண்டும். இன் காரணமாக நாட்டுப்புறத்தாய் தன் குழந்தையைத் தொண்டி முத்தே என்று பாராட்டுகிறாள்.

13. 1964 ஆம் ஆண்டின் புயல் அழிவு, யாழ்ப்பாணத்திற்கு வணிகம் செய்யச் சென்று உடன் திரும்பும் நடைமுறை போன்றன மீனவ மக்களின் எண்ணத்தில் இன்னமும் உள்ளன.

14. தொண்டி இலக்கியவாணர்கள் மிகுந்த ஊராக உள்ளது. குணங்குடி மஸ்தான் சாகிபு படைத்த பாடல்கள் அனைத்தும் தத்துவத் தேடலைத தருவன. இவரின் பரம்பரையினர் இன்னமும் படைப்புத் துறையில் சிறப்புற்று விளங்குகின்றனர்.

15. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் சீடர்கள் அவரைப் பற்றிப் ப்ல பனுவல்கள் பாடியுள்ளனர். அவையும் தொண்டிக்குப் பெருமை சேர்ப்பனவே ஆகும்.

16. மோனகுரு மஸ்தான் சாகிபு என்பவரும் தேர்ந்த ஞானவாதியாகத் திகழ்ந்துள்ளார்.

17. தற்காலத்திலும் தொண்டி பல இலக்கிய வாணர்களைப் பெற்றச் சிறந்து வருகிறது.

18. இவ்வகையில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாகத் தொண்டி நகரம் தன் வரலாற்றைப் பெற்று உள்ளது என்பதும் இந்நகரில் நாட்டுப்புற, இலக்கிய வளங்கள் பல உள்ளன என்பதும் பொதுகவான முடிவாகின்றது.


# பின்னிணைப்பு-1

## வரைபடங்கள்

## சேரர் தொண்டியின் வரைபடம்




## பாண்டியரின் தொண்டி வரைபடம்



# பின்னிணைப்பு 1.அ.

## புகைப்படங்கள்


### அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில் நுழைவாயில்





### அருள்தரு சிவகாமி அம்மன் கருவறை விமானம்



**அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில் இராஜகோபுரம்**



**அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில் கருவறை விமானம்**



அருள்மிகு சிதம்பரேஸ்வரர் கோயில் உட்புறத் தோற்றம்



அருள்மிகு உந்த பூத்த பெருமாள் கோயில் நுழைவாயில்


அருள்மிகு ஸ்ரீதேவி பூமாதேவி சமேத
உந்தி பூத்த பெருமாள் திருக்கோவில்
K.T.R.ஜுவல்லரி,
ஸ்ரீ ராமானுஜர்
ஆஞ்சநேயர்

## தொண்டி அம்மன் கோயில்






## இசுலாமிய வழிபாட்டு இடங்கள்

### மேலப் பள்ளிவாசல்



கடற்கரை பள்ளிவாசல்



தொண்டி அப்பா தர்கா



## இசுலாமியப் பெரியவர் நினைவு கோரி



# குணங்குடி மஸ்தான் சாகிபு






## அரசால் கட்டப்பெற்றுள்ள தொண்டி மீன் பிடி தளம்



## தொண்டி கடற்கரை



## தொண்டி மீன் பிடி தளத்தின் தோற்றம்




## தொண்டியில் உள்ள வானிலை ஆராய்ச்சி மையம்



அழகப்பா பல்கலைக்கழகத்தின் கடலியல் சார் பட்டப் படிப்பு மையம்



தர்ம தேவதை சத்திரம்



## கைக்கிளான் குளம்



## சத்திய தர்மச்சாலை



# களஆய்வின்போது



## பின்னிணைப்பு -2

## தகவலாளிகளின் பட்டியல்

| எண் | பெயரும் ஊரும் | வயது | பாலினம் | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | கருப்பையா, புதுக்குடி | 67 | ஆண் | விவசாயம் |
| 2. | சண்முகம், தொண்டி | 55 | ஆண் | பெட்டிக்கடை வியாபாரம் |
| 3 | தொண்டியம்மாள், புதுக்குடி | 73 | பெண் | மீன்கடை வியாபாரம் |
| 4 | செல்வவேந்திரன், புதுக்குடி | 65 | ஆண் | மீனவர் |
| 5 | கோபி, மகாசக்திபுரம் | 70 | ஆண் | மீனவர் |
| 6 | அய்யாக்கண்ணு, மகாசக்திபுரம் | 69 | ஆண் | மீனவர் |
| 7 | பொன்ராக்கு, மகாசக்திபுரம் | 68 | ஆண் | மீனவர் |
| 8. | வள்ளி, தொண்டி | 58 | ஆண் | குடும்பத்தலைவி |
| 9. | நாகராஜன் | 48 | ஆண் | அர்ச்சகர் |
| 10. | அப்துல் மைதீன் காதர் | 56 | ஆண் | சொந்தத்தொழில் |
| 11. | முத்துக்கருப்பன், தேவகோட்டை | 44 | ஆண் | தர்மதேவதை அன்னதானச் சத்திரப் பொறுப்பாளர்களில் ஒருவர் |

பின்னிணைப்பு-3

தொண்டி பற்றிய அகழாய்வு அறிக்கையின் ஆங்கில வடிவம்

# Excavations of Archaeological sites in Tamilnadu

**(1969-1995)**

Editor

**T.S.SRIDHAR, IAS,**

Special Commissioner of Archaeology

**Department of Archaeology**

**Government of Tamilnadu, Chennai**

**2004**

“ஓங்கிரும் பரப்பின்
வங்க ஈட்டத்துக் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொருகருப்பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலோடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழா காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசு”

“Onkirum parappin
Vanga Iittattut Thondiyor itta
Ahilum tuhilum aramum vasamum
Torukaruppuramum sumanthudan vantha
Kondalodu puhuntu komahan kudal
Venkan neduvel vilvizha kanum
Pankuni muyakkatup paniyarasu”

Adiyarukku Nallar, in his commentary on *Silappadikaram* mentions “Thondiyor” as the Chola lineage. But this identification is not feasible and *Silappadikaram* has no further source for it. The word ‘Thondiyor’ must have referred to the Pandyas only. This is evident from the verses of *Silappadikaram,* which refer to the wind of the eastern region that entered into the

"மீனவன் தொண்டி "Minavan Thondi"

நறையாற்று...வேல்கொண்ட கோன் தொண்டி
Narayarru....Velkonda kon Thondi"

மாறன்... தொண்டி கானல்" Maran....Thondi kanal"

*Kalaviyarkarihai* refers to "Mannan Madurakan Thondi"[5]. A verse in the *Yapperunkalakkarihai Urai* calls the port city as "Varagunan Thondi". Varguna Pandya seems to have reigned during the 9th century CE. *Nandikkalambaham* praises the Pallava king Nandivarma III for his conquest of Thondi[6].

Though it is an exaggerated version it provides a clue to presume that this port might have flourished as a strategic place between the age of *Silappadikaram* and 9th century CE. There were constant conflicts among the Pandya, Ceylonese and the Chola rulers. During this time Thondi became the centre of action for these rivals. It is said that the king of Ceylon captured Thondi and then moved towards Madurai. The Arppakkam inscription mentions that the Chola army was able to drive out the Ceylonese army in the battle, which took place at Thondi[7].

capital of the Pandyas. It may not be acceptable to presume that the wind of the Chola country entered into the Pandya capital. From this, one can infer that the port of Thondi, in the east coast, must have flourished, as an important place even during the 3rd to 4th Centuries CE; there is no evidence to believe that this port was in existence prior to this period.

During the Sangam age there were two important ports of the Pandyas, which had trade contacts with the foreigners. They were Alagankulam and Korkai. The first one was located south of Thondi at the confluence of the river Vaigai with the sea and the second one was at the mouth of the river Tamiraparani in Tuticorin district. When these ports began to loose their importance, Thondi might have become an important port in the Tiruvadani Taluk of the present Ramanathapuram District.

The commentary on *Irayanar Ahapporul* alludes to one category of literature called *Pandikkovai,* which speaks about the familiar relationship of the Pandya ruler Nedumaran, who reigned in the 7th Century CE. It is also identifies Thondi, in the east coast, as a Pandya port[(4)].

During the 12th, 13th and 14th centuries CE at the time of the later Pandya rule, Thondi seems to have had trade contacts with the eastern countries. This is evident from the discovery of Chinese celadon wares in this region. During the Vijayanagara Nayak rule Thondi became a part of the Madurai Nayak territory and subsequently came under the control of the Setupatis of Ramnad, Zamindars of Sivaganga and the British administration. An epigraphy, found at Thondi, refers to the dominant position of the Marudhu brothers of Sivaganga in that region[8]. At the time of the British occupation many goods were transported from Burma through the port of Thondi. The Nagarattar of Nattukkottai imported Burma teak through this port. There were passenger ship transport, with a capacity of taking 200 passengers, between Thondi and Ceylon[9]. Thondi seems to have lost its significance after the emergence of Tuticorin port and the extension of railway line to Dhanushkodi in 1914. Today it is a small village unmindful of its past glory.

Thondi is located on the south of Rameswaram in the "Sethu Markkam". It is situated 115 kilometers east of Madurai. Thondi means `Katarkali'. It lies adjacent to the estuary and hence the name Thondi. There are references

to Thondi, in the Sangam works, as `Kanalanthondi'. It means a place, that is cut off and separated by the sea[10]. Later Pandya inscriptions found in the Siva temple at Thondi and Kaikkalankulam refer to this place as Thondi alias Pavithiramanickappatinam, which means pure and chaste monarch, Rajaraja I (as one of his title). It is presumed that this place seems to have gained much importance during the Chola rule. Kaikkalankulam (tank) of Thondi is referred to in an inscription of Virapandya as `Kalikanakkulam'. There is a sluice in this tank and an inscription found here which mentions that the Marudhu brothers in 1795 CE set up the sluice.

**EXCAVATION**

In 1980, the excavation was conducted to locate the historical Thondi which was mentioned in the post Sangam literatures with that of Thondi, the east coast. The excavation brought to light plenty of potteries of the Middle Ages. A trial trench with a measurement 4 x 4 meters was made in the "Thondiyamman Koil Mound" located to the north of the village.

This Trench had a depth of 1.50 metres; there are no different types of layers found in the Trench. The layer of sea soil alone was noticed. There was no antiquity found beneath 1.50 metres depth. Potteries of the medieval alone were collected from the Trench. There were no black and red ware potteries of megalithic period found in the excavation. A copper coin of Rajaraja-I, and two copper coins of Nayak were also collected form the Trench. A round shaped terracotta ear ornament, a hip-hop and a coral jewel with black and green stone beads were also found in the trench.

The excavation at Thondi revealed that this place was an important habitation site as well as a flourishing port during the medieval times. The coins of Rajaraja-I and the Nayak rulers found here indicate the continuation of the trade activities of the people.

**REFERENCES**

1) *Narrinai* V.8, 18, 195; *Ingurunuru* 171, 172, 180; *Kurunthogai* V-128, 210, 238, *Pathirrupathu* V-88 ; *Ahananuru* V-10, 60, 290; *Purananuru* V-17, 48.

2) S.Vaiyapuri pillai, Ilakkiyathipam (Tamil), Pari Nilayam, Chennai, 1956, p.164

3) *Silapathikaram,* Kha.14.Lt.106-112

4) *Pandikkovai, Iraiyanar Ahapporulurai* V.11-14.

5) *Kalaviyarkarikai,* p. 96, 147.

6) *Nandikkalampakam* V-38.

7) South Indian Inscriptions Vol.VI No.456.

8) S.Raju, 'Maruthupandyar Inscriptions at Thondi (Tamil), Avanam No.Two, April, 1992, p.16.

9) Tamilnadu District Gazetteers - Ramanathapuram District, pp 992 - 993.

10) Ilakkiyathipam, p .165


**PARTICIPANTS**

1. Thiru M.Chandramoorthy, the then Registering officer, Madurai,

2. Thiru V.Vedhachalam, Curator, Madurai

**Under the guidance of**

Dr.R.Nagaswamy, the then Director of Archaeology

## துணைநூற் பட்டியல்

**அருணாசலம், மு., இராஜாவரதராஜா**, தமிழ் இலக்கியவரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி, 2012

**அறிவராஜ்.ந., ஆ.குமார்,** தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், பாவைபப்ளிகேசன்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு 2014

**இராகவையங்கார்.மு.(**தொ.ஆ) பெருந்தொகை, 1936

**இராசமாணிக்கனார்.மா**, தமிழகக் கலையும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2011

**இராசா.கி.முனைவர்**, தமிழர் இலக்கிய வரலாறு, அன்னை நிலையம், திருச்சி, 2006

**இராதா செல்லப்பன்**, சமயமும் தத்துவமும், தமிழியல் துறை. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. 2008

**இராமசாமி.அ**., தமிழ் நாட்டு வரலாறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 20016 ஏழாம்பதிப்பு

**இளம்பூரணனார்**, (உ.ஆ), தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2010

**கதிர்முருகு**, (உ.ஆ) நந்திக் கலம்பகம், சீதை பதிப்பகம், சென்னை, 2009

**கமால், எஸ்.எம், நா முகமது ஷெரீப்** இராமநாதபுர மாவட்டம் சில குறிப்புகள், லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி, 1984

**கமால்,எஸ்.எம்.,** சேதுபதி மன்னர் வரலாறு, சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம், 2003

**கமால்,எஸ்.எம்**., முஸ்லீம்களும் தமிழகமும், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம், 2004

**கமால். எஸ்.எம்**., நபிகள் நாயகம் வழியில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம், 2005

சாமிநாதையர் உ.வே. (உ.ஆ) குறுந்தொகை, உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்;, சென்னை

**சிங்காரவேலு முதலியார்.** ஆ. அபிதானசிந்தாமணி, சீதை பதிப்பகம், சென்னை, 2008

**சிவலிங்கனார்.ஆ.,** தமிழ் இலக்கண உணர்வுகள், கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, 2017

**சீனிச்சாமி.துரை**., திணைக்கோட்பாடு, நியு செஞ்சுரி புக்அவுஸ் பி.லிம்ட், சென்னை, 2016

**சுதமதி.இரா., முனைவர்.**, (உ.ஆ) அகப்பொருள் விளக்கம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012

**சுந்தரர்**, ஏழாம் திருமுறை, உமா பதிப்பகம்,சென்னை, 2011

**சுப்பிரமணிய தேசிகர்** (உ, ஆ), தண்டியலங்காரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1973

**சுப்பிரமணியன். ச.வே**. (உ.ஆ) நற்றிணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2010

**சுப்பிரமணியன். ச.வே.** சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி3 , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010

**சுப்பிரமணியன். ச.வே**. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010

**சுப்பிரமணியன்.ச.வே.** (தொ.ஆ), யாப்பருங்கலக்காரிகை, மெய்யப்பன் பதிப்பகம்,சென்னை, 2010

**சுப்பிரமணியன்.ச.வே**. (ப.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலம் முழுவதும், குறிப்பு விளக்கங்களுடன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2007

**சுப்பிரமணியன்.ச.வே.** சங்கஇலக்கியம் மூலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006

**தமிழண்ணல்**, நோக்கு, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, 1985

**தமிழண்ணல்**, புதிய நோக்கில் தமிழ் இலக்கியவரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2013முப்பதாம் பதிப்பு

**நக்கீரர்,** இறையனார் அகப்பொருள், பவானந்தம் பிள்ளை பதிப்பு,சாரதா பதிப்பகம், சென்னை, 2010

**பரிமணம்.அ.மா.** (உரையாசிரியர்) பதிற்றுப்பத்து, கோவிலூர் மடாலயம், கோவிலூர், ஏப்ரல் 2003

**பாலசுப்பிரமணியன், சிற்பி, சேதுபதி.சொ,** தமிழ்இலக்கியவரலாறு, கவிதா பப்ளிகேசன்ஸ், சென்னை, முதற்பதிப்பு டிசம்பர் 2010

**புலியூர்க் கேசிகன்**, (உ. ஆ) சிலப்பதிகாரம்,பாரி நிலையம், சென்னை, 1958

**மயிலை சீனி, வெங்கடசாமி**, சங்ககாலத் தமிழக வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2011

**முத்தமிழ்ச் செல்வன்**, தமிழக வரலாறு, பாரிநிலையம், சென்னை, 2001

**முஸ்தபா.மணவை.**, (தொ.ஆ), தமிழில் இசுலாமிய மெய்ஞான இலக்கியங்கள், மீரா பவுண்டேஷன் வெளியீடு, சென்னை,

**வறீதையா கான்ஸ்தந்தின்,** தொண்டி குறிப்புகள், கடல்வெளி, சென்னை, 2017

**வேங்கடசாமி**, மயிலை சீனி. ஆய்வுக்களஞ்சியம் தொகுதி 4 இளங்கணி பதிப்பகம், சென்னை, 2010

**வேங்கடராம சுவாமி**. சற்குரு., தொண்டி திருத்தல மகிமை, ஸ்ரீஆதி பகவத் அகஸ்தியர் பப்ளிகேசன்ஸ், சென்னை, 2017

**ஸ்ரீசந்திரன்,** ஜெ ஐம்பெருங்காப்பியங்கள் (ஒன்று முதல் ஐந்து பாகங்கள்)தமிழ்நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2007

**ஸ்ரீசந்திரன்**, ஜெ நாலடியார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு 2000

**ஸ்ரீசந்திரன், ஜெ.** (உரையாசிரியர்) சிலப்பதிகாரம், தமிழ்நிலையம், சென்னை ஐந்தாம் பதிப்பு 2007

**ஆங்கில நூல்**

Sridhar. t.s. , Excavation of archealogical sights in tamilnadu, Department of Archaeology, Government of Tamilnadu, 2004

**இணைய தள முகவரிகள்**

http://globalparavar.org

http://www.heritagevembaru.org/

http://www.noolaham.org/wiki/index.php

https://ta.wikipedia.org/wiki

https://ta.wikipedia.org/wiki

V1deo-thf.blogspot.in

www.tnarch.gov.in

Fernando Joseph Dev Anandh, http://www.heritagevembaru.org/2018/08/blog-post_26.html

http://www.kamakoti.org/tamil/adi1.htm